வித்தியா

VIDYA



யா / உருப்பிராய்
இந்துக் கல்லூரி

J/URUMPIRAI
HINDU COLLEGE

2000

வற்றா வள நதியே !
வைர மழைத் துளியே !
வேரோடி விழுது விட வித்தியாவை
வாழ்த்தும்

விநாயகர் ஸ்ரோர்ஸ்

உங்களுக்குத் தேவையான
சகலவிதமான
மளிகைப் பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாட வேண்டிய இடம்

உரும்பிராய் வடக்கு
உரும்பிராய்

வித்தியா

VIDYA

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி

J/Urumpirai Hindu College

2000

உள்ளடக்கம்

1. கடவுள் வாழ்த்து
2. கல்லூரிக் கீதம்
3. அதிபரின் ஆசிச்செய்தி
4. வெளியீட்டுரை - பத்திராதிபர்
5. வித்தியா காலத்தின் கண்ணாடி (பா. அ. ச)
6. பழைய மாணவர் சங்கத்தின் பங்களிப்பு
7. இலண்டனிலிருந்து எம் கலைக் கோவிலுக்காக. . .
8. கனடா பழைய மாணவர் சங்கத்தின் வாழ்த்துரை
9. மலர் வெளியீட்டுக் குழு
10. மாணவர் ஆக்கங்கள் - தமிழ்
11. மாணவர் ஆக்கங்கள் - ஆங்கிலம்
12. பெரியோரின் ஆக்கங்கள்
13. அதிபரின் அறிக்கை

கடவுள் வாழ்த்து

"கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமம் ஆதலால்
கணபதி என்றிடக் கவலை தீருமே"

(நக்கீரதேவனார்)

கல்லூரித் தாய் வாழ்த்து

கடலோரக் காற்றே வந்து கற்பகனார் காலைத்தொட்டு
சஞ்சிகையாள் வித்யாவிற்கு சந்தனத்தைச் சாத்திப்பாடு.
அறுகோடு மலர் சேர்த்தேன் ஆனைமுகன் அருகிருக்கும்
உரும்பிராயின் இந்துவுக்கு ஒருகோடி வாழ்த்துப் பாடு.
பலாலிவீதிச் சாலையிது பக்கமது அரசு நிழல்
உத்தமி நீ கொலுவிருக்கும் உரும்பிராயோ என் மனசு
அதிபரொடு ஆசிரியர் மாணவர்கள் பெற்றோர்கள்
ஆளனிகள் சேனையம்மா அத்தனையும் புத்திரர்கள்
கல்லூரி மலரைத் தொட்டேன் கங்கையிலே நிலவைப் பார்த்தேன்.
சஞ்சிகையாள் வித்தியாவிற்கு நெஞ்சார வாழ்த்துக் கூறி,
சமரசமே எம்நோக்கு சமயநெறி எம் மார்க்கம்
சத்தியமே வெல்லும் பூமி வித்யா நீ வாழி நீடு.

இ. சத்தியதேவி
(சங்கீத ஆசிரியை)

கல்லூரிக் கீதம்

மலர் தலை உரும்பிராய் இந்துக் கல்லூரி
வான் புகழ் ஓங்கியே வாழ்க.
மெஞ்ஞான மன்றில் விளைஞானத் திருவை
விஞ்ஞானம் நல்கிட வாழ்க.
ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
உண்மையை மாணவர்த் குணர்த்து
மெய் மதா வாக்கியமாக
மெய்ப் பொருள் காணுவதறிவு
விளங்க நிரந்தரம் வாழ்க
மணிக்கொடி உரும்பிராய் மாநகர் எடுத்தே
வான் புகழ் ஓங்கியே வாழ்க
வாழ்க! வாழ்க! வாழ்க!
இந்துக் கல்லூரி வாழ்க,
எங்கள் கல்லூரி வாழ்க.

எங்கள் கல்லூரி அதிபர்



Mr. Appathurai Eswaranathan

B.Com (Hons) Dip-in-Ed

S.L.P.S

திரு. அப்பாத்துரை ஈஸ்வரநாதன்

வணிகமானி சிறப்பு (வகுப்புச் சித்தி)

பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா

இலங்கை அதிபர் சேவை

அதிபரின் ஆசிச் செய்தி

"இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்"

என்ற பரட்சிக்கவிஞர் பாரதியாரின் வாக்குக்கிணங்க மாணவரின் கல்வி ஆற்றலை, கற்கும்திறனை, கல்லூரியின் வரலாற்றை எடுத்து இயம்பிய "வித்தியா" நீண்டகால இடைவெளிக்குப்பின் இன்று மீண்டும் புதுப் பொலிவுடன் மலர்கின்றது என்பதை எண்ணும் போது, கல்லூரிச் சமூகமே பூரிப்படை கின்றது. இன்று வெளிவரும் "வித்தியா" சிறப்பாகவும், விரைவாகவும், கருத்துடனும் வெளிவர கல்லூரியின் அனைத்து சமூகத்தினரும் சிறப்பான ஒத்துழைப்பை நல்கியுள்ளனர். அவர்கள் யாவரும் பாராட்டுக்குரியவர்கள்.

"வித்தியா" கல்லூரியின் வரலாற்றையும், மாணவர்களது ஆக்கங்களையும், சான்றோர், பேராசிரியர்கள், வைத்திய கலாநிதிகள், பழைய மாணவர்கள், கல்லூரியின் அபிவிருத்திச் சங்கத்தினர், பழையமாணவர் சங்கத்தினர் போன்ற பலதரப்பட்டவர்களது கருத்துக்கள், கட்டுரைகள் போன்றனவற்றைச் சுமந்து நிற்பது காலத்தின் தேவையே.

இவ்வருடம் கற்றல் கற்பித்தல் பணிகளையும், பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்யும் பணிகளையும் சமாந்தரமாக எடுத்துச் செல்ல வேண்டிய பாரிய பொறுப்பு எமக்குண்டு. இப்பொறுப்புக் களை நன்கு திட்டமிட்டு உரிய வகையில் நிறைவேற்ற முயற்சித்துக் கொண்டிருக்கும் இவ்வேளை வித்தியா வெளிவருவது மிகவும் பொருத்தமானது.

"வித்தியா" புதுப்பொலிவுடன் வெளிவர என்னுடன் தோள் கொடுத்துதவிய மலர்க்குழுவினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆக்கங்களைத் தந்துதவிய பேரறிஞர்கள், அச்சகத்தினர், புகைப்படங்களைச் சிறப்பாக ஒழுங் கமைத்த கலைஞர்கள் யாவரையும் மனதாரப் பாராட்டி வித்தியா தொடர்ந்து வருடாவருடம் சிறப்பாக வெளிவரக் கற்பகவிநாயகர் திருவருளை வேண்டிப் பிரார்த்தித்து எனது ஆசிகளையும், நன்றிகளையும் தெரிவிக்கின்றேன்.

திரு. அ. நல்லரநாதன்
(அதிபர்)
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி
உரும்பிராய்



ஆசிரியர் உள்ளத்திலிருந்து . . .

கல்வி உலகில் தனக்கென ஓர் தனித்துவத்துடன் சகல துறைகளிலும் மிளிர்ந்த இவ்வரி வாலயம் கடந்த சில வருடங்களாக ஒரு பின்னடைவு நிலையில் இருந்ததை கல்வி உலகோர் அறிவார்கள்.

புத்தாயிரத்தில் மீண்டும் புறுத்தே புதுப்பொலிவு பெற்றுப் பூரிப்பாயிருக்கும் இவள் தன்னக வளர்ச்சிச் செயற்பாடுகளில் ஒன்றாகிய வித்தியா மூலம் தன்னைக் காட்ட முயற்சிக்கின்றாள். கடந்த காலங்களிலும் வித்தியா உங்கள் கரங்களில் தவழ்ந்தவள். ஆனால் 1986க்குப் பின் இவளின் உருவாக்கம் சற்றுத் தடைப்பட்டுவிட்டது. புத்தாயிரத்தில் மீண்டும் பூரிப்பாக வருகின்றாள்.

தம் சிறார்களின் மனக் கருவூலங்களையும் துறை சார்ந்த பல பெரியார்களின் கருத்துக் களையும் தாங்கி நிற்பதுடன் தன்னால் வளர்க்கப்பட்ட வெளிநாட்டு வாசிகளின் வளங்களைப் பெற்று அவருள்ளங்களின் உந்துதல்களையும் தாங்கி மிளிர்கின்றாள்.

ஒரு நிறுவனத்தால் வெளியிடப்படும் மலர் என்பது ஏனைய மலர்களிலும் வித்தியாசமானது. இம்மலர் அந்நிறுவனத்தின் சரித்திரத்தைச் சான்று பகர்கின்ற ஆவணப்படுத்தப்பட்ட அடையாளச் சின்னமாக மிளிரும்.

எனவே இம்மலரில் மாணவர் ஆசிரியர் ஆக்கங்கள் ஓரளவுக்கேனும் எம்மனைவரினதும் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளின் தரத்தைக் காட்டுகின்ற, இங்கு நடைபெற்றவற்றை வெளிக் கொணர்கின்ற ஒரு ஆவணமாக கல்வியுலகோர் கணிப்பிடக் கூடியனவாக இருக்கும் என்பதுடன் இவை காலத்தின் கண்ணாடியாகவும் மிளிரும்.

ஒரு மலருக்குரிய கவிதை, கட்டுரை, சிறுகதை துணுக்குகள், நாடகங்கள் என்ற அம்சங்களைத் தாங்கி ஏதோ இவ்வளவிற்கேனும் விரலுக்குத் தக்க வீக்கம் என்பதற்கிணங்க வெளிவந்திருக்கின்றாள். எங்கள் வித்தியாவின் வருகையை அன்போடு வரவேற்று இவள் வரும் காலத்திலும் உருவாக அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என அன்போடும் உரிமையோடும் உங்களைக் கேட்டுக் கொண்டு அவளை உங்கள் கரங்களில் தவழ வைக்கின்றோம்.

இவளின் உருவாக்கத்திற்கு உதவிய அறிஞர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் வித்தியாவை அழகாக அச்சிட்டு உதவிய கத்தோலிக்க அச்சகத்தாருக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி. ப. ஆனந்தராசா

உப அதிபர்

செல்வி. கு. பொன்னுத்துரை
B.A (Hons) Dip-in-Ed
S. L. T. S 2 - I

பகுதித் தலைவர்

திருமதி. சு. மயில்வாகனம்
Science Trd
S. L. T. S 2 - I

எமது கல்லூரி ஆசிரியர் குழாம்



நிற்பவர்கள் இடமிருந்து வலம் : திரு. அ. ஜெயதாசன், திரு. ம. இ. நரேந்திரா, திரு. து. ஸ்ரீகனகசபேசன், திரு. க. திருமாலழகன், திரு. அ. உதயகுமார், திரு. டா. பாக்கியரத்தினம், திரு. இ. ஞானேஸ்வரன், திரு. சி. செந்தில்நாதன், திருமதி. க. முருகையா, செல்வி. இ. விஜயானந்தி, திருமதி. வ. சண்முகசுந்தரமூர்த்தி, திருமதி. ச. பகீரதன், திருமதி. க. காங்கேசன், திருமதி. த. திருக்குமரன், திருமதி. க. விஜயகுமார், செல்வி. பா. செல்வரத்தினம், செல்வி. இ. சத்தியதேவி, திருமதி. ச. கலைலச்செல்வன்

அமர்ந்திருப்போர் இடமிருந்து வலம் : திருமதி. சு. ஜெயரத்தினம், திருமதி. சி. மகேந்திரன், செல்வி. கு. பொன்னுத்துரை (உப அதிபர்), திரு. மு. வாமதேவன், திரு. அ. ஈஸ்வரநாதன் (அதிபர்), திரு. சி. இராசேந்திரம், திருமதி. சு. மயில்வாகனம் (பகுதித் தலைவர்), திருமதி. ப. ஆனந்தராசா, திருமதி. சு. சுந்தரம்

வித்தியா காலத்தின் கண்ணாடி

தூய்மையான உள்ளத்திலே நல்ல எண்ணங்கள் தோன்றும். நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களைத் தோற்றுவிக்கும். நூல்கள், சஞ்சிகைகள் மூலம் மக்கள் மனதில் புதிய புதிய எண்ணங்கள் உற்பத்தியாகின்றன. நூல்கள், சஞ்சிகைகள் காலத்தின் கண்ணாடிகள். புகழ் பூத்த உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் காலத்தின் கண்ணாடியாக விளங்கியது "வித்தியா" என்னும் பெயர் தாங்கிய சஞ்சிகையாகும். குறித்த சஞ்சிகை பல ஆண்டுகளாக வெளி வரவில்லையே என்று உரும்பிராய் இந்துக் கல்லூரிச் சமூகம் கவலையுற்றிருந்த வேளையில், புத்தாயிரமாம் ஆண்டில் வித்தியா வெளிவர இருக்கிறது என்ற செய்தி பெருமகிழ்வைத் தருகின்றது. வித்தியா வெளியீட்டின் பொருட்டு உழைத்துவரும் அதிபர் அவர்களும், அவரைத் தலைவராகக் கொண்டியங்கும் மலர்க் குழுவினரும் மிகவும் பாராட்டுக்குரியவர்கள். அனைவருக்கும் உளங் கனிந்த எமது நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.

எமது கல்லூரியின் பாரம்பரியத்தை நாம் நோக்கும்போது இக்கல்லூரி முதன் முதல் பொடியார் என்பவரது புகையிலைக் கொட்டிலில் முதல் மாணவனான சிதம்பரப்பிள்ளை விசுவலிங்கம் அவர்களைக் கொண்டு திருவாளர் சின்னையா அவர்கள் ஆசிரியராக இருந்து கல்வியை உரும்பிராயில் ஆரம்பித்தார் எனவும், பின்னர் இவ்வகுப்பு திரு. பஞ்சலிங்கம் அவர்கள் பிறந்த செல்லப்பா மீனாட்சிப்பிள்ளை என்பவரது வீட்டு விறாந்தையில் நடைபெற்றது எனவும், இதனைத் தொடர்ந்து இந்துக்கல்லூரி அதிகார சபையின் பரிபாலனத்திற்குள் இப்பாடசாலையை இணைத்து, இன்று எமது கல்லூரி இருக்கும் இடத்தில் ஓர் ஓலைக் கொட்டிலை ஸ்தாபித்து பல மாணவர்களையும் இணைத்து திரு. வியாகேசர் என்பவரைத் தலைமை ஆசிரியராகக் கொண்டு 03.04.1911 இல் தொடங்கியதே உரும்பிராய் இந்துக் கல்லூரி என நாம் அறிகின்றோம். இக்கல்லூரி ஆரம்பித்து 89 ஆண்டுகள் பூர்த்தி செய்த இக்கால எல்லையில் இங்கு 21 அதிபர்கள் பணிபுரிந்து உள்ளமையும், ஒவ்வொரு அதிபரது காலத்திலும், ஒவ்வொரு வகையில் இக்கல்லூரி வளம் பெற்றதையும் இக் கல்லூரியின் வரலாற்றிலிருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.

முதலிலே திருவாளர்கள் சீதாராமர், ஸ்ரீநிவாசன், இவர்கள் தந்தையும் மகனும், ஒருவர் பின் ஒருவராக அதிபர்களாக இருந்த காலத்தில் ஆங்கிலக் கல்வியிலும் உதைபந்தாட்டம், கிரிக்கட் ஆகிய விளையாட்டுக்களிலும் இக்கல்லூரி சிறந்து விளங்கியது. இவர்களது காலத்தில் ஓலைக் கொட்டில்களே கூடுதலாக இருந்தமையையும் நாம் அறிவோம். அடுத்து திரு. அ. வைத்திலிங்கம் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் கல்லூரியில் மாணவர் எண்ணிக்கை மிகக் கூடுதலாக இருந்தது. கல்வியிலும் சிறந்து விளங்கியது. இன்று காணும் மாடிக் கட்டடங்களுக்கு வித்திட்ட வரும் இவரே. மலாயா சென்று எமது கல்லூரியின் பழைய மாணவர்களிடம் பணம் சேகரித்து வந்த பெருமையும் இவரையே சாரும். இவரது காலத்தில் கட்டப்பட்ட கட்டடத்திற்குப் பொன்விழா மண்டபம் எனவும் பெயர் சூட்டப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

திரு. இ. சிவானந்தன் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் இசை விழாக்கள் மூலமும், அன்றைய கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுப் பணத்திலும் சிறு பகுதியை தனது வல்லமையால் பெற்றும், மேல்மாடி '40' நீளக் கட்டடம் கட்டத் திட்டமும் வகுத்தார். இத்துடன் கல்லூரியின் விளையாட்டு மைதான சுற்றுமதிலை அமைக்கவும் முன்னின்றார். இவர் ஒரு சிறந்த நிருவாகியாக இருந்து, கல்லூரியின் வளர்ச்சிக்குப் பாடுபட்டமை குறிப்பிடத்தக்கது. இன்றும் எமது கல்லூரியில் கண்ணாக இருந்து வருவதையும் நாம் அறியக்கூடியதாக இருக்கிறது. இவரைத் தொடர்ந்து வந்த எமது ஊரவரான திரு. செ. சிவபாலன் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் கொத்தணி முறை அமுலில் இருந்தது. இவரே எமது பகுதி பாடசாலைகள் அனைத்திற்கும் கொத்தணி அதிபராக இருந்து செயற்பட்டார். யாழ் மாவட்டத்திலேயே மிகவும் சிறந்த இரசாயன கூடத்தை கட்டியுள்ள பெருமையும் இவரையே சாரும். இவரது காலத்தில் உடற் பயிற்சியில் எமது மாணவர்கள் இலங்கை ரீதியில் முதல் இடம் பெற்றமையும் பெருமையாகும்.

இதற்கு இவருடன் உழைத்த உடற்பயிற்சி ஆசிரியர் திரு. தம்பித்துரை அவர்களின் பெரும் முயற்சியும் போற்றுதற்குரியது. உதைபந்தாட்டத்திலும் முன்று அணிகளும் பிரசித்தி பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவர்களது வளர்ச்சியுடன், உரும்பிராய் இந்துக்கல்லூரியின் வளர்ச்சியே தனது வளர்ச்சி என்ற பெரு நோக்கில் செயற்பட்டு வந்தவர் கவிஞர். சே. ஐயாத்துரை ஆசிரியர் அவர்களே ஆவர். இவர் பல வருடங்களாக குறிப்பாக 35 வருடங்களுக்கு மேல் இக்கல்லூரியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளராகவும், அதைத் தொடர்ந்து 1977ஆம் ஆண்டுக்குப் பின் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் உதயமானது முதல் அவர் அமரராகும் வரை (1996) செயலாளராகவும் பணிபுரிந்துள்ளார். இவருடைய கால கட்டத்திலேயே ஓலைக் கொட்டில்கள் எல்லாம் மாடிக் கட்டடமாகியது. இவரது அயராத உழைப்பு இதற்கு வித்திட்டது. இவர் ஒரு செயல்வீரன். மழையானாலும் சரி, வெய்யிலானாலும் சரி நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் முடித்து வைப்பார். இவரைப் போல் ஒரு தன்னலமற்ற சேவகனை நான் கண்டதில்லை. இவர் ஸ்தாபகர் தின மலரிலே கல்லூரியின் ஆரம்ப வரலாறு என்னும் கட்டுரையை மிகவும் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் எழுதியுள்ளார். ஸ்தாபகர் தின விழாவை நடாத்த ஸ்தாபகரை இனங்காண பெருமையும் இவரையே சாரும். இப்படிப்பட்ட செயல் வீரனது திடீர் மரணம் எமது கல்லூரிக்கு ஒரு பேரிழப்பாகவே நான் கருதுகின்றேன். ஏனெனில் இப்பாடசாலையிலேயே மாணவனாகவும், பின் ஆசிரியராகவும், ஓய்வுபெற முன்னும் ஓய்வு பெற்ற பின்னும் இக்கல்லூரியின் அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராகவும் இருந்து உழைத்த ஒரு அனுபவசாலி. எம்மை எல்லாம் இன்று இப்படியான பொதுப் பணிகளுக்கு உழைக்க வழி காட்டியாக இருந்து ஊக்கமளித்து வளர்த்தவர் இவ்வாசானே ஆவார். இவரது ஆத்மா சாந்தியடைய மீண்டும் பிரார்த்திப்போமாக. அதிபர்களது வரிசையிலே 1990இல் திரு. சி. பாலசுப்பிரமணியம் அவர்கள் நியமனம் பெற்றார். இக்கல்லூரியின் பழைய மாணவன், நாம் இருவரும் ஒன்றாகவே உயர்தர வகுப்புவரை கல்வி பயின்றவர்கள் துடிப்பானவர், நினைத்ததைச் செய்து முடிப்பதில் ஆர்வம் கொண்டவர்.

எமது கல்லூரியில் 83 ஆண்டுகளாக நிறைவு பெறாது இருந்த தாபகர் தினத்தை முன்னெடுத்து 29.06.1994 இல் மலர் ஒன்று வெளியிட்டு நடாத்தி வைத்தார். இத்துடன் விளையாட்டு மைதானத்தில் குடிநீர் வசதி அற்றிருந்த வேளையில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபரை அணுகி அவரது ஒதுக்கீட்டு நிதி மூலம் குழாய் கிணறு நிறுவ 15 ஆயிரம் ரூபாவைப் பெற்று கிணறு தோண்டி தண்ணீர் கண்ட வேளையில், இடப்பெயர்வு ஏற்பட்டதை நாம் அறிவோம். இத்துடன் இன்றும் உரும்பிராய் இந்துக் கல்லூரி என்று பறைசாற்றிக் கொண்டிருக்கும் பெயர்ப் பலகையும் அவரது காலத்திலேயே இக்கல்லூரியின் ஆசிரியராய் இருந்த காலம் சென்ற பண்டிதர் இ. நவரத்தினக் குருக்கள் அவர்களால் திரை நீக்கம் செய்யப்பட்டது. இத்துடன் மைதான கிணற்றுக்கும் உரிய நிலையம் அமைத்து உதவியவரும் இக்குருக்களே ஆவார். திரு. பாலசுப்பிரமணியம் அதிபர் அவர்களது காலத்தில் உதைபந்தாட்டம், உடற்பயிற்சி ஆகியனவற்றில் எமது கல்லூரி முன்னணி வகித்ததை யாவரும் அறிவோம். இவர் இடப்பெயர்வு காரணமாக வன்னிப் பெருநிலம் சென்றமையால் 1996 ஆம் ஆண்டில் பிரதி அதிபராக இருந்த திரு. மா. சண்முகரத்தினம் அவர்கள் கல்லூரியைப் பொறுப்பேற்று நடாத்தினார். இவரது காலம் சோதனை நிரம்பிய காலமாகும். இடப்பெயர்வால் மக்கள் வெளிநாடுகளுக்கும், வெளி மாவட்டங்களுக்கும் சென்றார்கள். இடப்பெயர்வுக் காலத்தில் பாடசாலைக் கட்டடம் சேதம் அடைந்ததும், பல கல்விச் சாதனங்கள் சாணமால் போனதும் சேத முற்றும் இருந்தன. இவர் இவற்றை சீர் செய்து ஒரு நிலைக்குக் கொண்டுவர பல காலம் எடுத்தது.

இந்த நேரத்தில் எமது ஊரவரும் இக்கல்லூரியின் பழைய மாணவனும் இக்கல்லூரியில் ஆசிரியராகவும் கடமை புரிந்த திரு. அ. ஈஸ்வரநாதன் அவர்கள் 19.02.1999 இல் அதிபராக நியமனம் பெற்றார். பல இடர்களுக்கு முகம் கொடுத்து, கல்லூரியின் வளர்ச்சிக்கு, முழுமை அடையாமல் இருந்த பல வேலைகளை நிறைவு செய்ய வேண்டி இருந்தது. உதாரணமாக மைதானக் கிணறு, சுற்று மதில், கேற் திருத்தம் முதலியனவற்றை நிறைவு செய்தார். மாடிக் கட்டிடம் இடிந்து இருந்தது. அதற்கும் ஜேர்மன் குடியரசு தொழில்நுட்ப நிறுவனத்தாருடன் பலமுறை தொடர்பு கொண்டு அத்திருத்தத்தையும் நிறைவு செய்து இருக்கிறார். அத்துடன் மலசலகூட அமைப்பு, இதற்கும் (ஆண், பெண் இருபாலாருக்கும் வேறு, வேறு இடங்களில்) ஜேர்மன் குடியரசு நிறுவனத்தின் உதவியுடனும் நலன்விரும்பிகள், பெற்றோர், பழைய மாணவர்கள் ஆகியோரின் உதவியுடனும் நவீன வசதிகள் அமைந்த முறையில் கட்டி முடித்துள்ளார். பல அறைகளின் கதவுகள், ஜன்னல்கள், தளபாடங்கள் முதலியவற்றையும் திருத்தியுள்ளார். இதைவிட கல்லூரியின் வளர்ச்சிக்கு

பாடசாலை அபிவிருத்திச்சங்க நிர்வாக உறுப்பினர்கள்



நிற்பவர்கள் இடமிருந்து வலம் :

திரு. சி. செந்தில்நாதன், திரு. இ. ரகு, திருமதி. க. விஜயகுமார், திரு.வ.பேரின்பநாதன், திரு. பொ. காசிநாதன், திருமதி. டொமினிக் எழுந்தோற்றம், செல்வி. து. றொபேட்

இருப்பவர்கள் இடமிருந்து வலம் :

திரு. செ. தங்கராசா, திருமதி. ச. மயில்வாகனம், திரு. வை. கதிரவேலு (உப செயலாளர்), திரு. ச. ஏகாம்பரநாதன் (செயலாளர்), திரு. அ. ஈஸ்வரநாதன் (தலைவர்), திரு. அ. நல்ல தம்பி (உப தலைவர்), செல்வி. கு. பொன்னுத்துரை (உப தலைவர்), திருமதி. பு. கனகரத்தினம், திரு. சி. இராசேந்திரம் (பொருளாளர்)



பாடசாலை அபிவிருத்திச்சங்க நிர்வாக உறுப்பினர்கள்



நிற்பவர்கள் இடமிருந்து வலம் :

திரு. சி. செந்தில்நாதன், திரு. இ. ரகு, திருமதி. க. விஜயகுமார், திரு.வ.பேரின்பநாதன், திரு. பொ. காசிநாதன், திருமதி. டொமினிக் எழுந்தோற்றம், செல்வி. து. றொபேட்

இருப்பவர்கள் இடமிருந்து வலம் :

திரு. செ. தங்கராசா, திருமதி. ச. மயில்வாகனம், திரு. வை. கதிரவேலு (உப செயலாளர்), திரு. ச. ஏகாம்பரநாதன் (செயலாளர்), திரு. அ. ஈஸ்வரநாதன் (தலைவர்), திரு. அ. நல்ல தம்பி (உப தலைவர்), செல்வி. கு. பொன்னுத்துரை (உப தலைவர்), திருமதி. பு. கனகரத்தினம், திரு. சி. இராசேந்திரம் (பொருளாளர்)

இயன்றவரை ஊக்கம் அளித்து, இப்போ கல்லூரியின் மாணவர் தொகையையும், படிப்பையும் கூட்டியுள்ளார். உதாரணமாக கடந்த கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பு பெறுபேறுகளில் எமது கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் யாழ் மாவட்டத்தில் 8, 9 ஆவது நிலையை அடைந்துள்ளமை இதற்கு சான்று பகரும். இத்துடன் இன்றைய காலப்போக்கை உணர்ந்து இசைக் கருவி கணம் (Band Set) வாங்கியும் படப் பிரதி இயந்திரம், ஒலிபெருக்கி, கணனி முதலியனவற்றை வாங்கவும் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளார். இயங்காமல் இருந்த பழைய மாணவர் சங்கத்தை மீண்டும் இயங்கச் செய்து, அச்சங்கத்தின் முயற்சியால் லண்டன், கனடா ஆகிய நாடுகளிலுள்ள எமது பழைய மாணவர்களுடன் தொடர்புகொண்டு, அவர்கள் மூலம் பல உதவிகள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்லூரியின் பரிசளிப்பு விழா வருடா வருடம் சிறப்பாக நடைபெறுவதற்கு செதியாக வேண்டிய நிதியை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஊடாக உரும்பிராய் கிராமிய வங்கியில் முதலீடு செய்ய உதவியிருக்கும் திரு. பொ. குணசிங்கம், திருமதி. புவனேஸ்வரி கனகரத்தினம், திரு. திருமதி. சத்தியானந்தன் கமலா ஆகிய மூவரது சேவையையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பாராட்டுகிறது. இப்படியான நிதிக்கு பலரது ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம்.

இக்கல்லூரியின் பழைய மாணவரும் அபிவிருத்திச் சங்க உறுப்பினருமாகிய திரு. அ. நல்ல தம்பி, திரு. ம. பேரின்பநாதன், திரு. வை. கதிரவேலு, திருமதி பு கனகரத்தினம் ஆகியோர் பாடசாலையின் வளர்ச்சிக்கு மிகவும் உ தவி வருகிறார்கள். அண்மையில் வாத்தியக் கருவியைப் பெரு உதவியாக இருந்தவர் திரு. அ. நல்லதம்பி அவர்கள் ஆவார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க நடப்பு வருட நிர்வாக சபையின் விபரம் – 1999, 2000

தலைவர்
திரு. அ. ஈஸ்வரநாதன் (அதிபர்)

காரியதரிசி
திரு. ச. ஏகாம்பரநாதன்

பொருளாளர்
தி. எஸ். எஸ். இராசேந்திரம்

உப தலைவர்கள்
திரு. அ. நல்லதம்பி
செல்வி. கு. பொன்னுத்துரை

உப காரியதரிசி
திரு. வை. கதிரவேலு

நிர்வாக உறுப்பினர்கள்
திருமதி. பு. கனகரத்தினம்
திருமதி. செள. மயில்வாகனம்
திருமதி. க. விஜயகுமார்
திருமதி. புனிதவதி டொமினிக்
செல்வி. துவாரகா றொபேட்
திரு. ம. பேரின்பநாதன்
திரு. பொ. தாசிநாதன்
திரு. சி. கிருஸ்ணானந்தன்
திரு. த. தங்கராசா
திரு. டா. பாக்கியரத்தினம்
திரு. இராசநாயகம் ரகு
திரு. பொ. பேரின்பநாதன்

எமி பார்வையாளர்கள்
திரு. அ. நவரத்தினம்
திரு. சி. செந்தில்நாதன்

யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வியத்தகு முன்னேற்றம் கருதி நீண்டகாலமாக உழைத்துவரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தொடர்ந்தும் பாடசாலையின் வளர்ச்சி குறித்து தொண்டுபுரிவதற்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

திரு. ச. ஏகாம்பரநாதன் (ஜே.பி)
காரியதரிசி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
இந்துக் கல்லூரி, உரும்பிராய்

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பழைய மாணவர் சங்கத்தின் பங்களிப்பு

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் 1987 வரை பல வருடங்களாகத் திறம்பட இயங்கி இக் கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி இருக்கின்றது. தூர் அதிஷ்ட வசமாக எமது நாட்டில் 1987க்குப் பின்பு வரிசையாக நடந்தேறிய வன்செயல்கள் காரணமாகப் பழைய மாணவர் சங்கம் சுமார் 10 வருடங்களாக இயங்கவில்லை என்பதை மிகவும் வேதனையுடன் குறிப்பிட வேண்டி உள்ளது.

இருப்பினும் எமது தற்போதைய அதிபர் திரு. அ. ஈஸ்வரநாதனின் பெருமுயற்சியால் 18.7.99 அன்று பழைய மாணவர்களின் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு, புதிதாகச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அதிபர் மரபு வழித் தலைவராகவும் பின்வருவோர் உத்தியோகத்தர்களாகவும் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்

திரு. அ. ஈஸ்வரநாதன்

செயலாளர்

திரு. வி. சோமநாதன்

உப செயலாளர்

திரு. சி. கதிரவேலு

உப தலைவர்கள்

செ. இந்திரராசா

திரு. சி. கிருஷ்ணானந்தன்

திரு. அ. நல்லதம்பி

திரு. எம். டேவிட்ராஜா

செல்வி. கு. பொன்னுத்துரை

பொருளாளர்

திரு. செ. நாகரத்தினம்

நிர்வாக சபை உறுப்பினர்கள்

திரு. அ. இ. தர்மலிங்கம்

திரு. சி. சிவானந்தன்

திரு. பொ. காசிநாதன்

திரு. த. நடேசன்

திரு. பொ. நாகரத்தினம்

செல்வி. சுசீலா சாரங்கபாணி

திருமதி. பு. கனகரத்தினம்

திரு. கீதபொன்கலன்

திரு. எஸ். செல்லப்பா

திரு. த. செல்லத்துரை

திருமதி. வி. கமலவேணி

திரு. பொ. குணசிங்கம்

பாடசாலை பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர்கள்



நிற்பவர்கள் இடமிருந்து வலம் :

திருமதி. க. விஜயகுமார், செல்வி. சு. சாரங்கபாணி, திரு. கீதபொன்கலன், திரு. த. நடேசன், திரு. த. செல்லத்துரை, திரு. சி. கதிரவேலு (உப செயலாளர்), செல்வி கு. பொன்னுத்துரை (உப தலைவர்)

இருப்பவர்கள் இடமிருந்து வலம் :

திரு. சி. சிவானந்தன், திரு. ஆ. டேவிற்ராஜா (உப தலைவர்), திரு. வி. சோமநாதன் (செயலாளர்), வைத்தியகலாநிதி செ. இந்திரராஜா (உப தலைவர்), திரு. அ. ஈஸ்வரநாதன் (தலைவர்), திருமதி. பு. கனகரத்தினம், திரு. அ. நல்லதம்பி (உப தலைவர்), திரு. பொ. குணசிங்கம், திரு. செ. நாகரத்தினம் (பொருளாளர்)



எமது சங்கத்திற்குப் புதிதாக ஒரு யாப்பும் உருவாக்கப்பட்டு சில திருத்தங்களுடன் ஏகமன தாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த யாப்பில் சிறப்பம்சமாக உலகின் சகலபாகங்களிலும் உள்ள பழைய மாணவர்கள் எமது சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்ற வாசகம் சேர்க்கப்பட்டுள்ளது. இத னால் எமது சங்கம் உறுதியும் உலகளாவிய ரீதியில் வளர்ச்சியும் பெறுகின்றது. இதன் பொருட்டு ஐரோப்பிய நாடுகளுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்பட்டு பழைய மாணவர்கள் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதைப் பெருமகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பழைய மாணவர்கள் பலர் வெளிநாடுகளில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகின்றார் கள். இதனைக் கருத்திற் கொண்டு முதற்படியாக நாம் கனடா, லண்டன் ஆகிய நாடுகளில் இருக் கும் எமது பழைய மாணவர்களுடன் தொடர்பு கொண்டு அந்நாடுகளில் எமது பழைய மாணவர் சங்கத்தின் கிளைகளைப் புனரமைத்துள்ளோம்.

இதன் பயனாகக் கனடா வாழ் பழைய மாணவர்கள் எமது கல்லூரிக்குப் பல உதவிகளை வழங்கி வருகின்றனர்.

இவ் வரிசையில் எமது கொழும்பு பழைய மாணவர்களும் எமது கல்லூரிக்குப் பல உதவி களை வழங்கி வருவதுடன் கொழும்பில் எமது கல்லூரி பழைய மாணவர் சங்கக் கிளை ஒன்றை அமைப்பதற்கும் பெரு முயற்சி எடுத்து வருகின்றார்கள்.

கடந்த கால வன்செயல்களினால் சேதமுற்று எல்லா வளங்களையும் இழந்து தவிக்கும் எமது கல்லூரித் தாய் எல்லா நாடுகளிலும் வாழ்கின்ற தனது சேய்களின் உதவியுடன் வெகு விரைவில் புதுப் பொலிவு பெறுவாள் என நம்புவோமாக.

வாழ்க! வளர்க! உரும்பிராய் இந்துக் கல்லூரி

திரு. வி. சோமநாதன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
இந்துக் கல்லூரி
உரும்பிராய்



இலண்டனிலிருந்து எம் கலைக் கோவிலுக்காக . . .

அன்புக்குரிய தாயகம் வாழ் உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் அன்பு உள்ளங்களுக்கு எமது வணக்கங்கள் பல.

இலண்டனிலிருந்து ஒரு செய்தி எம்மிதழிற்கு தேவை எனக் கேட்ட வாசகம் கண்டு இன்புறுகின்றேன். எம்மினிய தமிழையும், கலை கலாச்சாரத்தையும், பண்போடு வாழ பல நல்ல பழக்க வழக்கங்களையும் எமக்குப் புகட்டி, இவ்வுலகில் எங்கு சென்றாலும் எல்லோராலும் நன்கு மதிக்கக்கூடிய அளவிற்கு எமக்குக் கல்வியறிவை ஊட்டி வளர்த்த எமது கோவிலை, கலைக் கூடத்தை எந்நாளும் மனக் கண்களிலே கண்டு, அதன் வளர்ச்சிக்காக ஆவன செய்யத் துடிக்கும் வேளையிலே, எமது செய்தியையும் அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தற்போதைய தாயக நிகழ்வுகளால் அகிலமெங்கும் நாம் சிதறி வாழ்ந்தபோதிலும் எமது இதயத்தில் ஆழமாகப் பதிந்துவிட்ட எமது பாடசாலையை நாம் ஒருபோதும் மறந்ததில்லை. இங்கே எமது பாடசாலையின் பெயரில் ஆரம்பித்த சங்கத்தின் வயது ஏழு. இங்குள்ள யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையில் (JSSA UK) 1999 நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் எமது பாடசாலை வீரர்கள் இறுதிப் போட்டிவரை சென்று இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தார்கள். இத்தோடு துடுப்பெடுத்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்ற போட்டிகளில் எப்போதும் பங்குபற்றிப் பாடசாலைக்குப் பெருமை சேர்க்கின்றார்கள்.

பாடசாலையின் பல பகுதிகள் புனரமைப்பற்று இருப்பதாக அறிகின்றோம். விரைவில் அதற்கான எமது பணிகளையும் நாம் செய்வோம். அவை எமது கடன். நிச்சயம் செய்வோம் என்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு. அவற்றை உங்களுக்கு விரைவில் அறியத் தருவோம்.

பிரிந்துவிட்ட பல நண்பர்கள், உறவுகளை எமது பாடசாலையின் பெயரால் மீண்டும் கடித மூலமாகவோ, வேறு ஊடகங்கள் மூலமாகவோ தொடர்பு கொள்ளும்போது உள்ளம் உவகை கொள்கின்றது. நேரில் சந்திப்பது போன்ற ஓர் உணர்வும் இதயத்திலே ஏற்படுகின்றது.

உங்கள் "வித்தியா" இனிதே மலர எமது இலண்டன் உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் எமது இனிய வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் கூறிக் கொள்கின்றேன்.

வளர்க உங்கள் சங்கம்! தொடர்க உங்கள் உறவு!
உயர்க எமது கல்லூரி!

எம். ரீ. செல்வராஜா
உ. இ. க. ப. மா. ச
உப தலைவர்

சஞ்சிகைக்கான வாழ்த்துரை

உரும்பிராய் இந்துக் கல்லூரி வெளியிடும் வித்தியா எனும் சஞ்சிகையில் கனடா வாழ் உ. இ. கல்லூரி பழைய மாணவர்கள் சங்க சார்பில் இச் சிறிய வாழ்த்துச் செய்தியை தெரிவிப் பதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம். கனடாவில் உ இ.க.ப.மா. சங்கம் 1995இல் ஸ்தாபிக்கப்பட்டு சென்ற 5வருடங்களாக மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றது. தமது கல்லூரியை மீண்டும் புனர மைத்து நல்ல தரத்திற்குக் கொண்டுவர சங்க அங்கத்தவர்கள் இதய சுத்தியு னும், ஆர்வத்து டனும் பாடுபட்டு வருகின்றனர்.

வருடா வருடம் விளையாட்டுப் போட்டியையும் ஒன்றுகூ லையும் ஒழுங்குசெய்து மாணவர்களி டையே ஒற்றுமையையும் நல்லெண்ணத்தையும் வளர்த்து வருகின்றோம். சங்கத்தினால் நடத்தப் பட்டுவரும் பொங்கல் விழா வருடா வருடம் ஒரு பாராட்டுக்குரிய நிகழ்ச்சியாக நடந்து வருகின்றது. இவ் விழாவின் போது பல தரமான கலைநிகழ்ச்சிகளைத் தயாரித்து அளித்து பாடசாலைக்குத் தேவைப்படும் நிதியையும் சேகரித்து வருகின்றோம். பாடசாலை அபிவிருத்திக்கு மட்டுமல்லாது, தமிழர் புனர் வாழ்விற்கும் மற்றும் இங்கு நடைபெறும் எழுச்சிப் போராட்டங்களிலும் எம்மாலான பங்களிப்பை (நிதியுதவி உட்பட) எமது சங்க மூலம் மிக ஆர்வமாகச் செய்துவருகின்றோம். நிர்வாக சபை அடிக்கடி கூடி பாடசாலை அபிவிருத்தி பற்றிய தேவைகளை மிக அக்கறையுடன் கலந்தாலோசித்து வருகின்றது.

ஒவ்வொரு ஒன்றுகூடலின்போதும், விழாக்களின் போதும் பாடசாலையின் இன்றைய பரிதாப நிலையை மிக உணர்ச்சிகரமாக பழைய மாணவர்களுக்கும், ஊரவர்களுக்கும் எடுத்துக் கூறி அவர்களின் உதவிகளை நல்குமாறு மிகப் பணிவாகக் கேட்டு வருகிறோம்.

உவ்விடமுள்ள பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை மற்றும் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலையை மீண்டும் புனரமைத்து, முன்னேற்ற எடுத்துவரும் முயற்சிகளை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக் களையும் தெரிவிக்கின்றோம்.

மற்றைய நாடுகளிலுமுள்ள பழைய மாணவர்களை முக்கியமாக இங்கிலாந்திலுள்ள பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் தொடர்புகொண்டு கல்லூரியை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய அவசியத்தையும் தேவையையும் வலியுறுத்தியுள்ளோம்.

பழைய மாணவர்களாகிய நாம் எமது கல்லூரியினை மீண்டும் கட்டியெழுப்ப எம்மாலான உதவிகளைச் செய்வோம் என்று கூறி எல்லோருக்கும் எமது அன்பான வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கனடா வாழ் உ.இ.க.ப.மா. சங்க சார்பில்
திருமதி மீனா தவரட்னம்.

வலி-கிழக்குப் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

யா / உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரிய - மாணவ சமூகத்தினர் வெளியிடும் "வித்தியா" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

புதிய கல்வித் திட்டத்தில் மாணவர்களின் ஆளுமையை உருவாக்கி வளர்ப்பதில் முக்கிய கவனம் கொடுக்கப்பட்டுள்ளது.

தனியே பள்ளிப் படிப்புடன் மாத்திரம் நின்று விடாது அவர்கள் பிற துறைகளிலும் இணைந்து கொள்வது இன்றைய நிலையில் மிகவும் இன்றியமையாதது.

அவ் வகையில் அவர்களின் ஆக்கத் திறனை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ள "வித்தியா" சஞ்சிகை வருங்காலத்திலும் மென்மேலும் சிறப்பாக வெளிவர ஆசிரியர்களின் தூண்டுகோலும் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றேன். சென்ற காலங்களில் ஏற்பட்டது போலன்றி, வருடா வருடம் இம்மலர் மலர எல்லாம் வல்ல இறைவன் அருளட்டும்.

க. கேதீஸ்வரன்
பிரதேச செயலகம்
கோப்பாய்

கனடா பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர்கள்



எமது கல்லூரியின் ஒழுக்கக் குழுவினர்



கோட்டக் கல்வி அதிகாரியின் வாழ்த்துரை

யா / உரும்பிராய் இந்துக் கல்லூரி நீண்ட இடைவெளிக்குப் பின்னர் "வித்தியா" என்னும் சஞ்சிகையை வெளியிடுவதற்கு முயற்சிகள் எடுத்துள்ளமைக்கு எனது பாராட்டுக்கள்.

இச் சஞ்சிகையானது மாணவர்களுக்கு ஏற்ற வகையில் பல்சுவையும் பொருந்தப் பெற்றதாய் அமைவதுடன் மாணவரின் கற்றலுக்கு வழிகாட்டும் ஏடாகவும் அவர்களின் ஆற்றலையும் திறனையும் வளர்க்கத் தூண்டுதலாக அமையும் வருடாந்த சஞ்சிகையாக வெளிவருவதையிட்டு கோப்பாய்க் கோட்டத்தின் சார்பில் அகமகிழ்கின்றேன்.

இவ் வித்தியா ஆனது வருடந்தோறும் தங்கு தடையின்றி வெளிவர இறைவனை வேண்டி நிற்பதோடு இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பாடசாலை நிர்வாகத்தினரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்
இ. சிவஞானசுந்தரம்
கோட்டக் கல்வி அதிகாரி
கோப்பாய்

வித்தியா சஞ்சிகை வெளியீட்டுக்குழு

திரு. ஆ. ஈஸ்வரநாதன் — அதிபர்
செல்வி. கு. பொன்னுத்துரை — பிரதி அதிபர்
திருமதி. ச. மயில்வாகனம் — பகுதித் தலைவர்
திருமதி. ப. ஆனந்தராசா — பொறுப்பாசிரியர்

ஆக்கங்கள் சேகரித்தல்

செல்வி. பா. செல்வரத்தினம்
திருமதி. சு. முகுந்தன்
திரு. து. சிறிகனகசபேசன்
திருமதி. க. காங்கேசன்
திருமதி. சு. ஜெயரத்தினம்
திருமதி. சு. சுந்தரம்
திருமதி. சி. மகேந்திரன்
திருமதி. க. முருகையா
திரு. மு. வாமதேவன்
செல்வி. மு. தயாநிதி
திரு. அ. உதயகுமார்
செல்வன். இ. டினேசன்
செல்வி. கி. கலைவாணி

அச்சுப் பிரதி சரிபார்த்தல்

திருமதி. வ. சண்முகசுந்தரமூர்த்தி
திருமதி. இ. புவனராஜகுகன்
திருமதி. ச. கலைச்செல்வன்
செல்வி. இ. விஜயானந்தி
செல்வி. இ. சத்தியதேவி
செல்வி. மா. வசந்தினி

அச்சகத் தொடர்பு

திரு. அ. ஜெயதாசன்
திரு. சி. செந்தில்நாதன்

சஞ்சிகை விநியோகம்

திரு. ம. இ. நரேந்திரா
திரு. இ. ஞானேஸ்வரன்

விளம்பரங்கள் சேகரித்தல்

திருமதி. க. விஜயகுமார்
திரு. சி. ஜி. திருமாலழகன்
திரு. டா. பாக்கியரத்தினம்
திரு. இ. இராசேந்திரம்
திரு. சி. சிவசங்கர்

அட்டைப் பட அமைப்பு

திரு. கு. துரைராசா
திருமதி. ச. பகீரதன்

உதவியாளர்கள்

திரு. ம. குண்டுமணி
திரு. எஸ். கிருபா
திரு. கே. முருகேசு
திரு. ஏ. ஜோண்வைன்

மாணவர் ஆக்கங்கள்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய் வம்" என்பது ஆன்றோர் வாக்கு. இவ்வுலகில் எம்மைப் பெற்று அனைத்தும் தந்து அன்புடன் வளர்ப்பார்கள். எமது தாயோ பத்து மாதம் சுமந்து பல்வேறு வேதனைகளின் மத்தியில் எம்மைப் பெற்றெடுக்கிறாள். எமக்கு நோய் ஏற் படும்போது கூட தானே மருந்துண்டு எம்மைக் காக்கிறாள். அல்லும் பகலும் கண்ணை இமை காப்பது போல நம்மைக் காக்கிறாள். எமது தந்தை உதிரத்தையே வியர்வையாக நிலத் தில் சிந்தி உழைக்கின்றார். எமது தாய் தந்தை யர் நாம் வீட்டிற்கும் நாட்டிற்கும் நல்ல பயனுள் ளவர்களாக வாழ வேண்டும் என்று விரும்புகி றார்கள். நமது கண்கண்ட தெய்வங்களாக அன்னையும் பிதாவும் விளங்குகிறார்கள். இவர் களை நாம் என்றும் மதித்துப் போற்றவேண்டும்.

"தந்தை தாய் பேண்" என்ற பொன் மொழியை நாம் என்றும் மறந்து விடக்கூடாது. அவர்கள் இருவரும் எமது வாழ்நாளில் ஆற் றிய கடமைகள் அளவற்றவை. அதை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது. எமக்காகவும் எம் உயர்ச்சிக்காகவும் பாடுபடும் தெய்வங் களை வாழும் காலம் முழுவதும் பேணிப் பாதுகாத்தல் வேண்டும்.

"தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை"
"தந்தை சொல் மிக்க மந்திரமும் இல்லை"

இந்த அறிவுரைக்கிணங்க அவர்களின் மனம் நோகாமல் அவர்கள் இருவரினதும் சொல் கேட்டு நடத்தல் வேண்டும். அவர்களின் வயோதி பக் காலத்தில் எமது கண்கண்ட தெய்வங்கள் நோயுற்று இயலாமல் போகும்போது எமக்கு அவர்கள் இருவரும் நாம் நோயுற்ற வேளையில் பாதுகாத்தார்களே அதே போல நாமும் அவர் களை கண்கலங்காமல் பாதுகாக்க வேண்டும். சில பெற்றோர்கள் பிள்ளைகளின் இனிய வாழ் விற்காக எவ்வளவு பெரிய கடன் சுமையை ஏற் றிருக்கிறார்கள்! அவர்களின் பிள்ளைகள் சிலர் அந்தக் கடன் சுமையை ஏற்க முன்வருவ தில்லை. சில பெற்றோர்களின் பிள்ளைகள் தமது பெற்றோர் வாழ்வது தமக்கு இடைஞ்சல் என்னும் கருத்தை முன்வைக்கிறார்கள். எமது இன்பத்திலும் துன்பத்திலும் துணை நின்றவர் கள் எமது கண்கண்ட தெய்வங்களான பெற் றோர்கள். இப்படிப்பட்ட பெற்றோர்களின் மனம் வேதனைப்பட்டால் எம் வாழ்வு மலராது என்று அவர்கள் அறிவதில்லை. எனவே நாம் சிறுவர்/ சிறுமியராக இருக்கும் பொழுதே அவர்களை மதித்து, அவர்களின் சொல்கேட்டு, அவர்க ளுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்து கொடுக்கப் பழகிக் கொள்ள வேண்டும். எம் வாழ்வின் உயர்வுக்கு மூலகாரணிகள் எமது கண்கண்ட தெய்வங்களான பெற்றோர்கள் ஆவர். அன்பும், கருணையும் கொண்டு எமக்காக தியா கம் செய்பவர்கள் எமது கண்கண்ட தெய்வங் களான பெற்றோர்கள். எமக்கு முதல் ஆசிரியை அம்மா. தீயசெயலை விட்டு நாம் நல்லதையே செய்து வாழ வழிகாட்டும் கருணையுள்ள தெய் வம். அம்மாவைப் போல் வேறு கருணையுள்ள தெய்வம் எமக்கில்லை. கண்கண் தெய்வங்க ளின் தேவைகளை அறிந்து உதவ வேண்டும். அவர்களின் விருப்பங்கள் எல்லாவற்றையும் அறிந்து பூர்த்தி செய்ய வேண்டும். அன்பும், ஆதரவும் காட்டி அவர்களை மகிழ்விக்க வேண் டும். நாம் முதல் முதலாக அறிந்து கொண்ட தெய்வங்களான அன்னையையும் பிதாவையும் எந்நாளும் போற்றி வாழ முற்படவேண்டும். அவர்களது ஆசியினால் நமது வாழ்வு சிறப் புறும் என்பதில் ஐயமில்லை.

ஆகவே மாணவர்களாகிய நாம் எமது கண்கண்ட தெய்வங்களாகிய பெற்றோரைப் போற்றி சமுதாயத்தில் நல்ல பிரஜைகளாக வாழ்வோமாக.

"வாழ்க எம் தாய் தந்தை
வளர்க தன் மக்கள்"

மகிளா
ஆண்டு 10[C]

அவனே, செவிடன் குருடன் கதை

ஓர் ஊரில் உழவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் இருந்தனர். திடீரென்று அந்த உழவன் இறந்து விட்டான். சொத்தை எப்படி பிரித்துக் கொள்வது என்பது குறித்து அண்ணன், தம்பி இருவருக்கும் சண்டை ஏற்பட்டது. ஊர் மக்களால் அவர்களைச் சமாதானம் செய்ய முடியவில்லை. அங்கிருந்த ஒரு பெரியவர் "நீங்கள் இருவரும் நல்லூருக்குச் செல்லுங்கள். அந்த ஊர்த் தலைவர் அறிவுக்கூர்மை மிக்கவர். உங்கள் தகராறை எளிதாகத் தீர்த்து வைப்பார்" என்றார். அவருடைய அறிவுரையை இருவரும் ஏற்றுக் கொண்டனர். இருவரும் நல்லூரை நோக்கிச் சென்றனர். இதற்குமுன் அவர்கள் நல்லூர் சென்றதில்லை. நல்லூர் சிறிது தொலைவில் அவர்கள் கண்ணுக்குத் தெரிந்தது. அருகிலிருந்த வயல் வெளியில் சிலர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்து "ஊர்த் தலைவர் வீட்டில் இருக்கின்றாரா?" என்று கேட்டான் அண்ணன். அவர்களில் ஒருவன் "நாங்கள் அவருடைய வேலைக்காரர்கள் தான், அவர் வீட்டில் தான் இருப்பார். அவர் காது கேட்காத செவிடர் ஆயிற்றே" என்றனர்.

அங்கிருந்து புறப்பட்ட இருவரும் ஊருக்குள் நுழைந்தனர். அவர்கள் எதிரில் ஒரு பெண் தலையில் தண்ணீர்க் குடத்துடன் வந்து கொண்டிருந்தாள். ஊர்த் தலைவரின் மகள் அவள் என்பது அவர்களுக்குத் தெரியாது. அவளைப் பார்த்து "ஊர்த் தலைவர் வீட்டில் இருக்கின்றாரா?" என்று கேட்டான் மூத்தவன். "அப்பாவைத் தானே கேட்கிறீர்கள். அவர் வீட்டில் இருக்கின்றார். கண்பார்வை தெரியாத குருடராயிற்றே அவர்" என்று பதில் சொல்லி விட்டுச் சென்றாள் அவள். பிறகே இருவரும் ஊர்த் தலைவரின் வீட்டை அடைந்தார்கள். வீட்டின் முன் அவரின் மனைவி அமர்ந்திருந்தாள். "உள்ளே ஊர்த் தலைவர் இருக்கிறாரா?" என்று கேட்டான் மூத்தவன். "அவர் தான் செத்து விட்டாரே" என்று எரிச்சலுடன், அவள் பதில் சொன்னாள். குரல் கேட்டு ஊர்த்தலைவன் வீட்டை விட்டு வெளியே வந்தார். அவர்களை அன்புடன் வீட்டிற்குள் அழைத்துச் சென்றார். தன் கைகளாலேயே அவர்களுக்கு உணவு பரிமாறினார். ஆனால், அவர்கள் கேள்விப்பட்டது போல செவிடராகவோ, குருடராகவோ, இல்லை. உயிருடன் இருந்தார். தங்களுடைய தகராறைப் பிறகு சொல்லலாம் என்று இருவரும் முடிவு செய்தனர். வழக்கம் போல் மூத்தவன் அவரைப் பார்த்து "வழியில் மூவரைச் சந்தித்தோம், ஒருவர் உம்மைச் செவிடர் என்றார், இன்னொருவர் குருடர் என்றார், இன்னொருவர் நீர் இறந்து விட்டதாகச் சொன்னார். ஏன் அவர்கள் அப்படிச் சொன்னார்கள்" என்று கேட்டான். வாய் விட்டுச் சிரித்த அவர் "என்னிடம் பதினைந்து வேலைக்காரர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொரு நாளும் என்னைப் பார்த்தவுடனே பணம் கேட்பார்கள். நான் அதைத் காதில் வாங்கிக் கொள்வதே இல்லை. அதனால் தான் அவர்கள் என்னை செவிடன் என்று அழைத்தார்கள். என் மகள் என்னைக் குருடன் என்று சொல்லியிருப்பாள், வயதுவந்த அவளுக்குப் பொருத்தமான கணவனை நான் தேடிக் கொண்டிருக்கிறேன். ஆனால், அவள் அதை நம்பவில்லை. அவள், திருமணப் பருவம் அடைந்திருப்பதை நான் கவனிக்காமல் இருப்பதாக நினைக்கிறாள். அதனால் என்னைக் குருடன் என்று அழைக்கின்றாள்." அண்ணன், தம்பி இருவரும் பேசுவதை ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்தனர். 'என்னைச் செத்தவன் என்று என் மனைவியில் ஒருத்திதான் சொல்லியிருக்க முடியும். அதுவும் உண்மைதான். எனக்கு நான்கு மனைவிகள். அவர்கள் எப்பொழுதும் சண்டையிட்டுக் கொண்டிருப்பார்கள். இன்று ஒருத்தியை நான் நன்றாக அடித்துவிட்டேன். கோபத்தில் அவள் என்னைச் செத்தவன் என்று சொல்லியிருக்கலாம். அது கிடக்கட்டும், என்னை எதற்காகத் தேடி வந்தீர்கள்? என்று கேட்டார் அவர். தங்கள் தகராறைப் பற்றிச் சொல்ல இருவருக்கும் மனம் வரவில்லை. இருவரும் எழுந்து "இந்த வழியாக வந்தோம். உங்களைச் சந்தித்து விட்டுச் செல்ல நினைத்தோம். எங்கள் வீட்டிற்கு வரவேண்டும்" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டார்கள். "தம்பி, இத்தனை சிக்கல்கள் வைத்துள்ள ஊர்த் தலைவர் மகிழ்ச்சியாக இருக்கிறார். மற்றவர்களுக்கு அறிவுரை கூறுகின்றார். நமக்குள் ஏன் தகராறு? ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து மகிழ்ச்சியாக ஒற்றுமையுடன் வாழ்வோம்" என்றான் அண்ணன். "அண்ணா, என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் விருப்பம் போல் நடந்து கொள்வேன்" என்றான் தம்பி.

பொ. சிந்துயா
ஆண்டு 6A

உரும்பிராய் இந்துவின் உவப்பான மலர்

வித்தியா சிறக்க வாழ்த்துவோர்

உங்கள் கொண்டாட்டங்களுக்குத்

தேவையான சகல விதமான கேக் வகைகள்,

இனிப்புப் பண்டங்கள்

குளிர்பான வகைகள், அனைத்துக்கும்

தேவையான சாய வகைகள்,

சுவையூட்டிகள், இரசாயனப் பொருட்கள்,

அனைத்தினதும் இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களும்

பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்

10டி, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

☎ 021- 2365

அலையே இல்லா அறிவுக்கடலின்
மறுவே இல்லா மகர விளக்கு வித்தியா

நவ நாகரீகத்திற்கு ஏற்ப
வண்ண வண்ண டிசைன்களில்
ஆண்களுக்கும் பெண்களுக்கும்
சேட், ஜீன்ஸ் சட்டைகள்
என்பன உடலுக்குடன்
தைத்துக் கொடுப்போர்

குமார் தையல் அகம்

(பாடசாலை அருகாமை)

பலாலி வீதி, உரும்பிராய்

நல்லதனில் அன்னம்
வல்லமையில் சரபம்
உயிர்ப்பதனில் ஸ்பினிக்
ஒளிர்வதிலே வித்தியா
வாழ்த்தும்

தில்லையம்பதி
கொமினிக்கேஷன்

உள்நாட்டு வெளிநாட்டுத்
தொடர்புகளை உடனுக்குடன்
பெற்றுக் கொள்ளலாம்

உள்நாடு — 021—2488
வெளிநாடு 009421— 2488
மற்றும் பக்ஸ் (Fax)

புகையிரத வீதி
கோண்டாவில்

வித்தியா நீ விடிவெள்ளியாய் பிரகாசிப்பாய்

அருசன்

குறைந்த விலையில்
சிறந்த தரத்துடன்
ஒடருக்கும் வீற்பனைக்கும்
சீற்றுண்டி வகைகளை
அழகுவையுடன்
அளிப்பவர்கள்

பலாலி வீதி, உரும்பிராய்

சைவ உணவகம்

சிகரத்தில் ஏறி வானத்தைத் தாவி
வையத்தை ஆளும் வித்தியா வாழி

மங்கை
வர்த்தக நிலையம்

பான்சிப் பொருட்கள் பல்பொருள்
வாணிபத்தில் அன்றும் இன்றும்
என்றும் இளைய தலைமுறையின்
இதயங் கவர்ந்த ஸ்தாபனம்

பலாலி வீதி. உரும்பிராய்

அழகுக்கு நயாகரா - அமைதிக்கு தேம்ஸ்
உறுதிக்கு ஈபல் - அனைத்திற்கும் வித்தியா

சோதி
ஸ்ரோர்ஸ்

பல்பொருள் வாணிபத்தில்
பலகாலம் பணியாற்றி
அனைவரது நெஞ்சிலும்
இடம்பிடித்த ஒரே
ஸ்தாபனம்

கோண்டாவில் கிழக்கு- கோண்டாவில்

இத் தரை மீது முத்திரை பதிக்கும்
வித்தியாவை வாழ்த்தும்

கோல்டன் பிறா

நவநாகரிக நங்கையர்களின்
அழகுசாதனப் பொருட்களுக்கு
தரமான ஒரே ஸ்தாபனம்

With Best Compliments From

SAKEIRA TEX

சாகீரா ரெக்ஸ்

சாகீரா ரெக்ஸ்

3rd Cross Street

Colombo - 11

ஆயிரம் பிறைகள் எல்லாம்
உன் அர்ச்சனைக்குப் பூத்த
மலர் வித்தியாவை வாழ்த்தும்

குணா போட்டோ

163 நாவலர் வீதி. யாழ்ப்பாணம்.

210 இராமநாதன் வீதி. திருநெல்வேலி

கலைநயம் பெருக்கும் எழில் நயம்
மிக்க வித்தியாவை வரவேற்பதில்
மகிழ்ச்சி அடைகின்றேன்

மரப்பொருள் உற்பத்தி நிலையம்

சந்தை முன்னாக
உதும்பிராய்

வளரிளம் வித்தியாவின் வளர்ச்சி கண்டு
மகிழ்ச்சி அடைகின்றேன்

சுது வர்த்தக நிலையம்

அனைத்து ரகப் பீடை
நாசினிகளையும் குறைந்த
விலையில் அள்ளி வழங்கும்
விவசாயிகளின் நண்பன்

கோண்டாவில் சந்தி

வித்யா நீ புரட்சிப் பூ
புதுமை நெருப்பு
பூஜைக்கு வந்த மலர் – பூமிக்கு
வந்த நிலவு
உன்னை வாழ்த்தும்

எஸ். நகுலன் ஏஜென்ஸ்

குறைந்த விலையில் நீடித்த
தரத்துடன் பொருட்களை
விற்பனை செய்யும் ஒரே
ஸ்தாபனம்

பலாலி வீதி. மடத்தடி உதும்பிராய் கிழக்கு

ஔவையார்

ஔவையார் வயதில் முதிர்ந்தவர். சிறந்த தமிழ்ப் புலவர். கவி பாடுவதில் வல்லவர். இவரிடத்தில் அன்பு, நன்றி மறவாமை, எளிமை போன்ற நல்ல குணங்கள் காணப்பட்டன. துணிச்சலும், தகுதியானவரைப்பாடும் தன்மையும் கொண்டவர். அறிவினால் வீரம் பெற்றவர் இவர்.

ஔவையாரின் துணிச்சலுக்கு ஒரு சம்பவம். இவர் ஒருமுறை தனிமையான பாழடைந்த மாளிகையில் தங்க வேண்டியிருந்தது. அந்தப் பாழ் வீடு பயங்கரமானது. அந்த வீட்டில் பெண் பேய் வசித்து வந்தது. அது அங்கு வருவோரைக் கொன்று பழிவாங்கி விடும். இதை அறியாத ஔவை அங்கு தூங்குகையில் அப் பேய் வந்தது. இறைபக்தி மிக்க துணிவுள்ள பாட்டி அஞ்சவில்லை. பயமே மனிதனைக் கொல்லுவது. ஆகவே, ஔவையார் பசாசை நோக்கி "ஏ! பசாசே பேயைப் பேய் கொல்லுவதா? நானும் ஒரு பேய்தான். நீ கொல்ல வேண்டிய வர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களை முதலில் நீ கொல்" என்றார். கொடிய அப் பெண் பேய் "பாட்டி யாரை நான் கொல்ல வேண்டும்" என்றது. அதற்கு ஔவையார் பாட்டின் மூலம்

"வெண்பாவை இருபாவிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்க கையெழுத மாட்டானை - பெண்பாவி
பெற்றானே பெற்றாள் பிர் நகைக்கப் பெற்றானே
எற்றோ மற்றெற்றோமற் எற்று"

என்று கூறி "ஒரு வெண்பாவை இரு தடவை படித்துப் பாடமாக்காதவனையும், பார்த்து எழுதியும் பிழை விடுகின்ற அறிவில்லாதார் கூட்டத்தையும் அடித்துக் கொல்லு" என்றாள். பழிவாங்கும் அப்பேய் "ஐயோ!" என அலறிய படி ஔவையின் காலடியில் விழுந்து அழுதது. பாட்டியும் அன்பாக "பிசாசே! உனக்கும் கவலையுண்டா? நீ ஏன் அழுகிறாய்" என்றார். அப் பெண்பேய் அழுதபடி "பாட்டி நான் ஒரு சோழ இளவரசி ஒருநாள் மேல் மாடியில் நின்றேன். ஒரு அழகான இளைஞன் வீதி வழியாகப் போய்க் கொண்டிருந்தான். அவனைக் கணவனாக அடைய ஆசைப்பட்டேன். எனவே அவனை இன்றிரவு கபாலி கோயிலுக்கு வந்து என்னை மணம் செய்யும்படி ஓலை எழுதினேன். அவ் அழகிய வாலிபனோ படிப்பறிவற்றவன். அவன் அதனை இன்னொருவனிடம் வாசித்துக் காட்டும் படி கொடுத்தான். வாசித்த அக் கயவனோ அரசி இன்றிரவு உன்னைக் கொல்லப் போவதாக எழுதி இருக்கிறாள். நீ ஊரை விட்டு ஓடு என்றான். அவ் இளைஞனோ ஊரை விட்டு ஓடி விட்டான்.

அன்றிரவு அந்தக் கொடியவன் கபாலி கோயிலில் மாப்பிள்ளையாக எனக்காகக் காத்திருந்தான். விபரம் புரியாது அங்கு மணப் பெண்ணாகச் சென்றேன். அப்போது தான் நான் வஞ்சிக்கப்பட்டதை உணர்ந்தேன். கத்திக் கூச்சலிட முடியவில்லை. ஊர் பேசும், அவமானம் என எண்ணி கபாலி கோயில் சூலத்தின் மேல் விழுந்து இறந்து விட்டேன். அன்று முதல் பேயாகி இளைஞரைப் பழிவாங்கி வருகிறேன்" என்று தன் கதையைக் கூறியது. நான்கு சாமமும் தோன்றிய பேயின் அட்டகாசத்தை அடக்கி விநாயக மந்திர வல்லமையால் அப்பெண் பேயை ஆசீர்வதித்து நற்கதியடைய வழிகாட்டினார் ஔவையார்.

"நன்றும் தீதும் பிறர்தர வாரா"

பாக்கியதுரை கார்த்திகா
தரம் 7

படிப்பினின்றி அறிவு மட்டும் இருப்பது ஆபத்தாக முடியும்
அறிவின்றிப் படிப்பு மாத்திரம் இருப்பது பயனற்றதாகும்
– ஸ்டான்லி ஜாக்ஸன் –

சாதிகள் இல்லையடி பாப்பா

"சாதிகள் இல்லையடி பாப்பா - குலத் தாழ்ச்சி இகழ்ச்சி சொல்லல் பாவம்" என்று குழந்தைகளைப் பார்த்துக் கூறுகின்றார் பாரதி யார். நாம் சிறிது சிந்தித்துப் பார்த்தால் பாரதி யார் கூறியது உண்மை எனத் தெரியவரும். உலகம் முழுவதும் வாழும் மனிதன் ஒரே அமைப்புடையவனாய் வாழ்கின்றான். எல்லா மனிதரின் உடலிலும் ஓடும் இரத்தம் சிவப்பு நிறமாகும். கறுப்பு இரத்தமோ வெள்ளை இரத் தமோ எந்த மனிதன் உடலிலும் ஓடுவதில்லை. அவ்வாறு ஓடினால் அவர்களை வெவ்வேறு சாதியினர் எனக் கூறலாம். எல்லாரது கண்ணீ ரும் உவர்ப்புச் சுவையே உடையது. இனிப்புக் கண்ணீரோ, புளிப்புக் கண்ணீரோ இல்லை. அவ் வாறு இருந்தால் அவர்களை வெவ்வேறு சாதி யினர் எனலாம்.

ஒரு பூனை பல குட்டிகளை ஈனுகின்றது. அக் குட்டிகளில் ஒன்று வெள்ளை நிறம், இன் னொன்று கறுப்பு நிறம், வேறொன்று சாம்பல் நிறம். இக் குட்டிகளில் வெள்ளை நிறமுடை யதை உயர்ந்தது என்றும், கறுப்பு நிறமுடைய தைத் தாழ்ந்தது என்றும், கூறமுடியுமா? எல் லாம் பூனைச் சாதியே. அதைப் போல வெள் ளைத்தோல் உடையவர்களை உயர்ந்த சாதி என்றும் கறுப்புத்தோல் உடையவர்களைத் தாழ்ந்த சாதி என்றும் கூறலாமா? எல்லோரும் மனித சாதியே.

ஆதிகாலத்தில் மக்கள் கூட்டங் கூட்ட மாக வாழ்ந்தார்கள். இப்படி ஆயிரம் ஆயிரம் தொழில்களைச் செய்தனர். எல்லோரும் ஒரே தொழிலைச் செய்தால், சமூகத் தேவைகள் நிறை வேறமாட்டா. அதனால் ஒவ்வொரு கூட்டத்தின ரும் ஒவ்வொரு தொழில் செய்தனர். சிலர் வேளாண்மை செய்தனர். சிலர் மீன் பிடித்தனர். சிலர் தச்சுவேலை செய்தனர். சிலர் இரும்பை உருக்கிக் கருவிகள் செய்தனர். இப்படி ஆயி ரம் ஆயிரம் தொழில்களைச் செய்தனர். அத் தொழில்கள் எல்லாம் சமுதாயத்துக்கு மிக அவ சியமாய் இருந்தன. ஒரு தொழில் உயர்ந்தது என்றோ இன்னொன்று தாழ்ந்தது என்றோ கருதப்படவில்லை.

பிற்காலத்தில் ஒவ்வொரு தொழில் செய் தோரை ஒவ்வொரு சாதியினர் ஆக்கி விட்டனர். அவர்களில் ஒரு சில தொழில் செய்தோரை உயர் சாதியினர் என்றும் சில தொழில் செய் தோரை தாழ்ந்த சாதியினர் என்றும் பிரித்து விட்டனர். இந்தப் பிரிப்பு ஏற்றுக் கொள்ள முடியாதது அல்லவா?

அதனால் 'சாதிகள் இல்லையடி பாப்பா" என்ற பாரதியாரின் கூற்று சாலவும் பொருத்தமா னதே. எனவே மக்களாகிய நாம் சாதிப் பாகு பாடு காட்டாது எல்லோரும் ஒரு குலமாகவே நினைத்து ஒற்றுமையாக வாழ்வோமாக.

ம. கஜீபன்

இன்னும் இல்லை

நஸ்ருதீன் முல்லா மத்திய ஆசியாவில் வாழ்ந்த ஒரு விகடகவி. அவன் ஒருமுறை மூட்டை முடிச்சுக்களோடு சந்தையிலிருந்து வீட் டிற்கு வந்தான். வழியில் ஒருவர் "முல்லா சுமை அதிகமா? தாரும் நான் சுமந்து வருகி றேன், என்ன தருவீர்?" என்று கேட்டான். முல்லா "ஒன்றும் இல்லை" என்றான். "சரி அதையாவது தாரும்" என்று கூறி சுமையைச் சுமந்து கொண்டு முல்லாவுடன் வீட்டிற்கு வந்தான். அவன் கூலி கேட்டு அடம் பிடித்தான். முல்லாவோ "ஒன்றும் இல்லை" என்றான். ஊரே கூடிவிட்டது. ஊர்ப்பெரியவர்கள் "முல்லா அவன் கேட்கும் கூலியைக் கொடு" என வற்புறுத்தினர். முல்லாவோ நடந்ததைக் கூறி "அவன் கேட்கும் கூலியைக் கொடுக்கிறேன், இந்தா இது என் காசுப்பெட்டி, இதற்குள் இருப்பதை உன் கூலி யாக எடுத்துக் கொள்" என்று கூறி ஒரு பெட்டி யைக் கொடுத்தான். ஆவலோடு பெட்டியைத் திறந்த கூலியாள், "இங்கு ஒன்றும் இல்லை" என்றான். "அதுதானே நீ கேட்ட கூலி, எடுத்துக் கொள்" என்றான் முல்லா. சகலரும் வாயடைத் துப் போயினர். முல்லாவை மடக்க நினைத்த ஊரவர்களும் கூலியாளும் மெல்ல அவ் விடத்தை விட்டு நழுவினர்.

சீ. சிவநிக்ஷன்
தரம் 8A

இயற்கைத் தாவரங்கள்

இயற்கைத் தாவரங்கள் எனப்படுவது மனிதனால் உருவாக்கப்படாது தானாகவே மண்ணில் உண்டாகிச் சூரிய ஒளியையும், மழை நீரையும் கொண்டு வளர்ந்த தாவரங்களே. புவியில் ஆரம்பத்தில் உருவான இயற்கைத் தாவரங்களில் தற்காலத்தில் காணப்படுபவை மிகச் சொற்பமானவையே. இவை மனிதனுடைய செயற்பாட்டின் மூலம் அழிக்கப்படுவதனாலேயே இவ்வாறான நிலையில் காணப்படுகின்றன. தற்போது செயற்கையாக மரங்களை நாட்டும் திட்டங்கள் மூலம் புதிதாக தாவரங்கள் நாட்டப்படுகின்றன. ஆனால் அவை இயற்கைத் தாவரங்கள் ஆக மாட்டா. இந்த இயற்கைத் தாவரங்கள் மனிதனுக்குப் பல்வேறு வகையில் உதவுகின்றன. ஒரு பிரதேசத்தின் காலநிலையிலும் இவ் இயற்கைத் தாவரங்கள் முக்கிய பங்களிப்புச் செய்கின்றன. இயற்கைத் தாவரங்கள் மழை வீழ்ச்சியை ஊக்குவிக்கும் பிரதான காரணியாகும். இத் தாவரங்கள் வளியின் ஈரலிப்பினை அதிகரிக்கும் பிரதான காரணியாகும். அதனால் மழை வீழ்ச்சி அதிகரிக்கிறது. பூமியின் வெப்பநிலை அதிகரிக்காமல் தாவரங்கள் வெப்பத்தின் அளவைக் கட்டுப்படுத்துகின்றன. மற்றும் இயற்கைத் தாவரங்கள் வளியில் காபனீரொட்சைட்டின் அளவை அதிகரிக்காமல் தடுக்கின்றன. தாவரங்கள் சூரியஒளி உள்ள வேளையில் காபனீரொட்சைட்டை உள்வெடுத்து ஒட்சிசனை வெளிவிடுவதன் மூலம் தூய வளி கிடைக்கச் செய்வதோடு வாயுச் சுற்று வட்டச் செயற்பாட்டுக்கும் உதவுகின்றன. மற்றும் இயற்கைச் சம நிலையைப் பேணுகின்ற நடவடிக்கையில் இவை முக்கிய பங்களிப்புச் செய்கின்றன. மண்ணில் நீரை இழுத்துத் தேக்கி வைக்கின்றன. அத்துடன் மழைநீரானது மண்ணில் நேராக விழுவதன் மூலம் மண்ணரிப்பு ஏற்படாது புவியினை மூடி நிற்கின்றன. மேலும் இத் தாவரங்கள் இருப்பதால் மண்ணானது நீராலும் காற்றாலும் எடுத்துச் செல்லப்படாது பாதுகாக்கப்படுகின்றது.

இயற்கைத் தாவரங்கள் பொதுவாக காடுகள், புல் நிலங்கள், முட்புதர்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. இக் காடுகளை மனிதன் தனது தேவைகளை நிறைவேற்றும்பொருட்டு அழிக்கின்றான். இக் காடுகளில், மிகவும் பெறுமதி வாய்ந்த மரங்கள் காணப்படுகின்றன. முதிரை, கருங்காலி முதலிய வைரமான மரங்கள் காணப்படுகின்றன. இவற்றை மனிதன் வீடமைத்தல், தளபாட உற்பத்தி போன்றவற்றுக்காக அழிக்கின்றான். அடர்ந்த காடுகளை அழித்து பொருளாதாரப் பயிர்களான இறப்பர், ஒலிவ், கரும்பு, கொக்கோ முதலியவற்றைப் பயிரிடுகின்றான். அவ்வாறு விவசாய சேனைப் பயிர்ச் செய்கைகளுக்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன. விறகுத் தேவைக்காகவும் காடுகளை பெருமளவில் மனிதன் அழிக்கின்றான். மற்றும் சனத்தொகைப் பெருக்கம் காரணமாக வீடமைப்பு, தொழிற்சாலை அமைப்பு, போக்குவரத்துக்கான நெடுஞ்சாலைகள் அமைப்பு, பொதுநிலையங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் முதலியன அமைப்பதற்கும் வேண்டிய இட வசதிக்காகவும் இந்த இயற்கைக் காடுகளே அழிக்கப்படுகின்றன.

இவ்வாறான பல தேவைகளுக்காக மனிதனால் இத் தாவரங்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் பல பாரிய தீயவிளைவுகள் உருவாகின்றன. காடழிப்பினால் சூழல் மாசடைகின்றது. மண்ணின் வளம் குன்றுகின்றது; மற்றும் நீர் நிலைகள் வறண்டு விடும். மழைவீழ்ச்சியின் அளவு குறையும். இதனால் வரட்சி ஏற்பட்டு நாட்டில் வறுமை, நோய் என்பன ஏற்படலாம். தொடர்ந்து இத்தாவரங்கள் அழிக்கப்படுவதால் நல்ல நிலங்கள் காலப்போக்கில் பாலைவனங்களாக மாற்றமடைகின்றன. மேலும் சூழல் வெப்ப நிலை உயர்வடையும். வளியில் காபனீரொட்சைட்டின் அளவு அதிகரித்து பசுமை விட்டு நீங்கும் நிலையை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். மற்றும், மழைக்காலங்களில் மண்ணரிப்பு ஏற்படும். அதனால், மண் அடித்துச் செல்லப்பட்டு குளங்கள் ஆழம் குன்றும். மண்வளம் குன்றும். இயற்கைச் சமநிலை பாதிப்படையும். மனித வாழ்வில் துன்பங்கள் ஏற்படும். இதனைத் தடுப்பதற்காக அரசாங்கத்தினால் காடுகளை வெட்டித் தடைவிதித்தும் மீறிக் களவாகக் காடுகளை வெட்டுவோருக்குத் தண்டனையும் வழங்கப்படுகிறது. இருந்தும், சிலர் களவாக மரங்களை வெட்டுகின்றனர். தற்காலத்தில் மரம் நடுகைத் திட்டங்கள் அரசாங்கத்தினாலும் சில சர்வதேச நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்படுகின்றன. நாமும் மரம் நடுகைத் திட்டத்துக்கு ஊக்குவிப்பு வழங்குவதன் மூலம் தாவரங்கள் அழியாது பாதுகாப்போமாக.

தனபாலசிங்கம் கௌதமன்
தரம் 11^{A}

தாலந்து

ஒவ்வொரு மனிதனும் இவ்வுலக வாழ்க்கையின் ஊடாக மறுமைப் பயனை அடையவே விரும்புகிறான். ஒவ்வொருவரும் தமக்கு வழங்கப்பட்ட ஆற்றல்கள், திறமைகளை வளர்க்க வேண்டும் என்றும் அவற்றை வெறுமனே யாருக்கும் பிரயோசனமற்ற வகையில் வைத்திருக்கக் கூடாது என்பதையும் விளக்கி கிறிஸ்தவர்களின் திருவிவிலியத்தில் தாலந்து உவமையாக கிறிஸ்து கற்பிக்கின்றார்.

விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சி வாயிலாகவும் விளக்கலாம் : நெடும் பயணம் செல்ல விருந்த ஒருவர் பணியாளர்களை அழைத்து அவர்களிடம் தம் உடமைகளை ஒப்படைத்தார். அவரவர் திறமைக்கு ஏற்ப ஒருவருக்கு ஐந்து தாலந்தும் வேறொருவருக்கு இரண்டு தாலந்தும் இன்னொருவருக்கு ஒரு தாலந்தும் கொடுத்து விட்டு நெடும் பயணம் மேற்கொண்டார். ஐந்து தாலந்தைப் பெற்றவர் போய் அவற்றைக் கொண்டு வாணிபம் செய்து வேறு ஐந்து தாலந்து ஈட்டினார். அவ்வாறே இரண்டு தாலந்தைப் பெற்றவர், மேலும் இரண்டு தாலந்து ஈட்டினார். ஒரு தாலந்து பெற்றவரோ போய் நிலத்தைத் தோண்டி தம் தலைவரின் பணத்தைப் புதைத்து வைத்தார். நெடுங்காலத்திற்குப் பின் அந்தப் பணியாளர்களின் தலைவர் வந்து, அவர்களிடம் கணக்குக் கேட்டார். ஐந்து தாலந்து பெற்றவர் அவரை அணுகி, வேறு ஐந்து தாலந்தைக் கொண்டு வந்து "ஐயா, ஐந்து தாலந்தை என்னிடம் ஒப்படைத்தீர். இதோ பாரும்! இன்னும் ஐந்து தாலந்தை ஈட்டியுள்ளேன்" என்றார். அதற்கு அவருடைய தலைவர் அவரிடம் "நன்று நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே சிறிய பொறுப்புக்களுக்கு நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புக்களில் உம்மை அமர்த்துவேன். உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்குகொள்ளும்" என்றார். இரண்டு தாலந்து பெற்றவரும் அவரை அணுகி "ஐயா, நீர் என்னிடம் இரண்டு தாலந்து ஒப்படைத்தீர். இதோ பாரும்! வேறு இரண்டு தாலந்து ஈட்டியுள்ளேன்" என்றார். அவருடைய தலைவர் அவரிடம் "நன்று நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே சிறிய பொறுப்புக்களில் நம்பிக்கைக்குரியவராய் இருந்தீர், எனவே பெரிய பொறுப்புக்களில் உம்மை அமர்த்துவேன். உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்கு கொள்ளும்" என்றார். ஒரு தாலந்தைப் பெற்றுக் கொண்டவரும், அவரை அணுகி, "ஐயா, நீர் கடின உள்ளத்தினர். நீர் இறைக்காத இடத்திலும் போய் அறுவடை செய்பவர் நீர் தூவாத இடத்திலும் விளைச்சலைச் சேகரிப்பவர் என்பதை அறிவேன். உமக்கு அஞ்சியதால் நான் போய் உம்முடைய தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன். இதோ பாரும்! உம்முடையது." என்றார். அதற்கு அவருடைய தலைவர் 'சோம்பேறியே! பொல்லாத பணியாளனே! நான் தூவாத இடத்திலும் போய் சேகரிப்பவன் என்பது உனக்கு தெரிந்துள்ளது அல்லவா? அப்படியானால், என் பணத்தை நீ வட்டிக் கடையில் கொடுத்து வைத்திருக்க வேண்டும். நான் வரும்போது எனக்கு வரவேண்டியதை வட்டியோடு திரும்பப் பெற்றிருப்பேன்" என்று கூறினார். எனவே அந்தத் தாலந்தை அவரிடமிருந்து எடுத்து பத்துத் தாலந்து உள்ளவரிடம் கொடுங்கள். ஏனெனில் உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும் அவர்கள் நிறைவாகப் பெறுவர். இல்லாதோரிடமிருந்து அவரிடமுள்ளதும் எடுக்கப்படும். "பயனற்ற இந்தப் பணியாளரைப் புறம்போக்குள்ள இருளில் தள்ளுங்கள். அங்கே அழுக்கும் அங்கலாய்ப்பும் இருக்கும்" என்று அவர் கூறினார்.

கிறிஸ்து கூறிய இந்த தாலந்தின் உவமையில் இருந்து இறைவனால் எமக்கு வழங்கப்பட்ட ஆற்றல் திறமைகளை மாணவர்களாகிய நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது புலனாகிறது.

திருவிவிலியத்திலிருந்து.....

தேவதாஸ் றேகன்

தரம் 7

1999ம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சையில் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவிகள்



செல்வி. சுகிர்தா கணேஸ்

3 A, B 8ம் இடம்
(யாழ் மாவட்டம்)

செல்வி. சாமினி சின்னராசா

3 A, B 9ம் இடம்
(யாழ் மாவட்டம்)

எமது கல்லூரியின் வலைப் பந்தாட்டக் குழு

பணக்காரனும் ஏழையும்

பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் விலையுயர்ந்த மெல்லிய உடை அணிந்து நாள் தோறும் ஆடம்பரமாய் விருந்தாடுவான். அவனுடைய வாசல் அருகே லாசர் என்னும் ஏழை ஒருவன் இருந்தான். அவன் உடம்பெல்லாம் ஒரே புண்ணாய் இருந்தது. அவன் அப் பணக்காரனின் பந்தியில் சிந்தியவற்றைக் கொண்டு பசியாற விரும்பினான். நாய்கள் கூட வந்து அவனுடைய புண்களை நக்கும். இந்த ஏழை இறந்தான். வானதூதர் அவனைத் தூக்கிச் சென்று ஆபிரகாமின் அருகிலே அமர்த்தினர். பணக்காரனும் இறந்தான். புதைக்கப்பட்டான். அவன் பாதாளத்தில் வேதனைப்படுகையில் ஏறெடுத்துப் பார்த்தான். தொலைவில் ஆபிரகாமையும் அவன் அருகில் அமர்ந்திருந்த லாசரையும் கண்டான் "தந்தை ஆபிரகாமே! என் மீது இரங்கி, லாசர் தன் விரலின் நுனியை தண்ணீரில் நனைத்து நாவைக் குளிரச் செய்யும்படி அவனை அனுப்பும். நான் இந்த நெருப்பில் வேத னைப்படுகின்றேன்" என்று கத்தினான். ஆபிரகாம் அவனை நோக்கி, "மகனே! வாழ்நாளில் உனக்கு இன்ப சுகமே கிடைத்தது. லாசருக்கு துன்ப நயரமே கிடைத்தது. இதை நினைத்துப் பார். ஆனால், இப்பொழுது அவன் இங்கே ஆறுதலடைகிறான். நீயோ வேதனைப்படுகிறாய். அன்றியும் எங்களுக்கும் உங்களுக்கும் இடையே பெரும் பாதாளம் ஒன்று அமைந்துள்ளது. எனவே இங்கிருந்து உங்களிடம் கடந்துவர ஒருவர் விரும்பினாலும் முடியாது. அங்கிருந்து எங்களிடம் தாண்டி வருவதும் கிடையாது" என்றார். அதற்கு அவர் "தந்தையே அவனை எனது தகப்பன் வீட்டிற்கு அனுப்பும்படி உம்மை வேண்டுகிறேன். அவர்களும் இந்த வேதனைத் தளத்திற்கு வராதபடி அவன் எச்சரிக்கட்டும்" என்றார். ஆபிரகாமோ, "அவர்களுக்கு மோசேயும் இறைவாக்கினரும் இருக்கின்றார்கள். அவர்களுக்கு செவி சாய்க்கட்டும்" என்றார். அவனோ "அப்படியன்று, தந்தை ஆபிரகாமே இறந்தோரிடமிருந்து யாராவது அவர்களிடம் சென்றால் மனம் திரும்புவார்கள்" என்றான். அதற்கு அவர், 'மோசேயனுக்கும் இறைவாக்கினர்களுக்கும் செவி சாய்க்காவிடில் இறந்தோரிடம் இருந்து ஒருவன் உயிர்த்தெழுந்தாலும் நம்பமாட்டார்கள்" என்றார்.

இக்கதை திருவிவிலியத்திலிருந்து எடுக்கப்பட்டது.

ஸ்ரனிஸ்லாஸ் வினோத்
ஆண்டு 9

புதிய பள்ளியில் ஒரு மிகையும் மகளையும் பிரதேசவாசிகளின் நாவையும் இணை

இராசா வீட்டு முற்றத்தில் நனைந்த சீனி காய்ந்ததுவே.

இராமன் அங்கே போயிருந்தான் காய்வது என்ன பொருளென்றான்?

இராசா "மலையின் மண்" என்றார். இராமன் எழுந்து போய்விட்டான்.

போன இராமன் சிந்தனையுள் புத்தி ஒன்று புகுந்ததுவே தாவே அந்தச் சீனியெல்லாம் தின்று முடிக்கக் கண்டான்.

மகளை அழைத்து, இது சொல்வான் "மன்னன் வீட்டில் நானிருப்பேன். வடக்கன் மாடு செத்ததென்றுவந்து எனக்குச் சொல்" என்றான்.

மகனும் அழுதே ஓடிவந்து மன்னன் வீட்டில் இது சொல்ல,

"ஐயோ! வாய்மண், வாய்மண்" என்று சொல்லி அள்ளி அள்ளி உண்டான் சீனியினை.

"மகனே உனக்கும் உன் தாய்க்கும் வாய் மண் போட" என்று சொல்லி அள்ளிக் கொடுத் தான் சீனி எல்லாம்

அரசன் சீனி தொலைந்ததுவே! பள்ளிப் பிள்ளைகள் கேட்டீரோ?

பகிடிக்கும் பொய் சொல்லாதீர்கள்.

கதை

திருமலை மன்னனின் அரண்மனைக் கோமாளியான தென்னாலிராமன் இப்படி ஒரு கபட நாடகமாடி அரசனது சீனி எல்லாவற்றையும் அள்ளி உண்டும், மீதியை தன் வீடு கொண்டு போயும் சேர்த்துவிட்டான். மன்னனின் ராஜகுரு, "இந்த நகைச்சுவைச் செயல் மூலம் இராமன் உங்களை முட்டாளாக்கி விட்டான். அவனுக்கு சரியான தண்டனை கொடுக்க வேண்டும்" என்றார். அரசனும் அதற்கு உடன்பட்டு சமயத்தை எதிர்பார்த்திருந்தான். தென்னாலி ராமனுக்கும் இது தெரிந்து விட்டது. குருவைப் பழிவாங்க அவனும் ஒரு சந்தர்ப்பம் ஒன்றை எதிர்பார்த்திருந்தான். ஒருநாள் ராஜகுரு தன் ஆடைகளைக் களைந்து, கரையில் வைத்துவிட்டு, ஆற்றில் நீராடினார். இராமன் குருவின் ஆடைகளை எடுத்து விட்டான். குரு ஆடைகளைத் தரும்படி கெஞ்சி மன்றாடினார். இராமனோ "அரண்மனைவரை தன்னைத் தூக்கி சுமந்து வந்தால் ஆடைகளைத் தருவேன்" என்றான். குரு சம்மதித்தார். ராஜகுரு இராமனைத் தனது தோளின் மீது சுமந்தபடி அரண்மனை நோக்கி நடந்தார். அரசன் மேல்மாடியில் நின்று இதனைக் கண்டு மிகவும் கோபமடைந் தார். இராமன் ராஜகுருவை இப்படியா அவ மதிப்பது. ஏவ லாளர்களை நோக்கி "அதோ தோள் மீது ஏறி வருகின்றவனை நையப்புடை யுங்கள்" என்று ஆணையிட்டான்.

இதற்கிடையில் மறைவானதும் வளைவானதுமான பாதை முடக்கு வந்ததும் இராமன் குருவின் தோளிலிருந்து இறங்கி "ஐயோ! பெரியாரே நான் தவறு செய்துவிட்டேன் என்னை மன்னித்து விடுங்கள் நீங்கள் என்னை சுமந்த பாவம் போக, இனி நான் உங்களைச் சுமந்து வருகின்றேன்" என்று கூறி ராஜகுருவை தோள் மீது சுமந்து வந்தான். ஓடிவந்த ஏவலாளர்கள் அரசர் கட்டளைப்படி இராமனின் தோளிலிருந்த ராஜகுருவை நையப்புடைத்து விட்டார்கள் தென்னாலி ராமன் ஓடித்தப்பி விட்டான் அவ்விடம் வந்த அரசன் நடந்த செய்தி அறிந்து கொல் என்று சிரித்து விட்டான் ஏவலாளர்களும் விழுந்து விழுந்து சிரித்தனர். ராஜகுருவுக்கும் சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது. எல்லோரது கோபமும் மறைந்தது. மறுநாள் செய்தி கேட்ட நகரமே சிரிப்பால் அதிர்ந்தது.

ம. சுதர்சனா
தரம் 11B

கல்லாதவன் கற்ற கவி

வறுமையின் வதை முகாம் அந்தக் குடிசை. எலும்புக்கூடுகள் வாழ்வு நடத்துவது போலத்தான் கணவனதும், மனைவியினதும் உடற்கோலங்கள். ஒருநாள் அவள் தன் கணவனை நோக்கி "எம் பிராணபதியே! சோழன் குலோத்துங்கன் மீது ஒரு கவி பாடிப் பரிசில் பெற்றுவந்தால் என்ன?" என்றாள். கணவனோ, "மழைக்குக்கூட குருகுலக் கொட்டிலில் நுழையாத எனக்கு கவி வருமா?" என்றான். அவளோ "பாட்டும் தன்பாட்டில் வரும்" என்று கூறி எழுதுங்கள் என அடம் பிடித்தாள்.

உடன்பட்ட குடியானவன் ஏடும் எழுத்தாணியும் கொண்டு வெளியே புறப்பட்டான். வழியில் சிறுவர்கள் பலர் பொம்மை ஒன்றுக்கு மண்ணை ஊட்டி விளையாடிக் கொண்டிருந்தனர். பார்த்த குடியானவன் பாட்டின் முதலடியாக மண் உண்ணி மாப்பிளையே காவிறையே கூவிறையே என்று எழுதி முடித்து நடக்கிறான். இடைவழியில் ஒரு பெருச்சாளி ஓடிக் கோவிலில் நுழைகிறது. இரண்டாம் அடி கிடைத்து விட்டது. உங்களப்பன் கோயிற் பெருச்சாளி என எழுதி முடித்து வீடு திரும்பினான். பாட்டுப் பூர்த்தியாகாது வந்த அக் குடியானவனை மனைவி கன்னாபின்னா என்று ஏசினாள். அதனையும் குறித்தான். தென்னா மன்னா என்பதையும் சேர்த்தான். இறுதி அடி தேவை என்ன செய்வது அவன் வளர்த்த செம்மறி ஆடு ஒன்று அக் குடிசையினுள் நுழைந்தது. நான் காவது அடியும் கிடைத்து விட்டது. உன் ஆடு பொன் ஆடு செம்மறி நீ. பாட்டுப் பூர்த்தியாக ஒரு சொல் தேவை மனைவியிடம் வாசித்துக் காட்டினான். அவளுக்கோ மகிழ்ச்சி. "சோழங்கப் பெருமானே என்று முடியுங்கள்" என்றாள். அப்படியே பாட்டுப் பூர்த்தியாகிறது.

மண் உண்ணி மாப்பிள்ளையே
காவிரையே கூவிரையே
உங்களப்பன் கோவிற் பெருச்சாளி
கன்னா பின்னா தென்னா மன்னா
உன் ஆடு பொன்னாடு செம்மறி நீ
சோழங்கப் பெருமானே.

அடுத்த நாள் அரண்மனை நோக்கிப் பயணமாகிறான். அரசருக்கு கையுறையாக ஒரு கருப்பங்கட்டும் கொண்டு செல்கிறான். வழியில் இரவு ஒரு மடத்தில் தங்கினான். விடிந்ததும் வேறு ஒருவனது விறகுக் கட்டையையும் தவறுதலாக எடுத்துக் கொண்டு அரண்மனை அடைந்தான். பரிசுப் பொருளாக விறகுக் கட்டையும் கொடுத்து கவிதையையும் படித்தான் சபையில் ஒரே சிரிப்பு. அரசனுக்கோ கடுங்கோபம். அரசன் அவனைக் கொல்லும்படி ஆணையிட்டான். அறிவற்ற இந்த ஏழை சபையில் அழுது புலம்பினான். கம்பனின் மனம் இளகிவிட்டது. 'அரசே! இது போல் ஒரு புதுக் கவிதையை நீங்கள் கண்டதுண்டா? பாருங்கள் அதன் பொருளை. மண் உண்ணி மாப்பிளையே - மண் உண்ட திருமாலைப் போன்றவரே, காவிரையே - கற்புக சோலைக்கதிபதியே, கூவிரையே - பெருஞ் சிறப்புடையவரே, உங்களப்பன் கோவில் பெருச்சாளி - உங்கள் தந்தையார் விற் பயிற்சியில் பெரிய சிங்கத்தைப் போன்றவர், கன்னா - கொடையில் கன்னனே பின்னா - முன்வைத்த காலைப் போரில் பின் வைக்காதே, தென்னா - தென்னவனான பாண்டியனைப் போரில் வென்ற மா மன்னனே, உன் ஆடு பொன் ஆடு - உன் நாடு பொன் நாடு, செம்மறி நீ - செம்மையுள்ள மரணத்தின் சமத்துவத்தை உணர்ந்த தத்துவ சீலனே, எங்கள் சோழ மகாராசாவே! என்பது தான் இதன் பொருள் என்றார். அரசனின் சீற்றம் அடங்கவில்லை. "அப்படியாயின் விறகுக்கட்டைக் கையுறையாக எனக்குத் தந்தமை அவமானம் இல்லையா?" என்றார். "அதுவே இல்லை" என்றார், கம்பர். "எப்படிக் கூறுவீர்" என்றார் அரசன். "அரசரே தனது வீட்டில் அடுப்பு மூட்டிப் பல நாட்கள் ஆகிவிட்டன. அரசனது பணிக் கொடையால் தன் வீட்டு அடுப்பினுள் இந்த விறகுக் கட்டை எரிய வேண்டும் என்பது அவனின் குறிப்புப்பொருள். பணக்கொடை கேட்டவனுக்கு மரணக்கொடை அளிப்பது சோழ சாம்ராஜ்யத்தின் மரபல்ல, ஆதரவற்ற புலவுக்கும், கன்றுக்கும் உயிர் கொடுக்க நினைத்த தங்கள் மரபு, உயிர் எடுக்க நினைத்ததே தவறு" என்றார் கம்பர். எங்கும் மயான அமைதி. மன்னனின் முகத்தில் புன்முறுவல், மறுகணம் சுமக்க முடியாத திரவியத்தோடு அந்த ஏழை அரண்மனையை விட்டு இறங்கி வீடு நோக்கி நடக்கிறான்.

- நன்றி -

சோ. சங்கர்ராஜ்
2001 கலைப்பிரிவு (உ/த)

பாட்டி சொன்ன வீட்டு வைத்தியம்

இருமலுக்கு :

அதிமதுரம், சிற்றரத்தை, திப்பிலி, இஞ்சி, வெந்தயம், சீரகம், மஞ்சள் போன்றவற்றை மருந்துகளாக பயன்படுத்தலாம்.

கக்குவான் இருமலுக்கு :

சிறுவர், சிறுமியர்களை வாட்டிவதைக்கும் பலவகையான வியாதிகளில் கக்குவான் இருமலும் ஒன்றாகும். இது ஒட்டுவாரொட்டி என்று சொல்லப்படும் தொற்றுநோய் வகையில் ஒன்று. ஒரு சிறுமி, அல்லது சிறுவனுக்கு கக்குவான் இருமல் இருந்தால் அவர்களுடன் நெருங்கி விளையாடும் மற்றச் சிறுமி சிறுவனுக்கும் கக்குவான் இருமல் உண்டாகும்.

கக்குவான் இருமல் என்று தெரிந்தவுடனே மருந்து கொடுத்து வந்தால் அது வேகமாக அதிகரிக்காது. இதைத் தடுத்து நிறுத்தி விடலாம்.

இதற்கு மஞ்சள் நன்கு பயன்படக் கூடியதாக இருக்கிறது. மஞ்சள், சீயக்காய், நாயுருவிக்கதிர் இவைகளில் வகைக்கு அரை ரூபாய் எடை எடுத்து இவைகளை அம்மியில் வைத்து நன்றாக அரைத்து ஒரு சுத்தமான சட்டியில் போட்டு, மூன்று ஆழாக்குத் தண்ணீர் விட்டு, ஆழாக்களவிற்குச் சுண்டக் காய்ச்சி அதை வடிகட்டி வைத்துக்கொண்டு மூன்று பங்குகளாக்கி, காலை, பகல், மாலை ஆக மூன்று வேளைக்கு வேளை ஒரு பங்குவீதம் தொடர்ந்து கொடுத்து வந்தால் கக்குவான் இருமல் குணமாகும். கக்குவான் இருமல் ஆரம்பத்திலேயோ, இதைத் தயார் செய்து கொடுத்து வந்தால் அதன் வேகம் தணிந்து படிப்படியாகக் குணமாகும்.

நீரிழிவு குணமாக :

சுக்கு, அதிமதுரம், திப்பிலி, கோஷ்டம், வசம்பு, சீரகம், மஞ்சள், இந்துப்பு, மிளகு, கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், கடுகு, எலுமிச்சம் பழத்தின் மேற்றோல், நாவற் பழத்தின் கொட்டை, சிறுகுறிஞ்சாயிலை இவற்றின் வகைக்கு ஒரு ரூபாயெடை எடுத்து, அம்மியில் வைத்து அரைத்துக் கொண்டு ஒரு வாணலியை அடுப்பில் வைத்து ஆழாக்குப் பசுவின் நெய்யைவிட்டு, நெய் நன்றாக காய்ந்தவுடன் அதில் ஒரு தேங்காயின் பாதி மூடியைத் துருவி தேங்காய்ப் பூவைப் போட்டு நன்றாக வறுக்க வேண்டும். தேங்காய்ப்பூ வறுபட்டு சிவந்துவரும் சமயம், பத்து ரூபாயெடை சுத்தமான தேனை விட்டுக் கலக்கி அரைத்து வைத்திருக்கும் மருந்தை அதில் போட்டு கிளற வேண்டும். மருந்தும், நெய் தேனும் நன்றாகக் கலந்து வேகியதும் சீசாவில் போட்டு வைத்துக் கொள்ள வேண்டும். தினசரி காலை மாலை இரண்டு கழற்சிக் காயளவு லேகியம் சாப்பிட்டு வெந்நீர் குடித்து வந்தால் ஆரம்ப நீரிழிவு பூரணமாகக் குணமாகும்.

காய்ச்சலுக்கு :

திப்பிலி, கடுக்காய், மாசிக்காய், சாதிக்காய், சிற்றரத்தை போன்றவற்றை பயன்படுத்தலாம்.

குளிர் காய்ச்சல் குணமாக :

மாசிக்காயை உடைத்து அதில் பாதியளவைத் தூளாக்கி ஒரு சட்டியில் போட்டு நிலவேம்பு இலை ஒரு கைப்பிடியளவு அதில் போட்டு அடுப்பில் வைத்து இள வறுப்பாக வறுத்து அதில் காழாக்களவு தண்ணீரைவிட்டு, அரை ஆழாக்களவுக்குச் சுண்டக் காய்ச்சி இறக்கி வடிகட்டி காலை மாலை ஒன்றரை அவுன்ஸ் வீதம் சாப்பிட்டு வந்தால், குளிர் காய்ச்சல் குணமாகும்.

அம்மை நோய் வராதிருக்க :

அம்மை நோய் பரவிவரும் காலத்தில் ஒரு சட்டியில் ஒரு ரூபாயெடை வெந்தயத்தையும், அதே அளவு மிளகையும் உடைத்துப் போட்டு ஒரு ஆழாக்குத் தண்ணீரை விட்டு, அரை ஆழாக்காகச் சுண்டக் காய்ச்சி, வடிகட்டி காலை மாலை ஒன்றரை அவுன்ஸ் வீதம் தொடர்ந்து மூன்று நாள் சாப்பிட்டு வந்தால், அம்மை நோய் வராது தடுத்துக் கொள்ளலாம். ஆனால், கஷாயத்தை தினசரி தயார் செய்து கொள்ள வேண்டும்.

இ. சோதரன்
தரம் 12 விஞ்ஞானம்

பொது அறிவுத் துணுக்குகள்

சர்வதேச தினங்கள்

1. ஜனவரி 01 - உலக சமாதான தினம்
2. மார்ச் 08 - உலக மகளிர் தினம்
3. ஏப்ரல் 23 - சர்வதேச புத்தக தினம்
4. ஏப்ரல் 07 - உலக சுகாதார தினம்
5. மே 01 - உலகத்தொழிலாளர் தினம்
6. ஒக்டோபர் 06 - ஆசிரியர் தினம்
7. ஒக்டோபர் 15 - வெள்ளைப் பிரம்பு தினம்.
8. டிசம்பர் 01 - எயிட்ஸ் தடுப்புத் தினம்
9. டிசம்பர் 03 - ஊனமுற்றோர் தினம்
10. டிசம்பர் 10 - மனித உரிமைகள் தினம்

குறியீடுகள்

1. ஒலிவ் இலை - சமாதானம்
2. வெண் புறா - அமைதி
3. கறுப்புக் கொடி - துக்கம்
4. சிவப்பு முக்கோணம் - குடும்பக் கட்டுப்பாடு
5. செஞ்சிலுவை - மருத்துவ உதவி
6. சிவப்பு விளக்கு - ஆபத்து
7. மஞ்சள் கொடி - தொற்றுநோய் (கப்பலில்)
8. தலைகீழாகக் கொடி - துன்பம்
9. எலும்பு நடுவில் மண்டையோடு - ஆபத்து
10. கண்களி கட்டப்பட்ட பெண் சிலை - நீதி

அ. கஜன்
உ/த 2000

வசந்த நதித்துளி பொன் முடிசூட்ட

வந்தனை செய்தேன் வாழிய வித்தியா!!

ராஜா

இரும்பு ஓட்டும் தொழிலகம்

பலாலி வீதி,
உரும்பிராய்

அறிவாலயத்தின் அழகு நிலா நீ !

வித்தியா சிறக்க வாழ்த்தும் . . .

சுவீற்ஹனி

வீடியோ அன் போட்டோ

இல 96, யாழ் வீதி,
யாழ்ப்பாணம்.

அழகு மயில் தோகையென
அறிவிதழ் விரிக்கும் வித்தியா வாழ்க

சகலவிதமான பெயின்ற் வகைகள்
பைப் வகைகள் மற்றும் இதர
பொருட்களுக்கும் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

சிவா பிறதர்ஸ்

பலாலி வீதி கோண்டாவில்

பலசரக்குப் பொருட்கள், தும்புத் தயாரிப்புக்கள்,
நைலோன் கயிறுகள் இன்னும் பலவகைப்
பொருட்களுக்கும் நாட வேண்டிய ஒரே இடம்

யாழ்ப்பாண வணிக நிலையம்

உள்நாட்டு வெளிநாட்டுத் தொலைபேசி
அழைப்புக்களுக்கு

கிருஷ்ணா தொலைத் தொடர்பு நிலையம்

வித்தியாவை வாழ்த்துகிறோம்

கட்டிடப் பொருட்களுக்கு

யாழ்ப்பாண இரும்பகம்

உங்கள் சேவையில் இணைந்த
ஒரே ஸ்தாபனம்

302 (108)
87 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

கலையின் சிகரம்

அல்பா மிக்சர்

முக்கனிச் சாறோ முகம் காட்டும்
கலை மதியோ நீ
வித்தியாவை வாழ்த்தும்

சகலவிதமான மிக்சர், கச்சான்,
பருப்பு, பகோடா வகைகளை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்

பரமேஸ்வராச் சந்தி
பலாலி வீதி
யாழ்ப்பாணம்

வேந்தன் மகளாய் மிளிரும் வித்தியா
சிறப்புற வாழ்த்துகிறோம்

பிள்ளையார் எல்கறிக்கல்ல்

பலாலி வீதி கோண்டாவில்

சகலவிதமான மின்சார
உபகரணங்களையும்
நியாயமான விலையில்
பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய இடம்

வித்தியா மலரின் மகத்துவம் போல

நுட்பத் திறனே கைத்தொழில் தத்துவம் . . . .

வித்தியாலயை வாழ்த்தும்

யாழ் தொழில்நுட்ப நிறுவனம்

J.T.I

J.T.I

52/1 ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்

சூர்க்கா

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்

வித்தியாவின் அதிஷ்ட சூடர்

எங்கும் பரவட்டும்

கல்வி நிலையம்

பலாலி வீதி

உருப்பிராய்

ராஜ மகுடம் . . .
ரத்ன சிம்மாசனம் . . . .
ஆளுக பெண்மை
வாழி ! நீ வித்தியா

ரட்ணா
மோட்டோஸ்

266, ஸ்ரான்லி வீதி,
யாழ் நகர்.

நித்தியமாய் நிறை மதியாய்
வித்தியா நீ வாழி!

நியூட்டன்
அன்
எலெக்ரிக்கல்ஸ்



ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

விண்ணைத் தொட்டது வித்திய மலை
மனதைத் தொட்டது வித்தியா மலர்
வாழ்த்தும்

சிவசம்பு
களஞ்சியம்

இல 3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சொல்லோவியமே!
கூடும் திருமுடியே !!
பல்லாண்டு வாழி !!!
வாழ்த்தும்

நிதியா



நகை மாளிகை

56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

மனைப்பொருளியலில் விவசாயத்தின் பங்கு

மனையை மாட்சிமையுடன் நடத்தி வருபவள் மனையாள். மனையை மாட்சிமையுடன் நடத்துவதற்கு பொருள் வேண்டும். அதற்குத் தம்மால் இயன்ற முயற்சிகளை மேற்கொள்வது பெரும்பாலான மனையாள்களின் வழக்கமாகும். அதில், பெரும்பங்கு வகிக்கக் கூடியது விவசாய முயற்சிகளாகும். இவை பணத்தைத் தருவதுடன் மக்களுக்குச் சுவையான சுத்தமான உணவைப் படைப்பதற்கும் உதவுகின்றன.

விவசாயம் என்பது பயிர்ச்செய்கையும், விலங்கு வளர்ப்பும் இணைந்தது. இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. வீட்டிலே மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கை வீட்டுத் தோட்டம் என அழைக்கப்படுகின்றது. வீட்டிலே இடமிருந்தால் திட்டமிட்ட முறையில் ஒரு தோட்டத்தை அமைப்பது மிகவும் பயனுள்ளதாகும். வாழை, மரவள்ளி போன்ற சுலபமாகப் பராமரிக்கக்கூடிய ஒரு சில பயிர்களையே தொடர்ந்து பயிரிடுவது பயனற்றதாகும். புரதச் சத்தை வழங்கக்கூடிய அவரைக் குடும்பப் பயிர்கள், மரக்கறிகள், மிளகாய், வெங்காயம், சோளம், இலைக்கறி வகை, எலுமிச்சை, பப்பாசி, மாதுளை, கொய்யா, தோடை, வாழை போன்ற பழப் பயிர்கள், மரவள்ளி, கறுணை, இராசவள்ளி போன்ற கிழங்குப் பயிர்கள் வீட்டுத் தோட்டத்தில் பயிரிடுவதற்கு உகந்த பயிர்களாகும்.

அவரைக் குடும்பப் பயிர்களாவது பயறு, உழுந்து, பயற்றை, கௌபி, அவரையினங்கள். இவை எங்களுக்கு மிகவும் அவசியமான புரதச் சத்துள்ள உணவுப் பொருட்களைத் தருவதுடன் தாம் வளரும் மண்ணையும் வளப்படுத்துகின்றன. இதனால் நாம் பயிரிடும் நிலத்தை நான்கு துண்டுகளாகப் பிரித்து அதில் ஒரு அவரைக் குடும்பப் பயிர் மாறி மாறி வருமாறு திட்டமிட்டுப் பயிரிடுதல் நன்று.

இலைக்கறி ஒன்றை நாளாந்தம் எமது உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இதற்கு முருங்கை, தவசி முருங்கை, சண்டி போன்ற பல வருடம் நிற்கும் பயிர்களை வேலி ஓரங்களில் உற்பத்தி செய்து வைப்பது நன்று. முருங்கை இலை இரும்புச்சத்து நிறைந்தது. சண்டி இலை வாதரோகத்துக்குச் சிறந்தது. அடுத்து முளைக்கீரை இது விரைவில் பயன் தரும். வல்லாரையைப் பூச்சாடிகளில் குறோட்டன்களுக்குப் பதிலாக பயிரிடலாம். பொன்னாங்காணியை நீர்ப்பாசன வாய்க்கால் ஓரங்களில் பயிரிடலாம்.

மரக்கறிகளாக வெண்டி, கத்தரி, தக்காளி போன்றவற்றில் நான்கு பயிர்கள் இருந்தால் போதும். நாம் சுத்தமான நஞ்சுத் தன்மை இல்லாத மரக்கறிகளை ஒவ்வொரு நாளும் சுவைக்கலாம்.

உணவுக்குச் சுவையூட்டுவதற்குப் பச்சை மிளகாய் தினமும் எமக்குத் தேவைப்படுகின்றது. இதற்கு நாம் இரண்டு கொச்சி மிளகாய் கன்றுகளை வீட்டுத் தோட்டத்தில் அல்லது பூச்சாடிகளில் குறோட்டன்களுக்குப் பதிலாகப் பயிரிட்டு வைத்தால் மிளகாய் வாங்கும் சிரமமே இருக்காது.

அடுத்து பாகல், பூசணி போன்ற கொடி வகைகளை வேலியோரங்களில் பயிரிடலாம்.

பயிரிடலாம் என்று சொல்வது சுலபம். ஆனால் செய்கையில் இறங்கும்போது பல பிரச்சினைகள் வரலாம். அதில் பிரதானமானது பூச்சிகளின் தாக்கம். இதற்கு நாம் இரசாயன மருந்துகளைப் பாவிக்காமல் பின்வரும் வழிமுறைகளைக் கையாளலாம்.

1. தோட்டத்தைச் சுற்றி செவ்வந்திக் கன்றுகளை நடுதல்.

2. சவர்க்காரக் கரைசல் தெளித்தல் - ¼ கோப்பை சவர்க்காரத் தூளை ஒரு லீற்றர் நீரில் கொதிக்க வைத்து பின் 12 மணித்தியாலங்கள் குளிர வைக்க வேண்டும். அதனுள் ¼ மேசைக் கரண்டி மண்ணெண்ணெய் சேர்த்து தெளித்தல்.

3. உள்ளிச்சாறு தெளித்தல் - 100 கிராம் உள்ளியை அரைத்து ¼ லீற்றர் சுடுநீரில் 12 மணித்தியாலங்கள் ஊறவிட்டு பின்பு கசக்கிப் பிழிந்து வடித்தெடுத்து நான்கு லீற்றர் நீருடன் சேர்த்துத் தெளித்தல் வேண்டும்.

தேனீ வளர்ப்பு :

தற்பொழுது சுத்தமான தேன் பெறுவது சிரமமாக உள்ளது. வேம்பு, இலுப்பை பூமரங் கள் உள்ள இடங்களில் தேனீப் பெட்டியில் தேனீக்களை வளர்த்தால் சுத்தமான தேன் பெறலாம்.

கோழி வளர்ப்பு :

இது பெண்களுக்கு ஒரு சிறந்த பொழுது போக்குடன் மிகவும் பயன்தரக்கூடிய செயலுமா கும். பிள்ளைகளுக்கு முட்டை, இறைச்சி போன்ற சத்தான உணவுகளைத் தாராளமாகக் கொடுக்க லாம். மேலதிகமான முட்டைகளை விற்றுக் கைச்செலவுக்குப் பணம் பெறலாம். கோழிகள் வீட்டுத்தோட்டத்திற்கு எதிரிகள். எனவே தோட் டம் செய்பவர்கள் கோழிகளை அடைத்து வளர்த்தல் வேண்டும். அடிக்கடி அடைவைத்து புதிய குஞ்சுகளை உற்பத்திசெய்து விற்பனை செய்யலாம். ஒரு கோழிக்கு 12 முட்டைகள் வைப்பது சிறந்தது.

ஆடு வளர்ப்பு :

ஆடு ஏழையின் பசு என வர்ணிக்கப்படு கின்றது. குறைந்த முதலீட்டுடன் அதிக உண வுச் செலவில்லாமல் வளர்க்கக்கூடியது. தோட் டத்தில் வரும் பயிர் மீதிகள் வேலியிலுள்ள குழைகள் போன்றவற்றையும் குசினிக் கழிவுக ளையும் உணவாகக் கொடுக்கலாம். மேய்ச்சல் வசதி உள்ளவர்கள் பல ஆடுகளை வளர்க்க லாம். ஆட்டுப் பால் சத்துள்ள உணவாகும்.

மாடு வளர்ப்பு :

இது அதிக முதலீடு தேவைப்படும் முயற்சியாகும். தற்போது பாற்சபை பால் கொள் வனவு செய்வதால் சந்தைப்படுத்தல் சுலபமாக உள்ளது. பாற்சபை மானிய விலையில் உண வும் வழங்குகின்றது. அதனால் வசதியுள்ளவர் கள் மாடு வளர்ப்பை மேற்கொள்ளலாம். சிந்தி, பேர்சி போன்ற இனங்கள் யாழ்ப்பாணக் கால நிலைக்கு ஏற்ற சிறந்த கறவை இனங்களாகும்.

படித்துவிட்டு வேலையின்றி வீட்டிலிருக் கும் பிள்ளைகள் மேற்கூறிய முயற்சிகளுடன் பின்வரும் முயற்சிகளையும் மேற்கொண்டு பணம் சம்பாதிக்கலாம்.

1. **நாற்றுமேடையமைத்து நாற்றுக்களை உற்பத்தி செய்து விற்பனை செய்தல்**

   இது அதிக செலவின்றி 1 மாதத்தில் செய்யக்கூடியது. போகத்திற்கு ஏற்ற பயிர் களை உற்பத்தி செய்ய வேண்டும். நல்ல இன விதைகளைப் பயன்படுத்தவேண்டும். நோயற்ற ஆரோக்கியமான நாற்றுக்களை உற்பத்தி செய்ய வேண்டும்.

2. **ஒட்டுக்கன்றுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்தல்**

   நல்ல இன மா, தோடை, அழகான பூச்செடிகள் போன்றன ஒட்டி விற்பனை செய்யலாம். எமது சூழலில் விற்பனை வசதி உள்ளதா மக்கள் வாங்குவார்களா என்பதைத் திட்டமிட்டு உற்பத்தி செய்தல் வேண்டும்.

3. **கீரைப் பயிர்ச் செய்கை**

   இதுவும் அதிக சிரமமின்றி உற்பத்தி செய்து, விரைவில் பணம் பெறக்கூடிய முயற்சியாகும்.

ப. கோமதி
கலைப்பிரிவு

யூரோ (EURO)

யூரோ என்பது ஐரோப்பிய ஒன்றியத் தைச் சேர்ந்த பல நாடுகளின் இணக்கத்துடன் அந் நாடுகள் தத்தமது நாணயங்களுக்குப் பதிலாக பொதுவாக ஏற்றுக் கொண்டுள்ள நாணய அலகாகும். இந் நாணயத்தை ஐரோப் பிய ஒன்றியத்தைச் சேர்ந்த பதினொரு நாடு கள் பின்பற்றுகின்றன. அவையாவன ஜேர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், போத்துக்கல், எஸ்பெயின், நெதர்லாந்து ஆகியவையாகும்.

ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த நாடுக ளாகிய ஐக்கிய ராட்சியம், சுவீடன், டென்மார்க், கிறிஸ் ஆகிய நாடுகள் இந் நாணயத்தைப் பயன்படுத்த முன்வரவில்லை. யூரோ நாணயத் தின் அலகு 5, 10, 20, 50, 100, 500 யூரோக் கள். இதன் சிறிய அலகு சதமாகும். இவை 1, 2, 5, 10, 50 எனப் பெறுமானமுடையவை யாகும். இந்த நாணயத்தை நிர்வகிக்கும் அமைப்பு ஐரோப்பிய நாணய ஒன்றியமாகும்.

இந்நாணயத்தை வெளியிடுவதற்கு விரும்பும் நாடுகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும். அதாவது,

* வகுபடாத வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக் குறை 3% க்கு மேற்படலாகாது.
* பணவீக்கப் பெறுமதியானது 1.5% க்கு மேற்பட லாகாது.
* அரசின் மொத்த படுகடன் மொத்த தேசிய உற் பத்தியில் 60% க்கு மேற்படலாகாது.
* நீண்டகால கடன்வட்டி வீதம் 2% க்கு மேற் படலாகாது.
* நாணயத் தளம்பல் ஐரோப்பிய நாணய ஒன் றியம் விதிக்கும் பிரமாணங்களிற்கும் உட்பட்ட தாக இருத்தல் வேண்டும்.

இந் நாணயமானது ஒரே நாணயமாக காணப்படுவதனால் இந்த நாடுகளிடையே பய ணம் செய்பவர் நாணய மாற்றம் செய்ய வேண் டியதில்லை என்பதுடன் நாடுகளிடையே கொடுப் பனவு மிகவும் வேகமாகவும் குறைந்த செலவி லும் மேற்கொள்ளப்படுவதுடன் நாணயத் தளம் பலால் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு இட ம ளிக்க மாட்டாது என்பதால் இவை இன்னும் முன்னேற்றமடையக் கூடிய சாத்தியமுண்டு.

யூரோ நாணய அறிமுகத்தால் ஏனைய நாடுகளுக்கு சாதகமான விளைவுகளும் பாதக மான வினைவுகளும் ஏற்படுகின்றன. யூரோவில் வர்த்தகம் செய்வதனால் நாணய தளம்பலால் ஏற்படும் பாதிப்பு குறைவு என்பதனால் நாடுக ளிடையே வர்த்தகப் பழக்கம் அதிகரித்து முத லீட்டு வாய்ப்பு அதிகரித்து புதிய சந்தைகள் திறக்கப்படும். இதனால் விலை மிகத் தெளி வாகக் காணப்படுவதுடன் நாணயம் கடிதம் போன்றவற்றின் பரிமாற்றச் செலவுகள் குறைக் கப்படும். இதனால் இலங்கை போன்ற அபிவி ருத்தி அடைந்துவரும் நாடுகள் உல்லாசப் பய ணிகளைக் கவர்ந்து இதனை சம்பாதிக்கலாம். ஏனெனில் இந் நாணயத்துக்கும் இலங்கை ரூபாவுக்குமுள்ள நாணயமாற்று வீதம் ஒரு யூரோ 78 - 80 ரூபாவுக்கு சமனாகும்.

இந் நாணயத்தின் அறிமுகத்தால் வங்கி களின் வருமானம் குறைவடையும். ஏனெனில் இந் நாணயம் இந்த நாடுகளிடையே எடுத்துச் செல்லப்படுவதனால் நாணயமாற்று செய்ய வேண்டிய தேவையில்லை. இதனைவிட பல் தேசிய வங்கிச் செயற்பாடுகள் அனைத்தும் யூரோ நாடுகளின் செயற்பாடுகளுக்கேற்ப தரம் உயர்த்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.

இந் நாணயத்திற்கு யூரோ என்னும் பெயர் 1995ம் ஆண்டு சூட்டப்பட்டது. ஆனால் இது 1999ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி அறி முகப்படுத்தப்பட்டது. இந் நாணயத்தின் தாள் மற்றும் குற்றிகள் 2002ம் ஆண்டு யூலை மாதம் 1ம் திகதி தான் அறிமுகத்துக்கு வரும் என்று கூறப்பட்டுள்ளது.

இந் நாணயமானது ஐக்கிய அமெரிக்கா வின் ஒரு டொலருக்கு 1.16 யூரோ சமனாகும். இந் நாணயம் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக உலகின் சக்தி வாய்ந்த நாணயமாக திகழும் என நிதி வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. உல கின் கொடுக்கல் வாங்கல்களில் அரைவாசிக்கு மேல் டொலரில் தான் நடைபெறுகின்றன. யூரோ அறிமுகத்தினால் 34 வீதமான வாணிபம் யூரோ வுக்கு மாற்றப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படு கின்றது. பிணைச் சந்தை ஐக்கிய அமெரிக்கா விலே அபிவிருத்தி அடைந்திருந்தாலும் வங் கித்துறை ஐரோப்பாவிலே வளர்ச்சியடைந்துள் ளது. இதனால் யூரோவின் அறிமுகத்தால் பங்கு பிணைச் சந்தை மேலும் விருத்தியடைவதற் கான சாத்தியம் இருப்பதாக எதிர்பார்க்கப்படு கின்றது. இதனைவிட, யூரோவின் அறிமுகம் அமெரிக்க டொலரினதும் யப்பான் யென்னின தும் செல்வாக்கை மங்கச் செய்யும் என எதிர் பார்க்கப்படுகின்றது. மொத்தத்தில் யூரோ நாண யம் மேற்கில் தோன்றிய உதயம் என்றே கூற லாம்.

T. யோகானந்
2000 வர்த்தகப் பிரிவு

உழைப்பது சன்மானம் பெறுவதற்கென்று நினைத்தால்
அந்த உழைப்பு கடினம் போலத் தோன்றும்

உயிர்ப் பல்வகைமைக் காப்பு

நாம் வாழும் இப் பூமியானது ஏறத்தாழ 4.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் உருவாகியது. இப்பூமியில் உயிரினங்களும் உயிர் அற்ற காரணிகளும் ஒன்றுடன் ஒன்று இடைத்தாக்கம் புரிந்து சூழல் தொகுதியை சமநிலையில் பேணுகின்றன. எனவே உயிரியல் கூறுகளில் ஏதாவது ஒன்றில் ஏற்படும் பாதிப்பானது முழுச் சூழற் தொகுதியின் சமநிலையையும் குழப்பமடைவிக்கின்றது.

இன்று பூமியில் வாழும் உயிரினங்கள் யாவும் மூதாதைக் கலம் ஒன்றில் இருந்து கூர்ப்படைந்து தோன்றியவையாகும். இவ்வாறு தோன்றிய உயிரினங்களே உயிர்ப் பல்வகைமையில் அடங்குகின்றன. இவ் உயிரினங்கள் ஒன்றில் ஒன்று தங்கி வாழ்கின்றது என்பதை உணவு வலையானது தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. எனவே இவ் உணவு வலையில் ஏற்படும் சிறுகுழப்பமும் உயிரினங்களின் வாழ்க்கையில் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஒரு குழலில் இருந்து ஓர் இனம் முற்றாக அழியுமாயின் அவ்வினத்தையோ அதன் பாம்பரை அலகுகளையோ மீள உருவாக்கிக் கொள்ள முடியாது. ஒரு இனம் தோன்ற பல மில்லியன் வருடங்கள் எடுக்கின்றன. எனவே இவ்வினத்தை அழியாது காத்தல் வேண்டும். இவ் உயிர்ப் பல்வகைமை அழிவானது இயற்கையாகவோ செயற்கையாகவோ நடைபெறலாம்.

இயற்கையாக எரிமலை உருவாதல், வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, காட்டுத் தீ, புயல், சூறாவளி, பெரிய விண்கற்கள் பூமியுடன் மோதுதல் போன்றவற்றினாலும் செயற்கையாக பெரும்பாலும் மனிதனின் தலையீட்டினாலும் இன அழிவு ஏற்படுகின்றது.

அவையாவன பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை, அபிருத்திட்டங்கள், நகர அபிவிருத்தி, போக்குவரத்துப் பாதைகள், தொழிற்சாலை, வெட்டுமரங்கள், சேனைப் பயிர்ச் செய்கை என் பனவற்றுக்காக இயற்கைக் காடுகள் அழிக்கப்படுதல், உணவுத் தேவைக்காக, பொழுது போக்கிற்காக பெறுமதி வாய்ந்த ஒடுகள், தந்தம், தோல் என்பவற்றிற்காக விலங்கினங்கள் மிதமிஞ்சிய அளவு வேட்டையாடப்படுதல், அதிகரித்த விவசாய இரசாயண பாவனையாலும் செயற்கை உரங்கள், பீடை நாசினிகள், களை நாசினிகள் பாவனையாலும் நீர், நிலம், வளி மாசடைதல், இவற்றைத் தவிர அழகுத் தாவர வளர்ப்பு, மூலிகைத் தாவர வளர்ப்பு, பெறுமதி மிக்க வெட்டு மரத் தேவை என்பவற்றிற்காக தேர்ந்தெடுத்து சில தாவரங்கள் மட்டும் வளர்க்கப்படுவதனாலும் உயிர்ப்பல்வகைமை அழிவு ஏற்படுகின்றது. ஏனெனில் உயிரினங்களுக்கு வாழிட இழப்பு, வாழிடக் குழப்பம், வாழிடம் துண்டுபடல் போன்றன ஏற்படுகின்றன.

அத்துடன் மனித தலையீட்டினால் ஏற்படும் செயற்கை அழிவுகளினால் உலக வெப்ப நிலை எதிர்காலத்தில் 1-3° செல்சியசினால் அதிகரிப்பதுடன் இதனால் கடல் மட்டம் 1-2 மீற்றர் உயர்வு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுவதனாலும் முழுச் சூழற்தொகுதியிலும் கால நிலை மாற்றம் ஏற்படுவதுடன் நிலம் வாழ் உயிரினங்களுக்கு வாழிடப் பற்றாக்குறை ஏற்படும். எனவே உலகில் உயிர்ப் பல்வகைமையின் அழிவைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளன. அவ் நடவடிக்கைகள் தேசிய பூங்காக்களை அமைப்பதன் மூலம் ஆபத்தை எதிர்நோக்கி அழிவடையும் நிலையில் உள்ள விலங்கினங்களையும் செயற்கையாக இனம் பெருகச் செய்து பாதுகாத்தல், மீள வனமாக்கல், கடற்கரைப் பாதுகாப்புச் சட்டம், சரணாலயங்கள் அமைத்தல், சட்டவிரோதமாக தாவர, விலங்குப் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுத்தல், நாட்டில் உள்ள இயற்கைக் காடுகளைப் பாதுகாத்தல் போன்றனவாகும்.

மனிதனும் தன்னுடைய தேவைகளை நிறைவு செய்வதற்கு ஏனைய உயிரினங்களிலேயே அதிகம் தங்கியுள்ளான். எனவே மனித சந்ததி தொடர்ந்து நிலைபெற உயிர்ப் பல்வகைமை காக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

த. குணேந்திரன்
2000 (உ/த) விஞ்ஞானம்

எமது கல்லூரியின் உடற்பயிற்சி அணி

இல்ல மெய்வல்லுனர் போட்டி - 2000



அணிவகுப்பு மரியாதையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர்

With Best Compliments From

R K N

R K N

Collection





151, Keyzer Street,

Colombo - 11

☎ 335466

Fax : 332296

உரும்பிராய் இந்துவின்
சாதனை இமயம், சந்தன சாகரம்
வித்தியா என்றாம் வாழிய நீடுழி!

மங்கை ஸ்ரோர்ஸ்

கரந்தன் — நீர்வேலி

ஆலய பூஜை அருட்பிரவாகம்
வித்தியா சேவை வரப்பிரசாதம்

சிவசக்தி பேக் ஹவுஸ்
பல்பொருள் வாணிபம்

உரும்பிராய்ச் சந்தி

பதாதி கேசமெல்லாம் வித்தியா
பைந்தமிழ் உன் கீதமெல்லாம்
வாழ்த்தும்

இந்திரா சலூன்

உரும்பிராய்ச் சந்தி

வித்தியா மலருக்கு சீர்த்திகள்
பெருகட்டும்

சுமனன்

வர்த்தக நிலையம்

உரும்பிராய் வடக்கு

வித்தியா விளக்காக ஒளிர
எமது வாழ்த்துக்கள்

மேலைநாட்டு வாத்திய இசைக்
கருவிகள், கூடாரங்கள், மின்
உபகரணங்கள் அனைத்தையும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள

இல 114, கஸ்தூரியார் சாலை
யாழ்ப்பாணம்

தேவ ஆசிர்வாதம் சுபஸ்த்து
வித்தியா லட்சியம் சுகினோ
பவந்து மலர் சிறக்க வாழ்த்தும்

ஆசிர்வாதம்
ஸ்ரோர்ஸ்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

தென்னங் கிளியாம்த் தேன்மொழி பேசும்
வெள்ளி நிலாவே வித்தியா வாழி!
வாழ்த்தும்

மனியம் ஸ்ரோர்ஸ்

பாலா மில்

பலாலி வீதி, உரும்பிராய்

பொர்ணமி நிலவின் நவின தாஜ்மகால்
நீ வித்தியாவை வாழ்த்தும்

சிந்து
வர்த்தக நிலையம்

பலாலி வீதி, உரும்பிராய்ச் சந்தி

சத்தியா ஜோதியே!

வித்தியா உனது சாஸ்வத பாமைக்கு வாழ்த்தும்

அம்பிகை அழகம்

உரும்பிராய் கிழக்கு

உரும்பிராய்

நதி போல் நடந்தாய் . . .

மலைபோல் உயர்ந்தாய் . . .

உயிராய் இணைந்தாய் . . .

உதிரா மலர் நீ

வித்தியாவை வாழ்த்தும்

சஸ்வரி மரக்காலை

அன்

மரத் தொழிலகம்

பரமேஸ்வராச் சந்தி,

திருநெல்வேலி

With Best Compliments From

Excellence
Quality
Value

INTERMARC

Dealers in Textiles
Specialists in Cut Pieces

70 D, 3rd Cross Street,
Colombo -11

☎ 074- 714176

இணையம்

**"இணையம் என்பது கரை தாண்டிய கடல் அலை போன்றது.
இதில் நீந்தத் தெரியாதவர்கள் அனைவரும் மூழ்கடிக்கப்படுவர்"**

உலகம் இன்று தகவல் யுகத்தில் சுழன்று கொண்டிருக்கின்றது. தகவல் யுகத்தில் பிரதான சாதனமாக இணையம் விளங்குகின்றது. இணையம் என்பது பல்வேறு வித்தியாசமான கணனி வலைகளின் உலகளாவிய வலைப் பின்னலமைப்பு எனலாம். இந்த அமைப்பில் உலகம் எங்கும் பரந்து காணப்படுகின்ற இராணுவ கல்விசார் மற்றும் பல்வேறு நிறுவனங்களிலும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களின் வீடுகளிலும் அமைந்துள்ள கணனிகளுடன் தொடர்பு கொள்ளக் கூடியதாக இணைக்கப்பட்டுள்ளது. இந்த இணையத்தினால் பொதுமக்கள், வர்த்தகர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் பயனடைகின்றார்கள். நாளாந்தம் பல்லாயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்த இணையத்தில் இணைகின்றனர். இந்த இணையமானது வேறொரு நோக்கத்தில் நோக்கப்படும்போது நாடுகளை எல்லை கடந்த பல்வேறுபட்ட இனமத கோட்பாடு, பழக்க வழக்கங்கள், பாரம்பரிய மக்களையும் இணைத்துள்ளது எனக் கருதப்படலாம்.

வருடம் தோறும் இரட்டிப்பாக வளர்ச்சியடைந்து வரும் இணையத்தில் 2000ம் ஆண்டில் உலகிலுள்ள சகல மக்களும் இணையத்தில் இணைந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனாலும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்கள் இணையத்தில் இணைவது சந்தேகமே.

1960 களின் இறுதிக் காலத்தில் அமெரிக்க சோவியத் நாடுகளிடையேயான பனிப்போர் மூட்டத்தில் அமெரிக்க இராணுவமானது தனது எதிரியான சோவியத்தின் சாத்தியமான நியூக்குளியன் குண்டு தாக்குதலில் இருந்து தனது முக்கியமான இராணுவ தகவல்களை பாதுகாத்துக் கொள்ள ஒரிடத்திலுள்ள தகவல்கள் அழிக்கப்பட்டாலும் ஏனைய கணனிகளில் உள்ள தொடர்பினூடாக இடையூறின்றி தகவல்கள் பரிமாற்றம் இடம்பெறும் வண்ணம் ஒரு இணையத்தை உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகளை ஈடுபடுத்தியது. இதன் விளைவாகவே 1969 இல் Arpanet தோற்றம் பெற்றது. இன்றைய Internet இன் அடித்தளமாக Arpanet நிகழ்கிறது. இணையத்தில் இணைவதற்கு கணனி Modem தொலைத் தொடர்பு அமைப்பு மென்பொருள் என்பன அவசியமாகும்.

இணையத்தின் பல வகையான சேவைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஆரம்பத்தில் File Transfer (F.T.P) Remotelogin என்பனவும் பின்னர் மின் அஞ்சலும் இன்று W.W.W உம் இணையத்தின் பிரதான சேவைகளாக காணப்படுகின்றது. இவற்றைத் தவிர மற்றும் Internet Realaudio Read Nedio Internet Relay Chort என்பனவும் உள்ளன. Internet phone இணையமானது உலக மக்களின் சொத்து என்பதால் புதிது புதிதாக சேவைகளை ஆராட்சியாளர்கள் காலத்துக்குக் காலம் அறிமுகப்படுத்திக் கொண்டே இருப்பார்கள்.

இணையத்தில் அடிப்படைச் சேவையாக E-mail விளங்குகின்றது. சில நாடுகள் இணையத்தில் இச் சேவையை மாத்திரம் பெற்றுக் கொள்கின்றது. E-mail ஆனது கணனியினூடாக நடைபெறும் ஒரு அஞ்சல் சேவையாகும். ஒரு கணனியில் E-mail பதிவுள்ள ஒருவர் தபால் ஒன்றை அனுப்ப முடியும். இப்போது தபால் மட்டுமன்றி அறிக்கைகள் ஆவணங்கள் படங்கள் என்பவற்றைக் கூட இணைத்து அனுப்ப முடியும். இதன் மூலம் குறைந்த செலவில் விரைவாக தகவல்களை பல முகவரிகளுக்கு அனுப்பலாம். ஒரே நேரத்தில் மற்றைய சேவையான W.W.W வில் என்ன விதமான தகவல்களையும் ஒரு கணப்பொழுதில் தரக்கூடியபலவாறு பல கோடிக்கணக்கான வெப்தளங்களை தன்னகத்தே தாங்கிய இந்த W.W.W ஆனது உலகில் மாபெரும் தகவல் களஞ்சியமாக எம்முன் விரிந்து காணப்படுகின்றது.

W.W.W இல் பொதுமைப்படுத்த இயலாத வாறு எண்ணிலடங்கா தகவல்கள் உள்ளன. தொழிற்கல்வி, மொழி, விஞ்ஞானம், தொழில் நுட்பம், வாழ்க்கை கல்வி, மருத்துவ தகவல்கள், வியாபாரத் தகவல்கள் என்னென்ன தேவையோ அத்தனை விதமான கல்வி வசதிகளும் இந்த W.W.W வில் கிடக்கின்றன.

இவற்றோடு ஒழுக்க சீர்கேடுகளை உருவாக்கும் ஆபாச தகவல்களும், பெரும் அழிவை ஏற்படுத்தும் இராணுவ தகவல்களும் அடங்கியுள்ளன.

பரந்த உலகை குறுகிய வட்டத்தில் கொண்டு வர முடியும். இவ் இணையத்தினுள் நாமும் இணைந்து எமக்கு தேவையானவற்றை பயன்படுத்துவதன் மூலம் உலக இணையத்துடன் ஒன்று சேருவோம்.

செ. மால்மருகன் 2000 கணிதம்
போ. தர்மேந்திரா 2000 வர்த்தகம்

கணனியும் அதன் வகைகளும்

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்பது திருவள்ளுவர் வாக்கு. கல்வி கடல் போன்றது. கல்வியினால் மனிதன் முன்னேறுகின்றான். இன்று கல்வியானது பரந்து விரிந்து சோலையாக மாறியுள்ளது. அச்சோலையிலிருந்து எழும் வாசனை தான் இன்று கணனியாக உயர்ச்சி பெற்றுள்ளது.

இருபது நூற்றாண்டுகளைக் கடந்து புதிய மிலேனியத்தில் இப்போது நாம் உள்ளோம். இந்த மிலேனியத்தில் எமது வாழ்வியல் நடைமுறைகள், செயற்பாடுகள் யாவும் முற்றுமுழுதாகவே கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவான விடயமாகும். இன்றைய கல்விச் சமூகம் அதற்கான அத்திவாரத்தைத் தூரதரிசனத்துடன் அமைத்துச் செயற்படுத்த ஆரம்பித்திருக்கிறது.

கணனி என்பது மிகவும் சிக்கலான மின்னுபகரணமாகும். சரியான தகவல்களைக் கொடுக்குமிடத்து அவற்றை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள தகவல்களைத் துல்லியமான விடைகளை வழங்கக்கூடிய ஞாபக சக்தியுடன் இயங்கும் இயந்திரமேயாகும். இது 1942ம் ஆண்டு அமெரிக்கரான Charls Babage என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது.

முதலாவது கணனியை வடிவமைத்த நிறுவனம் IBM ஆகும். இது இன்றைய வாழ்வில் மிக முக்கியமான அங்கமாக மாறிக் கொண்டிருக்கிறது சாதனைகள் புரிந்துவரும் இன்றைய விஞ்ஞான உலகில் அதிசயிக்கத்தக்க சாதனைகள் யாவற்றிற்கும் உறுதுணையாகவும், பக்க பலமாகவும் கணனி இருந்து வருகின்றது. அபாரமான ஞாபக சக்தியுடன் காலத்தை மிகவும் குறுக்கித் தெளிவான முடிவுகளைத் தர வல்ல இந்த கணனியின் வேகம் மின்சார ஒளியின் வேகத்திலும் அதிகமாகும்.

கணனிகளின் வளர்ச்சி, அளவு, பெறுமதி, வேகம், தகவல்களைச் சேமிக்கும் விதம் என்பவற்றைப் பொறுத்து அவற்றைப் பலவகைகளாகப் பிரிக்கலாம்.

கணனியின் பரிணாம வளர்ச்சியைப் பொறுத்து Generation 1, 2, 3, 4, 5 பரிணாமங்கள் என வகைப்படுத்தலாம். அவற்றின் அளவு, விலை, வேகம் (Size, Cost, Speed) என்பவற்றைப் பொறுத்து 5 வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன : Portable Computer, Micro Computer, Mini Computer, Mainframe Computer, Super Computer

அவற்றின் பாவனையைப் பொறுத்து, பொதுத் தேவைக்காகப் பயன்படுத்தும் கணனி, விசேட தேவைக்காகப் பயன்படுத்தும் கணனி என இரு வகைப்படுத்தலாம். (General Purpose, Super Purpose)

தகவல்களைப் பொறுத்துக் கணனியை Hybrid, Digital, Analog என 3 வகையாகப் பிரிக்கலாம்.

Super Computer ஆனது அதிக தகவல்களைச் சேகரிப்பதற்கோ அல்லது மிகவும் பாரிய கணித்தல்களை மிகவும் வேகமாகச் செய்வதற்கோ பயன்படும்.

Mini Computer ஆனது Mainframe Computer இற்கு அடுத்தபடியான Computer ஆகும். இதன் பெறுமதி அண்ணளவாக 10000 மில்லியனிற்கும் 100000 மில்லியனிற்கும் இடைப்பட்ட அமெரிக்க டொலராகும்;.

Micro Computer ஆனது மிகவும் சிறிய கணனியாகும். இதனைப் Personal Computer (PC) எனவும் அழைப்பர். அதாவது ஒருவர் தனது தனிப்பட்ட பாவனைக்காகப் பயன்படுத்தும் கணனியாகும். சிறிய மேசையில் வைத்து இயக்கக்கூடிய இக் கணனியே இன்று எல்லோராலும் பாவிக்கப்படும் கணனியாகும்.

Portable Computer ஆனது நாம் எங்கு செல்லும் போதும் எடுத்துச் செல்லக்கூடிய ஒரு சிறிய பெட்டி போன்ற கணனியாகும். இதன் நிறை அண்ணளவாக 0.5kg இற்கும் 7kg இற்கும் இடைப்பட்டதாகும். இதனை Laptop Computer, Palmtop Computer என இரு வகைப் படுத்தலாம்.

காலத்தின் வளர்ச்சியில் கணனியின் தரமும் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டு போகின்றது. "அரிது அரிது கணனியில் தவறு கண்டுபிடித்தல் அரிது · அரிதிலும் அரிது சரியான தகவல்களைக் கொடுக்குமிடத்து தவறு கண்டுபிடித்தல்"

சீ. கலைவாணி

2000 (உ/த) கணிதம்

கர்நாடக இசையின் தோற்றமும் வளர்ச்சியும்

இந்தியப் பண்பாட்டு மரபில் முடி மணியாக விளங்குவது இசைக் கலையாகும். மிகவும் தொன்மையான காலத்தில் இருந்து இந்தியாவில் இசை மரபானது பிற நாடுகளில் இல்லாதவாறு வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

கி.பி. 3ம் நூற்றாண்டில் எழுந்த சிலப்பதிகாரம் எனும் நூலில் ஆய்ச்சியர் குரவை எனும் பகுதியில் ஆயர் மகளிர் பாடிய பாடலுக்கு முல்லைத் தீம்பாணி எனப் பெயரிடப்பட்டுள்ளது. முல்லை நிலத்தில் தோன்றிய இவ் இசையில் இடம்பெற்ற ஸ்வரங்கள் தற்கால மோகன ராக ஸ்வரங்கள் எனக் கூறப்படுகின்றது. மிகத் தொன்மை வாய்ந்த வேதத்தின் மரபில் வந்ததுதான் நம் இசை மரபு. சுமார் கி.மு. 2000 ஆண்டளவில் வேதத்தை ஓதுவதற்கு ஏற்பட்ட சாமகானம் நம் இசையின் ஆரம்பம் எனக் கூறப்படுகின்றது.

கி.பி. 5ம் நூற்றாண்டின் மதங்கமுனிவர் "பருகதேசி" எனும் சங்கீத கிரந்தத்தில் இருந்து அக்கால ராக பத்ததியை விளக்குகிறார். கி.பி.8ம் நூற்றாண்டில் நாரதரால் இயற்றப்பட்ட சங்கீத மகரந்தமும், 12ம் நூற்றாண்டில் ஜெயதேவரின் கீத கோவிந்தமும் இசைக் கலையின் வளர்ச்சியைக் காட்டுகின்றன.

13ம் நூற்றாண்டில் சாரங்க தேவரால் இயற்றப்பட்ட சங்கீத ரத்னாகரம் சங்கீதத்துக்கென அமைந்த முதல் நூல் ஆகும். இதில் நாதம், சுரம், தாளம், ராகம், இசைக்கருவி, பாடகரின் குணாதிசயம் குறைபாடு போன்றவை விபரிக்கப்பட்டுள்ளன. 14ம் நூற்றாண்டில் ஹரி பாலர் இயற்றிய சங்கீதம் சுதாகாரம் என்ற நூலில் கர்நாடக இசை, ஹிந்துஸ்தான் இசை என்ற இரு பிரிவுகள் முதன் முதலில் கூறப்படுகின்றன. 15ம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழில் அதுவரை வழக்கில் இல்லாத தாளம் பல அறிமுகமாகின. "சந்தப் பாவலர் பெருமானின்" பாடல்களில் 35, 175, 108 தாளங்களாகியவற்றின் அமைப்புக்களை இவரது பாடலில் காணலாம். 16ம் நூற்றாண்டில் புரந்தரதாசர் இசைப் பயிற்சிக்கு ஏற்ற ஸ்வர வரிசைகள், அலங்காரங்கள், கீதம் போன்ற வற்றை இயற்றினார். இக்காலத்தில் வேவ் கடதாசி 72 மேள கர்த்தாக்களை கணக்கிட்டார் எனக் கூறப்படுகின்றது.

17ம் நூற்றாண்டில் சோழநாதர் என்ற இசைக் கலைஞர் "இராக விபோதம்" எனும் இசை இலக்கண நூலை இயற்றினார். 1635ம் ஆண்டு கர்நாடக இசை வளர்ச்சிப் படியில் ஒரு புத்துணர்ச்சி அளிக்கும் முகமாக வேங்கடமதியின் "சதுர்தண்டிப் பிரகாசிகை" எனும் இலக்கணநூல் தோன்றியது. கி.பி. 1650ல் அக்கோபிலர் "சங்கீத பாரியாதம்" எனும் நூலை வெளியிட்டார்.

18ம் நூற்றாண்டில் அருணாசலக் கவிராயர் இசை வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றினார். இக்காலத்தில் திரிகூடராசப்பக்கவிராயரின் குற்றாலக் குறவஞ்சி கோவிந்தாசாரியாரின் "சங்கீர்க சூடாமணி" இசை வளர்ச்சிக்குப் பங்காற்றின. இக்காலப் பிற்பகுதியில் கர்நாடக சங்கீத துறையின் பொற்காலம் எனப் போற்றப்படும். சங்கீத மும்மூர்த்திகள் எனப் போற்றப்படும் தியாகராஜ சுவாமிகள், சியாமா சாஸ்திரிகள், முத்துசுவாமி தீட்சகர் ஆகியோர் இத் துறைக்குப் பெரும் சாதனை செய்துள்ளனர். 19ம் நூற்றாண்டில் கேரளத்தில் ஸ்வாதித் திருநாள் வடமொழி, மலையாளம், தெலுங்கு, ஹிந்தி, மணிப்பிரவாள நடையிலும் (பல மொழிகளில் வருதல்) பல உருப்படிகளை இயற்றி உள்ளார். ராமநாதபுரம் ஸ்ரீனிவாச ஐயங்காரும் பட்டணம் சுப்பிரமணிய ஐயரும் தெலுங்கிலும்,

கவிக்குச்சபாரதி, மாயூரம் வேதநாயகம்பிள்ளை, கோபால கிருஷ்ணபாரதி, ராமவிங்க சுவாமி, சிவன் நீலகண்டசிவன் முதலிய பலர் தமிழிலும் பாடல்களை இயற்றி இசையை வளர்த்தனர்.

20ம் நூற்றாண்டில் சுப்பிராமி தீட்சிதர் சங்கீத சம்பிரதாய பிரதர்சினி எனும் ஓர் இசை நூலை இயற்றினார். இதில் பல உருப்படிகளும் இசைப் புலவரின் வரலாறும் இடம்பெறுகின்றன. இதன்பின் விபுலானந்த அடிகள் இயற்றிய யாழ் நூல் இராப்சாகிப் கோதண்டபாணிப்பிள்ளை இயற்றிய பழந்தமிழ், இசை டாக்டர் எஸ். இராம நாதன் இயற்றிய சிலப்பதிகாரம் இசைத் தமிழ் டாக்டர் வி. பா. கா. சுந்தரம் இயற்றிய தமிழ் இசைவளம், பழந்தமிழ் இலக்கியத்தின் இசை என்ற நூல்கள் சிறந்த நூல்களாக விளங்கு கின்றன. மேலும் மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர், அரியகுடி ராமானுஜஐயங்கார், வீணை தனம்மாள், செம்பை வைத்திநாத பாக வதர், பாலசுப்பிரமணியம், மதுரைமணி ஐயர், சித்தூர் சுப்பிரமணியபிள்ளை, தண்டபாணி தேசிகர், மதுரை சோமசுந்தரம் ஆகியோர் இசை வளர்ச்சிக்கு மிகவும் தொண்டாற்றினர்.

தற்காலத்தில் இசைத்தட்டு, தொலைக் காட்சி, இசை பற்றிய கருத்தரங்கு முதலியன இசை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. தென் இந்திய இசை வளர்க்கும் நிறுவனங்க ளாக அண்ணாமலை இசைக்கல்லூரி சென்னை மியூசிக் அக்கடமி, சென்னை வித்துவசபை, தமிழ்நாடு இசைக் கல்லூரி என்பவற்றைக் கூற லாம். அண்ணாமலை பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம், மதுரை ராமராஜ ஐயர் பல்கலைக்கழகம் போன்றவற்றில் இசைப் பட்டங்கள் வழங்கப்படுகின்றன. தென்னிந்திய பல்வேறு மாநிலங்களிலும் இசைக் கல்லூரி ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டு பட்டங்கள் வழங்கப் பட்டு வருகின்றன.

இசையைப் பரப்புவதில் சென்னையில் சங்கீத சபையினால் நடாத்தப்படும் இசை விழாக்கள் மாநாடு போன்றன சிறந்த தொண் டாற்றுகின்றன. பல உயர்நிலைக் கல்விக்கூடங் களில் இசை ஒரு பாடமாக புகுத்தப்பட்டு இசை வளர்க்கப்பட்டு வருகின்றது. இசைக் கலைஞர் களை ஊக்குவிக்கப் பல விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டு வருகின்றது. இந்திய இசைக் கலைஞர் பலர் அயல் நாடுகளுக்கு சென்று இசைக் கலையை மேம்படுத்துகின்றனர். இவ்வா நாக இசை பல்வேறு துறைகளுக்கும் பல இசை வல்லுனர்களுக்குமிடையே இருந்து இசை மணம் கமழச் செய்தும் பரப்பியும் கர்நாடக இசை வரலாற்றில் இடம் பெற வேண்டிய முக்கிய அம்சமாக விளங்குகிறது.

தே. நவீனன்

2000 (உ/த) கலைப்பிரிவு

தர்மம்

நாமெல்லாம் ஒரே இறைவனின் குழந்தை கள், சகோதரர்கள், இரையம்சம் பெற்றவர்கள். ஆகவே உயிர்க் குலமனைத்தையுமே ஒரு குடும்பமாகக் கொண்டு அன்பு பெருக்கி, அனைத் துயிர்க்கும் இன்பம் செய்து, அன்பே இறைவனா வதை அறிந்து, அன்பே இறைவனாய் அமர்ந் திருக்கும் இலட்சியத்தை நோக்கி முன்னேறிச் சென்று கொண்டிருப்பவர்கள். ஆகவே தான் உண்டு தன் குடும்பமுண்டு என்று வாழும் தனிமை வாழ்வு நீங்கி பிறர்நலம் பேணி, உள் ளதை உற்றார், உறவினர், அயலாருடன் பகிர்ந் துண்டு வாழக் கடமைப்பட்டுள்ளோம்.

நம்மில் பலருக்கு தருமம் என்ற சொல் லைக் கேட்டதுமே பயம் ஏற்படலாம். நாம் எப் படி தருமம் செய்ய முடியும்? மருத்துவ விடுதி, பெரிய கல்விச் சாலைகள், சத்திரங்கள் முதலி யன கட்ட நம்மிடம் பணம் ஏது? பணக்காரர் அன்றோ தருமம் செய்ய வேண்டும். பணத்திற்கு நாம் எங்கு போவது? தனக்கு மிஞ்சியல்லவோ தான தருமம். நீங்கள் இங்ஙனம் எண்ணினால் அது தவறு என்றே சொல்ல வேண்டும். தருமம் என்றால் பொருள் உதவியை மட்டும் குறிக்க வில்லை. பாவ காரியங்களைச் செய்யாதிருத்த லும் நம் சக்திக்கியன்ற நல்ல காரியங்களை செய்வதும் தருமமே. அதற்கு பயனுண்டு. மான வர்கள் ஆகிய நீங்கள் என்ன தருமம் செய் வது? தகப்பனருக்குத் தெரியாமல் பெட்டியிலி ருந்து பணத்தை எடுத்துப் பிச்சைக்காரர்களுக்கு கொடுத்தால் தான் தருமம் என்று நினைக் கிறீர்களா? இல்லை, இல்லை. உதாரணமாக வழி தெரியாமல் திண்டாடும் ஒரு வெளியூர்க் காரனுக்கு அவன் போக வேண்டிய இடத்திற்கு வழி காட்டுவதும் சிறந்த தருமமே. வரும் வழி யில் சைக்கிளில் அல்லது வண்டியில் அகப் பட்டுக் காயமுற்ற ஒருவனை உடன் வைத்திய

எமது கல்லூரியின் உதைபந்தாட்டக் குழு

எமது கல்லூரியின் உதைபந்தாட்டக்குழு பயிற்றுனர் திரு. குணபாலசிங்கம் சுதாகரன்

பரிசளிப்பு விழா கலை நிகழ்ச்சியும்
புதிய சரஸ்வதி சிலைத் தோற்றமும்

சாலைக்குக் கொண்டு சேர்த்து டாக்டரிடம் காண் பித்துச் சிகிச்சை செய்வதும் சிறந்த தருமமே. ஏன் கருங்கச் சொல்லுமிடத்துப் பிறருக்கு வரும் தீங்கைப் போக்க நாம் எடுத்துக் கொள்ளும் எந்த சிறிய காரியமானாலும் அது தருமமே. இத்தகைய நெறிமுறைகளை உணர்த்த புராண இதிகாசங்களில் வரும் கதா பாத்திரங்களின் நடவடிக்கைகள் உணர்த்துகின்றன.

ஆகவே நாம் எல்லோரும் தரும நெறி நின்று செய்யும் காரியங்கள் தான் தமது இப் பிறவியின் பிற்பகுதியை உயர்த்துவதோடு மறு பிறவிக்கும் நற்பலனை தந்து உயர்த்தும் என் பதை அறிந்து கொண்டு அதன் வழி நடப்போ மாக. அத்தோடு "தர்மம் தலைகாக்கும்" என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால் தற்காலத்தில் சுய நலன்களினாலும், குறுக்கு வழிகளினாலும் நெறி யிழந்து, சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு தம்மை தாம் மிக மிக விரைவாக உயர்த்திக் கொள்ள நினைக்கும் எம் மக்கள் மத்தியில் எத்தனை பேர் தர்ம வழி நின்று செயற்பட முற் படுவார்கள் என்பது கேள்விக் குறியே!

க. சுகிர்தா

முயன்றால் வாழ்வில் முன்னேறலாம்

இதயாவின் இதயம் கனமாகக் கனத்தது. அந்த வார்த்தைகள் அவளது உள்ளத்தை வெகு வாகப் பாதித்திருந்தது. புரண்டு புரண்டு படுத் தாள். தூக்கம் வரவில்லை. திரும்ப திரும்ப அதே வார்த்தைகள் ஒலித்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு பிரேமை. அவளது கரங்களிலிருந்த தூக்க மாத்திரை அவளைப் பார்த்து ஏளனம் செய்தது இன்னும் ஏன் தாமதம். இனியும் வாழ வேண்டுமா? இதயாவின் மாமா அவளைப் பார்த்து ஏன் இன்னும் உயிருடன் இருக்கின்றாய் எனக் கேட்டார். இதயாவிற்கு வியர்த்துக் கொட்டியது. நான் காணுவது நிசமா, கனவா, ஒருமுறை தனது உடலில் கிள்ளிப் பார்த்தாள். வலித்தது. நான் காணுவது ஒரு பிரமை. இதயா தீர்க்க மான முடிவாக தூக்க மாத்திரையை விழுங்கு வதற்கு தயாரானாள். அப்போதுதான் அங்கு நடந்த சம்பவம் இதயாவின் கவனத்தை ஈர்த்தது. கூரையில் சிலந்தி ஒன்று வலைகூடிக் கொண்டு இருந்தது. சிலந்தி அங்கும் இங்குமாக தாவி வலையை உருவாக்கிக் கொண்டிருந்தது. பின்பு ஒரு இடத்தில் இருந்து மற்றைய இடத் துக்கு தாவியது. இரண்டு மூன்று முறைகள் தொடர்ந்தும் தாவிப் பாய்ந்தது ஒருவாறு அதன் விடாமுயற்சியால் அந்த வலையை (கூட்டை)உரு வாக்கியது. அந்த நிகழ்ச்சி இதயாவின் உள்ளத் தைத் தொட்டது. ஒரு உணர்வு அவளது உடலை ஊடுருவிப் பாய்ந்தது. ஆம் அன்று அறிந்த கதை ஒன்று நினைவிற்கு வந்தது.

அரசன் ஒருவன் தனது நாட்டையும் எல்லாவற்றையும் இழந்து நிராயுதபாணியாக நின்ற போது செய்வதறியாது படுத்திருந்து யோசித்துக் கொண்டிருக்கும் போது சிலந்தி வலை பின்னும் நிகழ்ச்சி அவனது உள்ளத்தைத் தொட்டது. சிலந்தி தொடர்ந்து விடா முயற்சியினால் வலை யைக் கட்டிமுடித்தது. அரசனின் உள்ளத்திலும் ஒரு புதிய உற்சாகம் பிறந்தது. தோல்விதான் வெற்றியின் முதற்படி என்ற உண்மையை உணர்ந்தவனாக திரும்பவும் முயற்சி செய்து தனது நாட்டைப் பெற்றுக் கொண்டான். நான் எதற்காக, ஏன் சாகணும்? இதயா தனது கரங்களில் இருந்த தூக்க மாத்திரையை தூர வீசி எறிந்தாள். மயங்கிய ஒளியின் வெளிச்சத் தில் தாயின் முகம் தெளிவாகத் தெரிந்தது. இதயா உற்று நோக்கினாள். ஆ . . ம் . மா உதடுகள் அசைந்தன வார்த்தை வெளிவர வில்லை. நான் எவ்வளவு பெரிய தவறு செய்ய நினைத்துவிட்டேன் என எண்ணி கலங்கினாள். தனது உடலையும் கவனியாது இரவு பகல் பாராது கஷ்டப்பட்டு உழைத்து, களைப்பின் மிகுதியால் தன்னை மறந்து தூங்கிக் கொண்டி ருக்கும் அன்னையின் முகம் அவளது உள்ளத்தை நெகிழச் செய்தது. ஏன்? எதற் காக? நான் சாகணும் தோல்விதான் வெற்றியின் முதற்படி என எத்தனை பெரியார்கள், விஞ்ஞானி கள் இவர்கள் முதலில் தோல்வியை சந்தித்த போதும் விடாமுயற்சி, அயராத உழைப்பு இத னால் சாதனைகள் படைத்தனர். இன்று அவர் கள் பெயர் ஏடுகளில் பொறிக்கப்பட்டுள்ளது என நினைத்தாள். கோபம் அறிவை இழக்கச் செய்வது எவ்வளவு உண்மை, இதயா நினைவு களில் இருந்து விடுபட்டாள். காலையில் நடந்த சம்பவம் தான் இதயாவை இந்நிலைமைக்குத் தள்ளியது. ஆறுதல் சொல்ல வேண்டியவர்கள். அதற்கு மாறாக வேதனைப்படுத்துவது அவர் களுக்கு இதனால் சந்தோசமா? அல்லது அறியா மையா? இதயா மனதிற்குள் சலித்துக் கொண் டாள். மாமா காலையில் புது உறவு கொண்டாட வந்தாரா? எனக்குப் புரியவில்லை. தங்கச்சி என்று அழைத்துக் கொண்டு வந்தார். அம்மா

சந்றும் எதிர்பார்க்கவில்லை. மாமாவின் வரவை அன்று அப்பா இறந்தவுடன் எல்லாம் முடிந்து விட்டது என்று தலை முழுகிவிட்டுப் போனவர்கள் தான் இவர்கள். எனக்கும் தலைகால் புரிய வில்லை. மாமா வந்துவிட்டார் காரணம் இல்லா மல் வரமாட்டார். எனக்கு அப்போது பழமொழி ஒன்று நினைவுக்கு வந்தது. "சோழியன் குடும்பி சும்மா ஆடாதாம்." ஏனக்கு சிரிப்பு அடக்கமுடிய வில்லை. ஒருவாறு சமாளித்துக் கொண்டேன். மாமா தான் முதலில் பேச்சை ஆரம்பித்தார். தங்கச்சி க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேறுகள் வந்தது என்ன மாதிரி? எனது மகன் பாஸ் என்று பெருமையாக சொன்னார். சங்கர் பாஸ் என்ற வார்த்தைகள் இதயாவின் இதயத்திற்கு இதமாக இருந்தது. கடவுளுக்கு நன்றி கூறினாள்.

சந்று நேரம் மௌனம் நிலவியது. மாமா தான் மௌனத்தைக் கலைத்தார். என்ன தங்கச்சி பேசாம திற்கிறாய். நான் கேள்விப் பட்டது உண்மையா இதயா பெயிலாம். அம்மா மௌனமாக நின்றாள். தங்கச்சி நீ தெத்தங்கை நாளைக்கு தனியாக இருந்து கஷ்டப்பட்டு இதயாவைப் படிப்பிக்க முடியும். ஒரு முறை பெயில் விட்டா, பிறகு என்ன படிப்பு வேண்டிக் கிடக்கு. இவளுக்கு படிப்பு வராது போல கிடக்கு. பேசாம இனி படிக்க விடாதை. நான் சொல்லுறது உங்கட நன்மைக்கு. நீ இரவு பகல் பாராது கஷ்டப்பட்டு உழைத்து படிப்பிச்சு என்ன பயன் கண்டாய். பேசாமல் என்னுடைய வீட்டை விடு. எனது மனைவிக்கும் வருத்தம். வேலை செய்ய இயலாது. அதுதான் இதயாவை வீட்டுக்கு அனுப்பினால் வேலைக்கு ஏற்ற சம்பளம் கொடுத்து அனுப்புறன் என்றார்.

அம்மா ஒரு வார்த்தைகூட பேசவில்லை. அப்போது தான் மாமா வந்ததன் நோக்கம் விளங்கியது. இதயாவிற்கும் கோபம் வந்து விட்டது. உதடுகள் துடித்தன. என்னை அவ்வளவு மட்டமாக நினைத்து விட்டாரா? எனக்கு பல் கலைக்கழகம் போவதற்கு 4 மாக்ஸ் காணாது. இதை அவர் அறியாமல், மட்டம் தட்டிக் கதைத்ததில் இதயாவிற்கு கோபம் வந்ததில் வியப்பில்லை. யோசித்து அனுப்பு எனப் போய் விட்டார் மாமா. மாமா போய் எவ்வளவு நேரம் என்பது கூட தெரியவில்லை. அங்கு இரண்டு ஜீவன்கள் வேதனையால் துடித்ததை யார் அறி வார். இதயா தெளிவான உறுதியான மனத் துடன் "அம்மா" என்று ஆவலுடன் அழைத் தாள். இதயாவின் உற்சாகம், மாமாவின் வார்த் தைகள் தான். என்னை எவ்வளவு மட்டமாக நினைத்தாரோ அதற்காக நான் கவலைப்பட போவதில்லை. அந்த சிலந்தி வலையின் ஞாப கம் ஒரு கணம் மனக்கண்முன் தோன்றி மறைந் தது. புது உணர்வு மீண்டும் வசந்தம் மனதில் மலர்ந்தது. இவர்களுக்காக நான் இன்னும் அதிக மாகப் படித்து டாக்டராக வேண்டும். சங்கரின் ஏளனப்பார்வை இதயாவை உறுத்தியது.

அம்மா என மீண்டும் ஆவலுடன் கூவி னாள் இதயா. மகளின் உற்சாகத்தைக்கண்டு, என்ன என்ற கேள்வியோடு பார்த்தாள். அம்மா "வாழ்வில் முயன்றால் முன்னேறலாம்". எனக்கு நிறைய தன்னம்பிக்கை உண்டு. நான் படித்து டாக்டராக வரவேண்டும். எனக்கு மருத்துவ பீடத் திற்கு போவதற்கு நான்கு மாக்ஸ் காணாது. இன்னமும் முயற்சி எடுத்து படித்து கட்டாயம் பல்கலைக்கழகம் போவேன். இது நிச்சயம் எனக் கூறி முடித்தாள்.

மகள் இவ்வளவு உற்சாகமாகப் பேசிய தில், தாயின் உள்ளம் ஆனந்தப்பட்டது. இதயா வேதனையால் ஏதும் செய்திடுவாளோ என்று ஏங்கியவளுக்கு இதயாவின் வார்த்தைகள் மன தில் பால் வார்த்தது. "மகளே" என இதயாவை கட்டியணைத்து முத்தமிட்டாள். என் மகளே உனக்கு என்றும் எனது ஆசிகள் நிறைந்திருக் கும் என வாயார வாழ்த்தினாள். இதயாவின் படிப்பு மீண்டும் தொடர்ந்தது. சில சமயம் கஷ்டம் வரும்போது அந்த சிலந்தி வலை ஞாபகம் வர தொடர்ந்தும் விடா முயற்சியின் வாழ்க்கை சக்கரத்தினுள் ஈடுபட்டாள். நாட்கள் வாரங்களாகின. வாரங்கள் மாதங்களாகின. மாதங்கள் வருடங்களாகி வருடம் ஒன்று புலர்ந் தது. இதயாவின் முயற்சி வீண் போகவில்லை. தாயின் ஆசிகள் அவளுடன். பரீட்சையில் பாஸ் பண்ணினாள். மருத்துவபீட மாணவியாகி பல் கலைக்கழகத்தில் புகுந்தாள். அன்று மட்டமாக நினைத்த மாமா, ஏளனமாகப் பார்த்த சங்கர் இவர்கள் இன்று இதயாவின் பார்வைக்கு சக்தி அற்றவர்களாகி நேருக்கு நேர் பார்க்க முடியாத வர்களாகப் போய்விட்டனர்.

இதயா முற்று முழுதாகவே தன்னை அர்ப்பணித்து படித்தாள். டாக்டராக வரவேண் டும் என்ற ஒரே குறிக்கோளுடன். நிச்சயமாக இதயா நாளை டாக்டராக வருவாள்.

(பாவும் கற்பனை)

க. ஜெனிஸ்ரா
2000 உ/த

With Best Compliments From

Cloth Centre

151 Keyzer Street,
Colombo -11

சுட்டும் விழிச் சுடரோ
வித்தியா நீ சூரிய சந்திரரோ
வாழ்சையுடன் வாழ்த்தும்

சிறி அமலா நகை மாளிகை



74/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

இமயத்தின் சிகரமே
எழில் பொங்க வாழி !

எம். நாகரத்தினம் அன் கோ

உள்நாட்டு வெளிநாட்டு
தோலைத் தோடர்பு நிலையம்

பக்ஸ் இல - 021-2406
தொலைபேசி இல - 021-2406

127, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

மணம் பரப்பும் வித்தியாலை
மணமார வாழ்த்தும்

அனந்தன் புடைவைகம்

54, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

மணம் பரப்பும் வித்தியாவே வளர்க நீ

மங்கையர் மனம் கவரும் வண்ண
வண்ண டிசைன்களில் அழகு
சாதனப் பொருட்களையும்
றெடிமேட் சேட்டிங் சூட்டிங்
ரகங்களையும் ஆண்கள் பெண்கள்
இருபாலாருக்கும் குறைந்த
விலையில் அள்ளி வழங்குவோர்

ஐங்கரன் ரெக்ஸ்ரைல்ஸ்

கோண்டாவில் சந்தி

நீராடும் கடலுடுத்த நில மடந்தைத்
திலகம் நீ
வித்தியா உங்கள வாழ்த்துகின்றோம்

பெனஸ் ஸ்ரோர்ஸ்

பாடசாலை உபகரணங்கள்,
குளிர்பான வகைகளுக்கு
இன்றே நாடுங்கள்

பலாலி வீதி, உரும்பிராய்

அமிழ்தத்தில் குளித்தது அஜந்தா ஓவியம்
இதயத்தில் உதித்தது உரும்பிராய் வித்தியா

நே. இராசதுரை கராஜ்

மோட்டார் வாகனங்களை
உடனுக்குடன் திருத்திக் கொடுக்கவும்
உங்கள் மனங்கவர்
வர்ணப் பூச்சுக்களை பூசவும்
நீண்டகால அனுபவம் மிக்கவர்கள்

பலாலி வீதி, உரும்பிராய்

மரகதச் சிவையின்
மாதுளம் பூ விழியே
சரிநிகர் இல்லா
வித்தியா வாழி

நீங்கள் விரும்பும் வகையில்
பாக், சைக்கிள் சீற் கவர்
போன்றவற்றை உடனுக்குடன்
தைக்க நாட வேண்டிய
இடம்

சீ. அருமைநாயகம்

(பாடசாலை முன்பாக)

பலாலி வீதி, உரும்பிராய்

அமிழ்த நதிக்கரை அழகு மலர்க்கொடி

இதயத் தாரகை எங்கள் வித்தியா



கல்யாணி கிரீம் ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

அல்லி மலர்க்கொடி அரியணை தாங்க
அமரரின் விழிகள் அரண்மனையாக
மன்னாதி மன்னரும் உன் புகழ்பாட
மலரும் வித்தியா வாழிய நீடு

கனைபதி களஞ்சியம்

பலாலி வீதி,
உரும்பிராய்

My School

The name of my school is J/Urumpirai Hindu College. There are thirty teachers and five hundred students in my school.

There are classes from year 6 to year 13. It is a mixed school. Orange and white is our College Colour.

Our school is best in studies and sports. It has won prizes that cannot be counted. Everyone praises our school with such graces.

Mr. A. Eswaranathan is our principal. Our teachers maintain good discipline at school.

I love my school very much.

Miss. Nirusha Thiruganasampanthar
Year 6

My sweet garden

I have a flower garden in my house compound. There are many flowers in my garden. My friends visit my garden and enjoy with me. Photographers come and take photos of it. Always I water them carefully. The flower, I like most is rose.

I give flowers to my sweet friends when they leave me. I earnestly wait for the teacher's day celebration. Because I can make garlands, with my own flowers for teachers.

Miss. S. Piratha
Year 7

MY SELF

My name is Vinotha. I am thirteen years old. My father's name is Sivaneswaran. He is a farmer. Mother's name is Manoranjitham. She is a housewife. Sometimes she assists my father in the garden. I am the eldest and have two sisters. We are living at Urumpirai. I'm in year 8. Sister piratha is next to me. We study at Urumpirai Hindu College. The younger sister, Thanuja is in year 4. She studies at J/Urumpirai Roman Catholic School.

I was the head prefect in Urumpirai Roman Catholic School, when I was in year 5. I'm happy that I was able to serve that school in a little way.

I am interested in dancing. I love to sing and dance. I collect pictures of dancers and keep them in an album.

I have won prizes at the school level dance competitions.

I am much obliged to my Guru Mrs. Bahirathan in this regard I'd like to be a very good dancer.

Miss. S. Vinotha
Year 8

My Hobby

My hobby is collecting stamps. It is a useful and interesting one. I collect stamps from my friends. My father is a postmaster. He also collects stamps of various countries for me. My uncle too brings stamps of various countries as he works in the Bank of Ceylon. When I stay at home I often look at the very beautiful stamps in album.

I have penfriends abroad. I send them Sri Lankan stamps, and they in return, send me stamps of their countries.

I could learn useful things from the stamps. I enjoy the beauty of countries. The pictures on the stamps convey many useful things such as their natural beauty, their tradition and past rulers.

The set I like most in the album is holding of the 18th Olympic games in Japan. I believe that it will bring me a great fortune.

Mas. T. Surenthiran
Year 9

My Town

Urumpirai is my town. It is situated eight KM away from the Jaffna city. The population is nearly forty thousand. There are Hindus and Christians live together. It has many Hindu temples, a Roman Catholic Church and many other denominations that belong to Christians.

The Roman Catholic Church was built in 1915. The world famous scholar late, Father Rev. Gnanapiragasam established it with the help of the native and revolutionist Mr. Pathinathan known as Pandari.

Major crops such as potatoes and tobaco are cultivated during the wet season, while dry crops such as onions, king Jams and other varieties of jams are grown during

புனரமைக்கப்பட்ட விளையாட்டு மைதான வாயிற் கதவை
லயன் திரு. இ. நடராசா அவர்கள் திறந்து வைக்கிறார்

புனர் நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டு மைதானக் கிணற்றை வைத்திய கலாநிதி
செ. இந்திரராசா அவர்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கிறார்





dry season. But grapes and plantains are grown throughout the year.

My town has produced many famous scholars. During the British reign in Sri Lanka there was the Chief Judge called Mr. S. Nagalingam. He was the only person being considered suitable by the then Governor General, to act in his place. Therefore the Governor General handed over Sri Lanka to Mr. S. Nagalingam when he once happened to leave for his home country, England.

Another incident that took place in a court of law in Colombo. Chief Judge late Mr. S. Nagalingam had the trial while his brothers S. Suntharalingam Q.C. and Mr. S. Thiyagalingam Q.C. stood for defending and prosecuting. It had been published in all newspapers of Sri Lanka.

Mr. S. Suntharalingam Q.C. was a Professor in mathematics and an active Member of Parliament, too.

They brought credit to my town and made it popular. Even now a day after facing many trials my town stands firms and produces many scholars. I'm very proud of my town.

Miss. Karthiga Singarasa
Year 10

PLEASURE

Once upon a time there was a king. He was not satisfied although he was wealthy. Once in a month he went round his kingdom to see how his people live. Accidentally he happened to see a hermit with a pleasant face under a tree.

As soon as the king went to his palace, he sent the officials and servants to bring the hermit to his palace. The hermit was given all sorts of comfort and facilities. The hermit lived well in palace. The king ordered his servants to give the hermit whatever he asks. But the hermit as he was living in palace demanded that he should be given whatever the king gets.

On hearing this, the king became sad. He gave whatever the hermit demanded. But the hermit felt the impression of face of king was against him. After a fortnight the king came to hermit's place with a long face. As soon as the king reached the hermit, he said, that he would like to take him to his village where he had already been. Immediately the hermit begged and pleased the king for making inconvenience and said. "I myself alone could go to my Place". Then the hermit started removing kingsly clothes and everything. He took his old clothes and dressed and walked towards his village with pleasure. The king became

alert, and with astonishment he called out for the hermit. He humbly asked the cause for his pleasure. The hermit said that he does not love and possess any thing in the world. Because of your love for things made you worry much. After that the hermit walked to his village with more pleasure.

Miss. Rajini Packiyaratnam
Year 11

TURNED AS A WANDERER

Teacher with fame is
Maker of Scholar
takes over his duty
with utmost beauty.

Learner as baby
Applies what supplied
Copies the maker that
Hoped as a hobby

Thunder like transfer
Surrenders the maker
Learner falls in panic
That has no tonic

Transfer has punished
The teacher to vanish
Danger has turned the
Learner as a wanderer.

Miss. Vijaya Sinnathurai
Year 2002 A/L

A popular form of communication

A common resource provided by the Internet is a worldwide. System for sending and receiving electronic mail known as E-mail. In fact, E-mail represents a large portion of all Internet, traffic and is for many the only Internet, resource they use. How does if work?

To answer that question, let's review the ordinary mail system first.

Imagine that you live in Canada and wish to send a letter to your daughter living in Moscow. After properly addressing the envelope, you mail it, starting the letter's journey. At a postal facility, the letter is routed to the next location, perhaps a regional or national distribution centre, and then to a local post office near your daughter.

A similar process occurs with E-mail. After your letter is composed on your computer, you must specify an E – Mail address that identifies your daughter. Once you send this electronic letter, it travels from your computer, often through a device called a modem, which connects your computer to the Internet, Via the telephone net work. Off it goes, bound for various computers that act like local and national postal routing facilities. They have enough information to get the letter to a destination computer, where your daughter can retrieve it. Unlike the regular mail, E – mail often reaches its destination, even on other continents in minutes or less unless some part of the net work is heavily congested or temporarily out of order. When your daughter inspects her electronic mail box, she will discover your E – mail. The spead of E – mail and ease with which it can be sent even to multiple recipients all over the world make it a popular form of communication.

Miss. Tharshini. D. P.
2001 A/L Science

Space Mirror

A notoin that might sound more like science fixtion than Science because a reality in February 1992. When Russian cosmonauts deployed and unfurled a 20 – metre mirror from the orbiting Mir space station. Some scientists suggested that mirrors in space could be used to reflect sunlingt to earth during the nighttime, thus saving electricity bills and even extending the growing period for crops. The mirror, made of a thin sheet of mylor, reflected a thin beam of sunlight to the earth, where observers in Russia, France, and Canada reported seeing it. The Russian cosmonauts spotted and tracked the four – kilometre – wide patch of light that the mirror cast on the darkened planet below them. An Engineer on the project pronounced the experiment a success and suggested that the next step be a 200 metre mirror with its own guidance system.

Mas. Chandramohan
2001 A/L Science

Greetings to volunteers

O.S.A in overseas,
G.T.Z and lions club,
Manuring and watering,
Without a wavering.

Willing to heal the
Pains of the pupil that
Yawning at buildings
Smashed by shelling.

Removing the dark cloud that
Covering for a hard decade
Sending the rays of light
To brighten the face of right.

S.D.S and O.S.A
Which are in the U.H.C
Showering a Sovereign
Greetings of greatness.

Mas. D. Patric Gomez
2000 A/L Science

வித்தியா !

இதயம் தேடும் இன்பப் புதையல் நீ

உன்னை வாழ்த்தும்

ராஜா ரெலிகொம்

உரும்பிராய் வடக்கு
உரும்பிராய்

இரு கரை செழிக்க நதி என ஓடி

எழில் ஒளிபரப்பு வித்தியா மலரே!

சர்மிலா

வர்த்தக நிலையம்

உரும்பிராய்ச் சந்தி,
உரும்பிராய்

ஏற்றம் பெறும் வித்தியாவை
இதயத்தால் வாழ்த்தும்

வீடியோ ரங்கன்

கைதடி

சேம்மண் நிலத்தின் மழைநீர் போல
எம் மண் உரும்பிராய் உயர்ந்திட
மலர்ந்தாய்
வித்தியாவை வாழ்த்தும்

சிறி விக்னேஸ்வரா அச்சகம்

156. நாவலர் வீதி. யாழ்ப்பாணம்

மானுடம் மலர்ந்தது மாணவம் உயிர்த்தது
வித்தியா மலர்ந்தாள் விடிந்தது உலகு

ராணி ரெக்ஸ்

ராணி ரெக்ஸ்

புதிய ரக சேலைத் துணிகள்,
சேட் சூட், ரீசேட் மற்றும்
பெண்களுக்குரிய அழகு
சாதனப் பொருட்கள்
பாதணிகளைக் குறைந்த
விலையில் அள்ளி வழங்குவதில்
அனுபவம் பெற்ற ஒரே
ஸ்தாபனம்

உரும்பிராய்ச் சந்தி

ஜமுனா நதியின் அமிழ்தக் கரமே
வாழி வித்தியா வளமே நீடு

பாடசாலை உபகரணங்கள் மற்றும்
பல்பொருள் வாணிபத்தில் சிறந்து
விளங்குவது

நிஜந்தன் வர்த்தக நிலையம்

ஒஸ்கா லேன்

உரும்பிராய்

பெரியோரின் ஆக்கங்கள்

உயிருக்கு ஆக்கம் அளிப்பது சமயம்

நாம் எச் சமயத்தைப் பின்பற்றியும் ஆக்கம் பெற முடியும். அதற்காக எல்லா மதங்களையும் ஒரே விருப்புடன் பின்பற்ற முடியாது. நாம் வீட்டின் மேல்மாடிக்கு ஏற வேண்டுமானால் படிக்கட்டுகளின் மூலம் ஏறலாம். அல்லாவிடின் ஏணியின் மூலமோ அல்லது கயிற்றைப் பிடித்துக் கொண்டோ அல்லது வேறு வழிகளாலோ அவ்விடத்தை அடைய முடியும். இவ்வாறே ஒவ்வொருவரும் நமக்கு விருப்பமான மதத்தைப் பின்பற்றி உயிருக்கு ஆக்கம் பெறமுடியும்.

சிலர் கடவுளாவது சாமியாவது என்று எதிர்த்துப் பேசுகின்றனர். இது அவர்களின் அறியாமையே. நாம் வாழும் இவ் உலகமும் ஏனைய கிரகங்களும் சூரியனைச் சுற்றி ஒரே சீரான வேகத்தில் வலம் வருகின்றது. ஒரு பொருளில் இருந்து இன்னொரு புதிய பொருள் தோன்றுகின்றது. எல்லாம் நியதிப்படியே ஒழுங்காக நடைபெறுகின்றது. இது தானாக நடக்க முடியாத செயல். சூன்யத்தில் இருந்து ஒரு பொருளுக்கு வேகமோ நியதியோ உண்டாகாது. இது இயற்கையின் நியதி என்று சொல்லி சமயம் வேண்டாம், கடவுள் வழிபாடு தேவை இல்லை என்று கூற முடியாது.

இன்னும் சிலர் கண்ணால் காணமுடியாத கடவுளைப் பற்றி நாம் ஏன் சிந்திக்க வேண்டும் என்கின்றனர். கண்ணுக்குத் தெரியாத எல்லாவற்றையும் நாம் விட்டு விட முடியுமா? பகலிலே நட்சத்திரங்கள் தெரிவது இல்லை. எல்லா எழுத்துக்களுக்கும் அகரம் முதலாகவும் கலந்தும் இருப்பது போல கடவுளும் உலகம் முழுவதும் முதலாகவும் கலந்தும் இருக்கின்றார் என்கிறார் திருவள்ளுவர். இது கண்ணால் காணப்படாத காதால் மட்டும் கேட்கக்கூடிய ஒலியாகவே இருக்கின்றது. இவ்வாறு இறைவனும் கண்ணுக்குத் தெரியாத மறைபொருளாக இருந்து எமக்கு அருள் புரிகின்றான்.

"மாறி நின்றென்னை மயக்கிடும்
வஞ்சப் புலன் ஐந்தும் . . . . ."

என்கிறார் மாணிக்கவாசகர். மெய் வாய், கண், மூக்கு, செவி இந்த ஐந்து பொறிகளும் எமக்கு வஞ்சகம் செய்கின்றன. இந்த ஐந்தும் ஐந்து தொழில்களைச் செய்கின்றன. ஒன்றின் வேலையை மற்றொன்று செய்ய முடியாது. உதாரணமாக கண்ணின் வேலையை காதால் செய்ய முடியாது. காதின் வேலையை வாயால் செய்ய முடியாது. இப்படியே ஐந்து பொறியும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நாம் காதினால் இனிய சங்கீத ஒலியையும் கேட்கலாம். அதே வேளை அடுத்தவன் நம்மைக் கண்டிக்கும்போது அவனுடன் சண்டை செய்யவும் தோன்றும். இவ்வாறே ஏனைய பொறிகளும் ஒரு கட்டுக்கோப்பில் நில்லாமல் அலைந்து திரிகின்றன. இவைகள் ஐந்தும் நமக்கு இடையறாது துன்பம் செய்கின்றன. ஒரு குறிப்பிட்ட செயலை முழு மனதுடன் செய்யவிடாது தடுக்கின்றன. நமது மனம் எல்லா வழிகளுக்கும் இழுத்துச் செல்லப்படுகின்ற மனதை ஒரு வழிப்படுத்த முடியாது சதா வருத்திக் கொண்டிருக்கின்றது.

புலன்களை அடக்கி ஆளப் பழக வேண்டும். புலனடக்கம் என்பது புலன்களுக்கு வேலை கொடுக்காது இருப்பது என்பது பொருள் அல்ல. புலன்களைத் தவறான வழிகளுக்கு செல்ல விடாது தடுத்து நிறுத்தலே ஆகும். ஒரு குட்டையில் உள்ள நீர் கலங்காது இருக்கும்போது நமது விம்பத்தை அதனுள் காணலாம். அந்நீரை அள்ளியும் பருகலாம். இவ்வாறே நமது மனம் தெளிந்த நிலையில் கடவுளை நோக்கி பிரார்த்தனை செய்யமுடியும். பிரார்த்தனை செய்ய செய்ய நான் என்ற கர்வம் அடங்கும். இந்த நிலையில் கடவுளை அகக் கண்ணால் காண முடியும். அவன் அருளைப் பெறமுடியும். ஒரு நாளும் நமக்கு அறிமுகம் இல்லாத காக்கை வேறு எங்கோ உள்ள பழத்தை சாப்பிட்டுவிட்டு நமது வீட்டுத் தோட்டத்தில் விதையைப் போடுகின்றது. அது வளர்ந்து பெரிய மரமாகிறது. நாய் வீட்டைக் காக்கிறது. பசு பால் தருகின்றது. இவ்வாறு எத்தனையோ ஜீவராசிகள் நமக்கு தொண்டு செய்கின்றன. நாக்கிலே சுவையில்லை என்றால் நாம் உணவை உண்ணமாட்டோம். நாக்கில் சுவை இருப்பதால் தான் உணவை உண்டு உடலை வளர்க்கின்றோம். உடலை வளர்த்துத்தான் நமது கர்மாவைப்

போக்க முடியும். குழந்தைக்கு தாயை மயக்கும் சக்தி இருக்கின்றது. அதனால் தாய் குழந்தையைப் பிரியமுடன் வளர்த்து பெரியவன் ஆக்குகின்றாள். இவ்வாறு இறைவன் நமக்கு எத்தனையோ வழிகளில் உதவுகின்றார். அத்தகைய கடவுளை மறப்பது நன்றன்று.

ஓர் உணவு விடுதியில் பல்வகைச் சுவையை உடைய உணவுகளில் ஒவ்வொருவரும் தத்தமக்கு விருப்பமான உணவை உண்ண முடியும். இந்த ஒவ்வோர் உணவுக்கும் ஒவ்வோர் வடிவம் ஒவ்வோர் குணம் உண்டு. இது அவரவர் நாவில் ஏற்படும் சுவையின் பிரதி பலிப்பே. எல்லோரும் ஒரே உணவை விரும்புவது இல்லை. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. எல்லோரும் பசிக்காகவே உணவை உண்கின்றனர். இதில் சிலர் எந்த உணவையும் உண்ண விரும்புவதில்லை என்றால் அவர்களின் உடல் சற்று ஆரோக்கியக் குறைவாக உள்ளது என்பதே பொருளாகும். அவ்வாறே ஒருவனுக்கு ஒரு சமயத்திலும் நாட்டம் இல்லை என்றால் அவனுக்கு ஆன்மவேட்கை இல்லை என்பதே பொருளாகும். இதற்காக நாம் கடவுளைக் குறை கூற முடியாது.

எல்லா மதங்களுக்கும் அச்சாணி போல பொதுவாக இருப்பது நம்பிக்கை. அத்தகைய நம்பிக்கையை முழுமனத்துடன் ஆண்டவன் மேல் வைக்க வேண்டும். இந்த நம்பிக்கையை பிரார்த்தனைகள் மூலமாக வளர்த்துக் கொண்டு செல்லலாம். நம்பிக்கை வளர வளர வாழ்க்கையில் வெற்றியையும் முன்னேற்றத்தையும் காணலாம். எல்லா மதங்களுக்கும் பொதுவான பரம்பொருள் ஒன்றே. அந்தப் பரம்பொருளை நாம் எல்லோரும் முழு நம்பிக்கையுடன் வணங்குவோமாக.

திரு. சி. இராசேந்திரம்
ஆசிரியர்

சேக்ஸ்பியரும் சைவசித்தாந்தமும்

ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஸ்பியருக்கு உலகளாவிய ரீதியாக ஒரு தனி முத்திரையுண்டு. கம்பனுக்கு நிகரான அவரது படைப்புக்கள் யாவும் அமர காவியங்கள் காலத்தைக் கடந்து நிற்பவை. இந்தியாவை இழந்தாலும் சேக்ஸ்பியரை இழக்கத் துணியமாட்டோம் என்று ஒரு ஆங்கிலேயப் பிரபு அன்று கூறினாராம். முப்பதிற்கும் மேற்பட்ட அவரது நாடக காவியங்கள் யாவும் தமிழிலக்கியம் கூறும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற புருடார்த்தங்களை அடிநாதமாகவைத்து அமைந்திருக்கின்றன. அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றாகும் என்ற சிலப்பதிகாரத் தத்துவத்தை அவர் எழுதிய மக்பெத் என்ற நாடகத்தின் மூலம் இனிதே அறிய முடியும். ஆவிகள் ரசவாதிகள், தீய தேவதைகளால் பெற்றுக் கொள்ளப்படும் சித்திகள் முடிவில் துன்பத்தையே தரும் என்பதை ஆங்காங்கே தமிழிலக்கியங்கள் கூறுவதையே மக்பெத் என்ற நாடகமும் வலியுறுத்துகிறது. இரசவாதி ஒருவனால் வணிகன் ஏமாந்து துன்புற்றதை கந்த புராணம் மார்க்கண்டேய படலத்திலும், பாண்டவரைக் கொல்வதற்கு காளமாமுனி என்ற மந்திரவாதியினால் துரியோதனன் ஏமாந்ததும், பழி வாங்க வந்த ஒரு பெண் பேயின் பேச்சை நம்பி வணிகன் ஒருவனுக்குப் பிணை நின்று இறுதியில் கொடுத்த வாக்கைக் காப்பாற்றத் தம் உயிர் விட்ட ஏழு விவசாயிகள் வரலாற்றைத் திருக்குறிப்புத் தொண்டநாயனார் சரித்திரத்தில் காஞ்சிநகர்ச் சிறப்பாக இலக்கியம் கூறுவதையும் நோக்கலாம். சைவசித்தாந்தம் கூறும் கர்மவினை பற்றிய கோட்பாடு சேக்ஸ்பியருக்கு உடன்பாடானது. டன்கன் என்ற அரசன் ஸ்கொத் தலாந்து தேசத்தை ஆண்ட காலத்தில் அத்தேசத்தில் நடந்த ஒரு யுத்தத்தில் பங்காற்றி வெற்றியோடு திரும்பினான். இரு இராணுவத் தளபதிகளில் ஒருவன் மக்பெத் மற்றவன் பாங்கோ. இருவரும் வரும் வழி பாழடைந்த காட்டுப்பாதை. இருவரையும் வழியில் தாடிகளோடுகூடிய பெண்களைப் போன்ற மந்திரவாதிகள் வழி மறித்தனர். மக்பெத் குதிரையை நிறுத்தி, யார் நீங்கள்? என்றான். அவர்கள் மௌனம் என்று சைகை காட்டி மக்பெத்தின் பட்டப்பெயரான கிளாமினஸ் என்று கூவி ஒருத்தி மகிமைப்படுத்தினாள். இரண்டாமவர் கோடர் என்று அவனது மறுபெயரைக் கூறினாள். மூன்றாவது பெண் அவனுக்குக் கிடைக்க இருக்கும் அரச பட்டத்தைக் கூறினாள். இதனைக் கேட்ட மக்பெத் அதிர்ச்சியடைந்தான். அரசுக்குரிய வாரிசுகள் இருக்கத் தான் எப்படி அரசனாக முடியும் என நினைத்தான். அவர்கள் பாங்கோவை நோக்கி மக்பெத்திலும் குறைய ஆனாலும் கூடிய சந்தோஷம் உனது பரம்பரை அரச பரம்பரையாகுமென அவிழ்க்க முடியாத புதிரைக் கூறி மறைந்தனர். குதிரைகள் பயணத்தைத் தொடர்ந்தன.

மக்பெத்தின் வீரச் செய்தியைத் தன் மகன் மால்கெமிடம் இருந்து டங்கன் அறிந்து சந்தோசமடைந்தான். எதிரிகள் பக்கம் மாறிய தனது கோடர் என்ற பிரபுவிற்கு மரணதண் டனை விதித்து அவனின் பட்டப் பெயரை மக் பெத்திற்குச் சூட்டிக் கௌரவித்தான். இந்த நிகழ் வுகள் எதையும் மக்பெத் அறியவில்லை. மக்பெத்தும் பாங்கோவும் அரண்மனை திரும்பி யதும் கோடர் பிரபுவே எனச் சகலரும் வாழ்த் தினர். இதனைக் கேட்ட மக்பெத் அதிசயமுற்று அரசபட்டமும் தனக்குத்தான் கிடைக்கும் என வும் நம்பினான். இந்தச் சேதியை தன் மனைவி லேடி மக்பெத்திற்கும் கடிதமூலம் அறிவித்தான். மக்பெத், நண்பன் பாங்கோவிடம் அவர்கள் கூறியது என் விடயத்தில் உண்மையாகி விட்ட னவே என்றான். அற்ப விடயங்களில் அவை பொய்த்து விடுவதுண்டு என பாங்கோ பதிலடி கொடுத்தான். போகநிலையில் ஏற்படுகின்ற அட்ட மாசித்திகளால் ஒருவன் கர்வமடைந்தால் அவன் சீவன் முத்தர் நிலையை அடைய முடியாது. இறுதியில் சித்துக்கள் பொய்த்துவிடும் என்று சைவசித்தாந்தம் கூறுவதையும் நோக்குக. மக் பெத்தின் வீரத்தைப் பாராட்டிய டங்கன், இன்வே னீஸ் என்ற அவனது கோட்டைக்கு விருந்தாளி யாக வரப்போவதாக அறிவித்தான். மக்பெத்தும் மனைவியும் தடல்புடலாக அரசனை வரவேற்று விருந்தளித்துக் கௌரவித்தனர். அக்கேளிக்கை நிகழ்ச்சியிலும் போதையிலும் மயங்கிய அரச னும் சேனைகளும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளை லேடி மக்பெத் கணவனை நடு நிசியில் எழுப்பி அரசனைக் கொன்றுவிடுமாறு வலியுறுத்து கின்றாள். அவன் மறுக்கின்றான். நியாயங்கள் பல கூறினான். அவளோ விட்ட பாடில்லை. குறி கூறியவர்களின் பேச்சை நியாயப்படுத்தினாள். இறுதியில் மக்பெத் அரசனைக் கொல்வதால் வரும் சித்திதான் இறுதியானதென்றால் கொலை செய்யலாம். ஆனால் ஒருவனது பாவம் திரும்பி வருமே என்று கூறினான். இறுதியில் அரசன் மக்பெத்தால் கொலை செய்யப்படுகின்றான். விடிந்ததும் ஒரே பரபரப்பு மக்பெத்தும் மனைவி யும் துக்கமடைந்தவர் போல நடித்தனர். எங்கும் ஒரே அதிர்ச்சி. மன்னனது இறுதிக் கடன்கள் யாவும் முடிவடைந்ததும் அவனது இரு சிறிய புதல்வர்களான மாக்கொம், டொனல்பேய இரு வரும் நாட்டை விட்டு ஓடினார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்பெத் மணி மகுடத்தைச் சூட்டிக்கொண்டான். அடுத்து லேடி மக்பெத்தின் குறியாக இருந்தவர்கள் பாங்கோ வும் அவனது மகனுந்தான். கௌரவ விருந்தி னராக அவர்கள் அழைக்கப்பட்டனர். வரும்வழி யில் குண்டர்களை நிறுத்திவைத்துக் கொல்ல வும் ஏற்பாடாயிற்று. பாங்கோவும் மகனும் வழி மறிக்கப்பட்டுத் தாக்கப்பட்டனர். பாங்கோ வழி யில் இறக்க மகன் குதிரையோடு தப்பி ஓடிவிட் டான். கொலைஞர்கள் தமது பாதி வெற்றியை இரகசியமாக மக்பெத்திற்கு அறிவித்தனர்.

அரண்மனையில் ரம்மியமான விருந்து. சீமான்களாலும், சீமாட்டிகளாலும், பிரபுக்களாலும் மண்டபம் நிறைந்து வழிந்தது. பாங்கோவின் வருகையைத் தான் எதிர்பார்ப்பதாக மக்பெத் கூறி விருந்தை ஆரம்பித்தான். உட்காருவதற் காகத் தன் இருக்கையை நோக்கி நடந்த மக்பெத் திடுக்குற்றான். தனது இருக்கையிற் பாங்கோவின் ஆவி உட்கார்ந்து விருந்துண்டு கொண்டிருந்தமை கண்டான். பயந்தான். உடல் வெளுற மனைவியை நோக்கி அதோ! அதோ! பாங்கோ என்று ஓலமிட்டான். சகலரும் திரும்பி நோக்கினர். மக்பெத் வெறும் இருக்கையைக் காட்டிப் புலம்பினான். லேடி மக்பெத் பேசாமல் இருங்கள், காரியத்தைக் கெடுத்து விடாதீர்கள். அது வெறும் பிரமை என்றாள். மக்பெத்தின் கூச்சலினால் விருந்து குலைந்தது. மண்டபம் காலியானது. எங்கும் அமைதி. இதனால் மன அமைதி இன்றி இருவரும் தவித்தனர். ரோஜா மலர்கள் கூட அவர்களுக்கு முட்களாயின. மொத்தத்தில் இருவரும் நடக்கும் பிணங்களாயி னர். பாங்கோவின் வம்சமே அரசாளும் என எண்ணி எண்ணி வேதனைப்பட்டனர். இறுதியில் மக்பெத் குதிரை ஒன்றில் ஏறி அந்த மந்திர வாதிகள் இருக்குமிடம் அடைந்தான்.

அவர்கள் ஆவிகளை வரவேற்றழைப்பதற் காக ஒருவகை எண்ணெய் தயாரித்துக் கொண் டிருந்தனர். தவளை, பாம்பு, பல்லிகளின் கண் கள், நாயின் நாக்கு, புதைகுழியில் வளருவதும் இருட்டில் வெட்டி எடுத்த கொம்பெக் என்ற மரத்தின் வேர், யூதனின் ஈரல், வேதாளத்தின் செதில்கள், பூதத்தின் நகம், இவைகளைப் போட்டுக் காய்ச்சி, தன் கன்றை உண்ட பன்றி யின் இரத்தத்தால் குளிராக்கப்பட்ட தைலம் தான் அது. மக்பெத் அவர்களிடம் தன் குறை களை அழுது வெளியிட்டான். உடனே அத் தைலத்தில் இருந்து வெளிவந்த தலை ஒன்று மக்டவ் பிரபுவிடம் எச்சரிக்கையாய் இரு என்று கூறி மறைந்தது. அடுத்து இரு உருவங்கள் தோன்றித் தாயின் வயிற்றில் பிறந்த எவருமே உன்னை வெல்ல முடியாது. பேணாம் என்ற காடு கடந்து உன் கோட்டைக்கு வந்தாலன்றி உனக்கு அழிவு இல்லை எனக் கூறச் சகல ருமே கணத்தில் மறைந்து விட்டனர்.

மிக்க மகிழ்ச்சியோடு திரும்பிய மக்பெத் மக்டவ் பிரபுவின் வீட்டிற்குச் சென்றான். அங்கு அவன் இல்லை. மக்டவ்வின் மனைவியையும் பிள்ளைகளையும் வாளுக்கு இரையாக்கினான்.

தான் சந்தேகிக்கின்ற அனைவரையும் கொன்று புதிவாங்கினான். நாட்டில் கொலைப் பீதி ஏற் பட்டது. கொடுங்கோலனான மக்பெத்தை சகல ரும் வெறுத்தனர். மனைவியோடும் முரண்பட் டான். லேடி மக்பெத் தற்கொலை செய்து கொண் டாள். ஒரே குழப்பம். தனிமையில் இருந்த மக் பெத்தை நாடிச்சென்ற சேவகன் ஒருவன் அரசே! "பேணாம்" காடு நடந்து வருகிறதே என்று சொன்னான். கோட்டை மதின்மேல் ஏறுகின்றது. மக்பெத் பார்த்தான். அந்தக் காட்சி உண்மை தான். மால்கெம்மும் படைவீரர்களும் காட்டு மரக் கொப்புக்களைப் பிடித்தபடி மறைவாக கோட் டையை நோக்கி வந்த காட்சிதான் அது. மக்பெத்துக்கும் மால்கெம்முக்கும் இடையில் உக்கிரமாக யுத்தம் நடந்தது. மக்பெத்தின் எஞ்சிய சேனைகளும் எதிரிகள் பக்கம் மாறி விட்டன. களைத்துச் சோர்ந்த மக்பெத்தை மீண்டும் சண்டையிட வருமாறு மால்கெம் அறை கூவினான். மக்பெத் அவனைப் பலவாறு திட்டி தாயின் வயிற்றில் இருந்து பிறந்த எவனும் தன்னை வெல்ல முடியாது என ஆவிகள் கூறியதைக் கூறினான். மால்கொம் பதிலுக்கு நான் அப்படியானவன் தான். என் தாயின் கர்ப் பத்திலிருந்து பிறப்பதற்கு முன்னமாதம் முன் னரே அகற்றப்பட்டு வளர்க்கப்பட்டவன் என்ற உண்மையைக் கூறினான். இவற்றைக் கேட்ட மக்பெத் நாசமாப் போக மந்திரிகத்தை எவனும் நம்பாதிருப்பானாக! ஆவிகள் கூறுவன இரட்டை அர்த்தம் உடையவை என்று கூறி உக்கிரமாகச் சண்டையிட்டு மடிந்தான். உப்பிட்ட பாண்டமும் உடாயம் கற்ற நெஞ்சும் தட்டி உடையாது தானே உடையும். உள்ளியர் வல்லியராயினும் மெல்ல நுழையும் ஊழ்வினை ஊழிற் பெருவலி யாவுள? தாமரை முதல்வர்க்கேவும் விதி வள்ள ரும் தனகயதன்றோ. இப்படிப்பட்ட பல கர்ம வினைக் கோட்பாடுகளைச் சித்தாந்தமும் தமிழ் இலக்கியமும் வரையறை செய்து கூறுகின்றன. சக்திகளின் வரபலன்கள் சில இரட்டை அர்த் தம் உடையன. சிவசக்தியும் முருகனும் இரண்டு என அறிவிழந்து நம்பி உயிர் இழந்தான் சூரபத்மன். இதே வழியில் நடந்தவன்தான் மக்பெத்தும். தவறான வழியில் நடக்க முற்பட்ட தவம் செய்பவர்க்கு சித்திகள் இரட்டை அர்த் தம் உடையவனாகவாகவே பயன்பட வரம் கிடைக்கும் என்ற கந்தபுராணக் கோட்பாடுக ளுக்கு மக்பெத் நல்ல உதாரணம். உண்மை வழிக்கு கிழக்கும் மேற்கும் என்ற வரையறை இல்லை. கச்சியப்பரும் சேக்ஸ்பியருமல்ல. எல் லோரும் இந்த வழியில் ஒன்றாகக் கைகோர்த் தவர்கள்தான், ஏனென்றால் அந்த உண்மை முழுமையாக இருக்கின்றது.

மக்பெத் இறந்ததும் மால்கொம் சகல வரிசைகளோடும் ஸ்கொத்தலாந்து தேசத்தின் அரசனானான். அதற்குப் பின் பால்கோவன் சந் ததியினர் அரசனானார்கள். அவர்கள் சந்தத வழிவந்த கடைசி அரசன்தான் ஸ்கொந்தலகத் தின் ஆறாவது ஜேம்சும் இங்கிலாந்தின் முதலா வது ஜேம்சும் ஆவார்கள். அரசியல் பிழைத் தார்க்கு அறங்கூற்றாவது உண்மைதானே.

சிக்திர ஆசிரியர்
கு. சுரைராசா

வெற்றிக்கு வழிகாட்டும் பரீட்சை நுட்பங்கள்

என் அன்புக்குரிய மாணவர்களே!

மாணவர்களாகிய நீங்கள் பூரண கல்வி யறிவைப் பெறுவதோடு மட்டுமல்லாது, பரீட்சை எழுதும் நுட்பங்களையும் தெரிந்திருந்தாலே பரீட் சைகளில் பூரண வெற்றியை உங்களால் பெற முடியும்.

தவறான பரீட்சை நுட்பங்கள் பலவீன மான பரீட்சை முடிவுகளுக்கே வழிகோலுகின் றன. போதிய மீட்டல் இல்லாமையே இதற்கான பிரதான காரணமாக இருந்தபோதிலும் மாணவர் கள் பல தடவைகள் பரீட்சைக்கு தோற்றியும் அவர்களின் புள்ளிகள் வீண் விரயமாக்கப்பட்டு தோல்வியடைவதற்கான காரணம் அவர்கள் விரை வாகவும் சரியானதுமான முறையில் தமக்குரிய வினாக்களை அணுகாமையே ஆகும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

எனது அனுபவத்திற்கும் அறிவிற்கும் எட் டியவரையில் மாணவர்கள் பரீட்சையில் விடு கின்ற பொதுவான தவறுகளை கண்டறிந்து இனிமேல் மாணவர்களாகிய நீங்கள் பரீட்சை யில் வெற்றிபெற பின்வரும் விடயங்களை உங் களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்:

- இறுதிப் பரீட்சைக்குக் குறித்த காலத்திற்கு முன்பாகவே நீங்கள் மீட்டல் செய்ய வேண் டிய அனைத்துப் பாடங்களையும் மீட்டல் செய்து முடிப்பதற்கு ஏற்றவகையில் மீட்டல் நேரஅட்டவணையை தயாரித்து அதனை உண்மையுடன் கடைப்பிடிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

எமது கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பாண்ட் வாத்தியக் கருவிகள்

அன்பளிப்புச் செய்தோர் :
சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் தலைவி லிபி கெனடி
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் திரு. அ. நல்லதம்பி



எமது கல்லூரியின் பாண்ட் வாத்திய இசைக்குழு



☞ பரீட்சைக்கு முதல்நாள் மதியத்துடன் உங்கள் மீட்டல்கள் யாவற்றையும் நிறுத்திக் கொண்டு அன்று மாலை முதல் நீங்கள் பூரண ஓய்வு எடுக்க வேண்டும் என்பதே உங்களுக்கு தரக்கூடிய அதிகபட்ச ஆலோசனையாக அமைகின்றது.

☞ முதல் நாள் மாலை ஓய்வெடுக்க வேண்டுமென்பதனை முற்றிலும் கடைப்பிடிப்பது என்பது கடினமானதாக தோன்றினால் உங்கள் பாடக்குறிப்புக்களின் தலைப்புக்களையும், உப தலைப்புக்களையும் மேலோட்டமாக தட்டிப் பார்க்கலாம். வழிகாட்டல் குறிப்புக்களையோ அல்லது நீங்கள் தயாரித்த சிறு குறிப்புக்களையோ பார்க்கலாம். சமன்பாடுகள், வரைவிலக்கணங்கள், எடுகோள்கள், நிபந்தனைகள் மிக முக்கிய நினைவுக் குறிப்புகள் போன்றவற்றை மீள ஒரு தடவை மனதில் பதித்துக் கொள்ளலாம்.

☞ இதுவரை மீட்டல் செய்யாத விடயங்களை முதல்நாள் மாலை கிரகிப்பு செய்வதனை முற்றிலுமே தவிர்த்துக் கொள்ள வேண்டும். பரீட்சைக்கு முதல் நாள் இரு பிரிவாக பாடங்களை படிப்பது என்பது நீங்கள் இது வரை படித்த அனைத்து விடயங்களையும் மழுங்கடிப்பதோடு உங்களுக்குள் குழப்பத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தி உங்கள் தன்னம்பிக்கையை இழக்கச் செய்யும் ஓர் ஆபத்தான செயலாக அமைந்துவிடும்.

☞ முதல்நாள் இரவிரவாகப் படித்து என்னால் மறுநாள் பரீட்சை எழுத முடியும் என்று நீங்கள் எண்ணுவது முற்றிலும் தவறானதும் செய்யக்கூடாததுமான செயலாகும் என்பதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இதனையும் மீறி நீங்கள் இரவிரவாகப் படித்தால், நீங்கள் அதிகம் படிக்காமல் சென்று பரீட்சை எழுதிப் பெறும் பெறு பேறுகளை காட்டிலும் மோசமான ஒரு பெறுபேற்றைப் பெற வேண்டியிருக்கலாம்.

☞ எனவே முதல்நாள் பூரணமாக ஓய்வெடுப்பதுடன் பரீட்சை நேர அட்டவணையை மீண்டும் சரி பார்த்து, பரீட்சை மண்டபத்திற்கு செல்வதற்கான போக்குவரத்தை உறுதி செய்வதோடு, பரீட்சைக்குத் தேவையான பரீட்சை அனுமதி அட்டை, அடையாள அட்டை, இரண்டு பேனாக்கள், பென்சில், அழிமட்டம், கைக்கடிகாரம் போன்றவற்றை தயார்படுத்திக் கொள்வதும் அவசியமாகின்றது. மேலும் பரீட்சை அனுமதி அட்டையில் உங்கள் கையொப்பம் அதிகாரி ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டு விட்டதா என்பதையும் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

☞ நித்திரைக்குப் போகுமுன் ஒழுங்கானதென நீங்கள் கருதும் அலாரம் மணிக்கூட்டின் மூலம் நீங்கள் காலை எழுந்திருக்க வேண்டிய நேரத்தைக் குறித்து வைத்த பின்னர் பதற்றமின்றி நிம்மதியான நித்திரைக்குச் செல்லுங்கள்.

☞ பரீட்சைக்குத் தேவையான பொருட்களுடன் பரீட்சை நேரத்திற்கு 10 நிமிடங்களிற்கு முன்பாக பரீட்சை மண்டபத்திற்குச் செல்லப் பழகிக் கொள்வதன் மூலம் இறுதி நேரப் பதற்றத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

☞ பரீட்சை அனுமதி அட்டையில் பூரணப்படுத்த வேண்டியவற்றைப் பூரணப்படுத்தி அன்று நீங்கள் இடவேண்டிய கையொப்பத்தையும் இட்டு அடையாள அட்டையையும் சேர்த்து உங்கள் மேசையின் ஓர் மூலையில் வைத்துக் கொள்ளுங்கள்.

☞ தரப்பட்ட விடைத்தாளில் உங்கள் கூட்டிலக்கத்தைச் சரியாகவும், தெளிவாகவும் முதலில் எழுதிக் கொள்ளுங்கள்.

☞ வினாத்தாளில் தரப்பட்ட அறிவுறுத்தல்களை முதலில் மிகுந்த கவனத்துடன் பார்த்து வாசித்துக் கொள்ளுங்கள்.

☞ உங்கள் வினாத்தாளில் கேள்விகள் தெரிவு செய்வதற்கு அனுமதியிருந்தால் விடையளிக்கும் வினாக்களைத் தெரிவு செய்வதற்கு முன்பு, அனைத்து வினாக்களையும் கவனமாக வாசித்தல் வேண்டும். பின்பு இரண்டாம் தடவையாக வினாக்களை வாசித்து விடையளிக்க விரும்பும் வினாக்களை தெரிவு செய்ய வேண்டும்.

☞ தெரிவு செய்த வினாக்களில் உங்களால் நன்றாக விடையளிக்க முடியும் என நீங்கள் கருதும் வினாவை நீங்கள் முதலில் தெரிவு செய்யலாம். ஆனால் அதற்குரிய வினா இலக்கத்தை குறிப்பிட மறக்கக் கூடாது.

☞ விடை எழுதுவதற்கு அவசரப்பட்டு உங்களுக்குத் தரப்பட்ட வினா நீங்கள், முன்பு கூடந்தகால வினாப் பத்திரத்தில் பார்த்த அதே வினாத்தாள் என்ற தவறான அனுமானத்திற்கு ஒருபோதும் வரக்கூடாது. அவ் வினா சற்று மாறுபட்டதாக இருக்கலாம்.

☞ விடையளிக்க முன்பு மூன்றாம் தடவையாக அவ் வினாவை மிகுந்த கவனத்துடன் வாசித்து, வினாவின் முக்கிய சொற்களை யும் வீபரிக்குக, விளக்குக, விவாதிக்குக, ஆராய்க, ஒப்பிடுக, பிரித்தறிக, எடுத்துரைக் குக, நிரற்படுத்துக, குறிப்பெழுதுக, சிறு குறிப்பெழுதுக போன்ற சொற்களையும் முக்கிய கவனத்தில் கொண்டு அதற்கேற்ப விடையளிக்க முயலுதல் வேண்டும்.

☞ விடையாக எது எதிர்பார்க்கப்படுகின்றது என்பதனை திடமாக புரிந்துகொண்டு அதற் கேற்ப உங்களால் விடையளிக்க முடியும் என்பதனை உறுதிப்படுத்திக் கொண்டு விடையளிக்கத் தொடங்குங்கள்.

☞ கேட்கப்பட்ட வினாவிலிருந்து நாங்கள் வில கிச் செல்லாமலும், வழிதவறிப் போகாமலும் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக விடை யளிக்கும்போது வினாவை பல தடவைகள் கிரகித்துக் கொள்ள வேண்டும்.

☞ விடையளிக்கும்போது தேவையான இடங் களில் கோட்டுப் படங்கள், விளக்கப் படங் கள், வரைபுகள், தரவுகள், எடுகோள்கள், நிபந்தனைகள், கணிப்புகள் என்பவற்றை வழங்குவதற்கு மறக்கக்கூடாது.

☞ தரப்பட்ட வினாவுக்கு முற்றிலும் பொருத்த மாகவும், தெளிவாகவும், சுருக்கமாகவும் விடையளிக்க முயற்சிக்க வேண்டும். வினா வுக்கு பொருத்தமில்லாதவற்றை எழுத முனைய வேண்டாம்.

☞ ஒவ்வொரு வினாவுக்கும் விடையளித்த பின் பும் வினாவின் சகல பகுதி வினாக்களையும் மீண்டும் வாசித்து வினாவின் சகல பகுதிக ளுக்கும் விடையளிக்கத் தவறவில்லை என் பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

☞ வினாப் பத்திரத்திலே வழங்கப்படக்கூடிய மொத்தப் புள்ளிகள் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த மொத்தப் புள்ளியை உங்களுக்கு விடையளிக்க ஒதுக்கப்பட்ட மொத்த நிமி டங்களால் பிரித்து ஒரு புள்ளிக்காக செல விடக்கூடிய நிமிடங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

உதாரணம் :- 100 புள்ளிகளுக்கு 3 மணித்தியாலங்கள் தரப்பட்டிருத்தல்

$$\frac{100 \text{ நிமிடம்}}{100 \text{ புள்ளிகள்}} = 1.8 \text{ நிமிடம் / புள்ளி}$$

எனவே ஒரு புள்ளிக்கு விடையளிக்க 1.8 நிமிடத்தினை செலவிடலாம் என்பதனை கருத்தில் கொண்டு வினாவின் பகுதிக ளுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் அடிப்ப டையில் நேரத்தை செலவிடுதல் என்பது மிக முக்கியமான விடயமாகும்.

☞ ஒரு பகுதிக்கு விடையளிக்க ஒதுக்கிய நேரத்தை விடவும் கூடுதலான நேரத்தை அவ் வினாப்பகுதிக்காக செலவிடுவது என் பது முற்றிலும் தவறானது என்பதை கவ னத்தில் கொள்ளவேண்டும்.

☞ பரீட்சைக்கு வழங்கப்பட்ட நேரத்தின் இறு திக் காற்பங்குநேரம் இருக்கையில் விடைத் தாளில் உங்களுக்கு அறிவுறுத்தப்பட்ட சகல விடயங்களையும் நீங்கள் கடைப் பிடிக்கின்றீர்களா என்பதையும், வினாத் தாளில் அறிவுறுத்தப்பட்டவாறு நீங்கள் விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கையில் எத்தனை வினாக்களுக்கு விடையளித்து விட்டீர்கள் என்பதனையும் இன்னும் எத்தனை வினாக்களுக்கு விடை யளிக்க வேண்டியுள்ளது என்பதனையும் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். இவற்றை இறுதி நிமிடங்களில் சரிபார்த்துக்கொள்ளும் ஒரு மாணவனால் இதில் தவறுகள் இருப் பின் அவற்றைத் திருத்திக் கொள்ள அவ ருக்கு நேரம் போதாமல் இருக்கும் என்ப தனை கவனத்தில் கொள்ளவும்.

☞ பல்தேர்வு வினாப் பத்திரமாக இருப்பின், உங்களுக்கு பரீட்சயமானதும், இலகுவான தும் என நீங்கள் கருதும் வினாக்களுக்கு முதலில் விடையளிக்க பழகிக் கொள்ள வும். விடையளிப்பது கடினமென்றோ அல் லது விடையளிக்க அதிக நேரம் தேவை யென்றோ நீங்கள் கருதும் வினாவுக்கு இறு தியாக விடையளிக்க முயற்சியுங்கள். விடையின் இலக்கத்திற்கு புள்ளடி இடு வதற்கு முன்னாக வினாவின் இலக்கத்தை கண்டிப்பாக சரிபார்த்துக் கொள்ளவேண்டும். விடைக்கான புள்ளடியினை பென்சிலால் இடுவது நன்மையளிக்கும்.

☞ பரீட்சை நுட்பங்களை தெரிந்து கொண்ட நீங்கள், உங்கள் பரீட்சைக்காக படிக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே இவற்றை நினைவில் வைத்துப் படிக்க வேண்டும். இதன் நிமித்தம்

• பரந்தளவில் வாசிக்கப் பழகிக்கொள்வது.

- போதியளவு குறிப்புகளை எழுதிக்கொள்வது.
- அவற்றை சிந்தித்து சரியான வடிவில் மனதில் பதிப்பது
- பதித்தவற்றை பல தடவைகள் மீட்டல் செய்வது.
- மீட்டவற்றை சக மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வது.
- வினாக்களுக்கேற்ப விடையளிக்கப் பழகிக் கொள்வது.
- விட்ட தவறுகளை கண்டறிந்து திருத்திக் கொள்வது போன்றவை உங்களை வெற்றிக் குரிய ஒரு மாணவராக்கும் என்பது உறுதி

இன்று முதல் நீங்கள் சந்திக்கக்கூடிய சகல பரீட்சைகளையும் சந்தித்து அதில் இப்பரீட்சை நுட்பங்களைப் பிரயோகித்துப் பயிற்சி பெறுவதன் மூலம் உங்கள் இறுதிப் பரீட்சையை வெற்றி கொண்டு வெற்றிப் பெறுபேறுகளை குவிப்பீர்கள் என்ற நம்பிக் கையோடு உங்களை வாழ்த்தி அமை கின்றேன்.

- நன்றி -

உங்கள் ஆசிரியர்
தி. நவாநீதி

சமூகமும் கல்வியும்

ஆதிமனிதனின் அறிவு வளர்ச்சி அனைத் தும் தனிமனித முயற்சியிலேயே எழுந்தாலும் மனித இனத்தின் வரலாறு சமூகம் கல்வி இரண்டினதும் தொடர்பிலும் வளர்ச்சியிலும் தங் கியுள்ளமை கண்கூடு. தனி மனிதனாகத் திரிந்த கட்டத்தில் அவன் தனது சொந்த அனுபவங் களுக்கூடாக அறிவைப் பெற்றான். அந்த அறிவு அவனது வாழ்வுக்கும் பாதுகாப்புக்கும் வழி வகுத்தது. சுய பாதுகாப்பு உணர்வு அவனுக்கு அத்தியாவசியமான அடிப்படையாக உதவியது. அதன் வழியில் செல்லும்போது தனக்கு எது வித ஆயத்தும் இல்லாமல் வாழ முடிந்தது. அப் படியான வாழ்க்கையில் தனக்குத் தேவையான உணவை இயற்கை வழியில் தேடினான். காய், கனிகள், கிழங்குகள் என்பவற்றுடன் இலகுவில் கொல்லக்கூடிய விலங்கினங்களின் இறைச்சி வகைகள் அவனுக்கு உணவாயின. அவை எல்லாவற்றுக்கும் மனிதனுக்கு இயல்பான உள்ளுணர்வு, உள்வாற்றல் என்பன உறுது ணையாயிருந்தன. மனிதன் தனியனாக வாழ்ந்த காலத்தின் போது எதுவித வெளிப்புறத் தாக்க மும் அவன்மீது செல்லவில்லை. காலப் போக் கில் ஏற்பட்ட கூட்டு வாழ்க்கையின் உருவாக் கம் அவனது வாழ்வின் போக்கிலும் முறையி லும் மாற்றத்தை உருவாக்கியது.

தனி நபர் வாழ்க்கை நிலையிலிருந்து கூட்டு வாழ்க்கை நிலைக்கு என்று மனிதன் மாறினானோ, அன்றுதான் சமூகம் என்ற எண்ணக்கரு உருப்பெற்றது. சமூக வாழ்க்கை யின் அடிப்படை ஒன்றுபட்ட வாழ்வு என்பதாகும். அது சுயநல சிந்தனையின் அத்த எழுச்சியைக் கட்டுப்படுத்துகிறது. மற்றவர்களுடன் சேர்ந்து வாழும் ஒருவன் 'எனது' என்பதற்குப் பதிலாக 'எமது' என்று சிந்திக்கத் தலைப்படும்போது சமூக வாழ்வின் வேர் முளைக்கின்றது. தன்னு டன் சேர்ந்து வாழும் ஏனையோருடன் இசைந்து போக வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. அது இல்லையேல் கூட்டு வாழ்க்கை என்பது அர்த்த மற்றதாகி விடுகின்றது. இந்த வாழ்க்கை முறை தான் மனிதனை ஒரு சமூகப் பிராணியாக வளர்த்தெடுக்கின்றது. சமூக வாழ்க்கையில் உயர்ந்த மனித இனத்தின் இன்றைய உன்னத நிலைக்கு அடிப்படையில் கல்வியின் அமை தியான பங்களிப்பினைக் காணலாம்.

காலத்துக்கூடான சமூக வாழ்க்கையின் முன்னேற்றத்திலும் சாதனைகளிலும் கல்வியின் காத்திரம் எத்தகையதோ அதே அளவுக்குக் கல்வியின் செயற்பாட்டுக்குச் சமூகத்தின் கொடுப் பனவும் பாரியதாகும். இவை இரண்டினதும் இணைந்த தொழிற்பாடு தான் ஒவ்வொன்றின் சாதனைச் சிறப்புக்குக் காரணமாகும் என்பதை உலகளாவிய நோக்கில் காணமுடியும். ஒரு சமூகத்தில் காணப்படும் கல்வியின் பரிமாணம் அந்தச் சமூகத்தின் இயல்புக்கேற்றதாகவே இருக் கும். "வெள்ளத்தனைய மலர் நீட்டம்" என்ற கூற்று இங்கு பொருத்தமானதாகும். சமூகத்தின் தேவை அதன் வளம், எதிர்கால நோக்கு என் பன அங்கு நடைமுறையிலுள்ள கல்வியினைப் பிரதிபலிக்கின்றன. சமூகத்திற்குத் தேவைப்படும் ஆளிவை வளர்ப்பதற்கேற்றவையாகக் கல்லி கட்டு மானங்கள் எழுப்பப்படுகின்றன. அக் கட்டுமானங் களின் பலமும் பருமனும் சமூகத்தின் வளத்தி

லேயே தங்கியுள்ளன. சமூகம் எதிர்காலத்தில் எப்படியாக வளரவேண்டும் என்ன மாதிரியான முதன்மை அழுத்தங்கள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும் என்ற சிந்தனையே அதற்குப் பொருத்தமான கல்விக் கொள்கைகளை நிர்ணயிக்கின்றது.

மறுபுறமாகப் பார்ப்பின், சமூகம் செல்லும் திசையும், அதன் செல்வேகமும் செயற்றிறனும் கல்வியின் வழியிலே நெறிப்படுகின்றன. வகுக்கப்படும் கல்விசார் கொள்கைகளும், அவற்றுக்கூடாக வளர்ந்துவரும் அறிவின் தன்மையும், அந்த அறிவுப் பெருக்கும் ஆற்றல்களும் அவற்றைச் செயற்படுத்தும் ஆளணியும் சமூகத்தின் சிறப்புக்குக் கால்கோளாகின்றன. கல்வியின் ஆழமும் அகற்சியும் சமூகத்தின் செழிப்புக்கும் செறிவுக்கும் வித்திடுகின்றன. இந்த முறையில் கல்வியும் சமூகமும் ஒன்றோடொன்று இணைந்த வையாக – ஒன்றுக்கொன்று இன்றியமையாத தாக–ஒன்றிலொன்று தங்கியுள்ளதை அவதானிக்கலாம். இந்த வளர்ச்சியில் உண்மை இன்றைய எமது பின்னணிக்கு எந்த வகையில் எந்த அளவுக்குப் பொருந்தும் என்பதையும் மேலும் என்ன மாதிரியான பொருத்தல் முயற்சிகள் தேவைப்படுகின்றன என்பதையும் பார்க்க முனைதல் பயனுள்ளதாகும்.

சமூக உயர்வுக்கான கல்வி அச் சமூகத்தின் வளப் பெருக்கத்துக்கு வழி செய்ய வேண்டியது அவசியமாகும். சமூக பொருளாதார வளர்ச்சிக்கு ஆதாரமான அறிவினை வளர்ப்பதாகக் கல்வி அமையவேண்டும். அந்த வழியில் பயன்படக்கூடிய கல்விக் கொள்கைகள் வகுக்கப்பட்டு, அர்த்தமுள்ள வகையில் அவை செயற்படுத்த வேண்டும். அவற்றின் வழியில் எழுப்பப்படும் கட்டுமானங்கள் தான் நிலைக்கும். நாம் வகுக்கும் திட்டம் எதுவும் வெறும் இலட்சியக் கோட்டையாக இல்லாமல், யதார்த்த ரீதியில் திட்டமிடப்பட வேண்டும். எங்கேயோ, ஏதோ ஒரு அந்நியப் பின்னணியில் செயற்பட்ட செயற்பாடும் ஒரு வழிமுறையினை அப்படியே இறக்குமதி செய்து புனர்நடுகை முயற்சிகள் பயனளிக்க மாட்டா. எமது மக்களுக்குப் பொருத்தமான எமது மண்ணுக்குப் பயன்தரவல்ல கொள்கைகள், திட்டங்கள் உருவாக்கப்படுவதே சிறந்த சாதனையாகும்.

சிக்கல்கள் நிறைந்து காணப்படும் இன்றைய சமூக வாழ்க்கையில் இதமளிக்கும் வகையிலான கல்வியை வழங்குவது இன்னொரு தேவையாகும். பல்வேறு பிரச்சினைகள் மலிந்த இவ்வுலகில் மனித பயணத்தை முடக்குச் சந்தில் புகுத்தி விடாமல் சீரான விசாலமான பாதையில் இட்டுச் செல்ல வேண்டியது கல்வியின் கடமையாகும். கூடிவாழும் மக்களிடையே சந்தேகமும், குரோதமும், பகைமையும் இல்லாமல் பரிவுடனும் பாசத்துடனும் பண்புடனும் வாழும் சமூகப் பொருத்தப்பாட்டுக்கும் இசைவாக்கத்துக்கும் கல்வி அடித்தளம் இட வேண்டும். மனித விழுமியங்கள் உரிய முறையில் மதிக்கப்படாமையே இன்றைய அவலங்கள் யாவற்றுக்கும் மூலவேர் என்பதை உணர்ந்து கல்விக்கூடாக அதனைச் சீர்செய்ய முயற்சிக்கலாம். புத்தாயிர யுகத்தில் பொருந்துவதற்கு எம்மைத் தயார் படுத்தவேண்டும் என்று வலிந்து கட்டிக்கொண்டு வாதாடுவது மடடும் எங்கே கொண்டு செல்லப் போகிறது என்பதைச் சிந்திக்க வேண்டும். வாழ்க்கையில் வளமுடன் வாழ்வதற்காக மடடும் கல்வியில் கரிசனை செலுத்துவது போதாது. மனிதனை மனிதனாக மதித்து மனித நேயத்தை நிலைநாட்டி மனிதம் வளர உதவக்கூடிய கல்வியின் அவசியத்தை நாம் இன்று புறக்கணிக்கக் கூடாது.

கல்வியின் பயன் நிலையானதாக, உறுதியானதாக, பரந்ததாக இருக்க வேண்டுமேயானால், சமூகத்தின் பொறுப்பு பாரியதாகும். சமூகத்திலுள்ள சகலரையும் கல்வி சென்றடைவதை உறுதி செய்வதில் சமூகத்தின் பங்களிப்புக் கணிசமானதாகும். குடிமக்கள் ஒவ்வொருவரும் கற்பதற்கு ஆவன செய்வது அரசின் கடமையாகக் கருதப்படுகின்றது. உலகளாவிய நிலையில் இதன் உண்மை தெளிவானதுதான். இதற்கு வேண்டிய சட்டங்களை ஆக்கி அமுல் படுத்தும் கட்டாயக் கல்விமுறை பரவலாகப் பாவிக்கப்படுகின்றது. எமது நாடு போன்ற மூன்றாம் மண்டல நாடுகளில் கல்வியைக் கட்டாயப்படுத்தும் நடைமுறை எதிர்பார்த்தபடி சரிப்பட வில்லை. ஒரு புறத்தில் அதற்குத் தேவையான சட்டம் நிறைவேற்றப்பட்டு கல்வியை வழங்கும் பொறுப்புக் கட்டாயமாக்கப்பட்டு அதற்கான பங்களிப்புக்களும் போதியளவு இல்லை. இங்குதான் சமூகத்தின் பொறுப்பும் பங்கும் பரிமளிக்கின்றன.

கல்வியைப் பெறுவதில் சில மட்டங்களில் குறைவு காணப்படுவதற்கு இரண்டு முக்கிய காரணிகளை இனங்காணலாம். ஒன்று கல்வியின் தேவையை உணராமையினால் அதில் போதிய அக்கறையின்மை; மற்றது கல்வி வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கேற்ற வசதிகள் இல்லாமை. முதலாவது எமது உள்ளூர் சமூகங்களில் அடி மட்டங்களில் காணப்படும் பின்தங்கிய "உழைப்பாளி"களிடையே பரவலாகக் காணப்படுகின்றது. அன்றாட உழைப்பில் தங்கியிருக்கும் அந்த மட்டங்களில் பெற்றோர் தமது பிள்ளைகளுக்குத் தேவையாக

கருதுபவர்றுள் கல்வி முக்கியத்துவம் பெறுவ தில்லை. உணவு, உறையுள் என்பனதான் முத வில் வருகின்றன. இப்படியான சூழ்நிலைகளில் குடும்ப வருமானம் போதுமானதாக இல்லாவிடின், பிள்ளைகளும் உழைக்கும் நிலை தோன்றுகின் றது. அதனால் பிள்ளை பள்ளிக்கூடத்துக்குச் சென்று கற்கும் வழக்கு அருகிப்போய் விடுகின்றது.

இரண்டாவது காரணியாக நாம் இனங் கண்டது கல்வி வாய்ப்புக்களைப் பயன்படுத்து வதற்குப் போதிய வசதியின்மை. இதில் பொரு ளாதார நிலையே குறிப்பான கவனத்தைப் பெறு கின்றது. எமது நாட்டில் நடைமுறையிலிருப்பது இலவசக் கல்வி. அதாவது பள்ளிக்கூடத்தில் கல்வி கற்பதற்குக் கட்டணம் செலுத்தவேண்டிய தில்லை. அத்துடன் இலவச பாட நூல்கள், சீருடைத் துணி என்ற உதவிகளும் உண்டு. ஆனால் நிலைமையை நன்கு அவதானித்தால் பாட நூல்கள் முழுமையாகக் கிடைக்காமை, சீருடைத்துணிகள் போதாமை என்ற குறைபாடு களைக் காணலாம். இவற்றை நிவர்த்தி செய்யா மல் வசதி குறைந்தோர் கல்வி வாய்ப்புக்களை முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்று ஆதங்கப்படுவதில் அர்த்தமில்லை.

இவற்றுக்குச் சமூகம் என்ன செய்யலாம் என்ன செய்ய முடியும் என்ற கேள்விகள் எழத் தான் செய்கின்றன. கல்வியின் அவசியத்தையும் அதன் அனுகூலங்களையும் ஏற்கனவே குறிப் பிடப்பட்ட 'உழைப்பாளிகள்' மத்தியில் ஊன்று தல் ஒரு வழியாகும். கல்வியில் அக்கறை செலுத்தாமையினால் அறிவு குன்றியிருக்கும் மக்கள் மத்தியிலே அக்குறைவை நிறைவாக்கப் படிப்பறிவு வகுப்புக்களை ஒழுங்கு செய்யலாம். சமூகத்தின் பிற உறுப்பினர் தம்மீது கரிசனை காட்டுகின்றனர் என்ற எண்ணம் அம் மக்களி டையே புத்துாக்கத்தை வளர்க்க உதவும்.

வசதி குறைந்த மக்களுக்கு வசதிகளை ஆக்கிக் கொடுப்பது அரசின் கடமையாயினும், சமூகத்தின ஆதரவை முற்றாக ஒரங்கட்டி விட முடியாது.

"அன்ன சந்தீரமாயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிர நாட்டல்
மின்னகுள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கியொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கே சோழக்கெழுத்தறிவித்தல்".

என்ற பாரதியின் அடிகள் ஈண்டு நினைவு கூறத் தக்கன. ஏழைகளின் இன்றைய நிலையைப் பார்க்கும்போது பாரதியின் பாடல் இன்றும் பொருள் பொதிந்ததுதான்.

கல்வியில் சமூகத்தின் பங்களிப்பினை விசாலிக்கும் நோக்கில், இன்றைய கல்விக் கட் டமைப்பில், பழைய மாணவர் சங்கம், பெற் றோர் ஆசிரியர் சங்கம், பாடசாலை அபிவிருத் திச் சபை என்பன வளர்ந்துள்ளன. இவற்றுள் மூன்றாவது அண்மைக்கால வளர்ச்சி என்பது கருத்திற் கொள்ளத்தக்கது. முதலிரண்டும் அந் தந்த பள்ளிக்கூடத்தைச் சார்ந்த சமூகத்தின ரைக் கொண்டவை. மூன்றாவது முன்னைய இரண்டு தொடர்புகளோடு நலன் விரும்பிக ளையும் இணைத்தல் என்ற வகையில் பரந்த அடிப்படையை உள்ளடக்குகின்றது. இதன் மூலம் சமூகத்தின் கரிசனையும் கண்காணிப்பும் பெருகி நெருங்கி வருகின்றன. இதில் ஒரு விட யத்தில் எச்சரிக்கையுடன் செயற்படுதல் விரும் பத்தக்கது. பள்ளிக்கூடத்துக்கு உதவும் நோக்கி லேயே இந்த அமைப்புக்கள் உருப் பெற்றுள் ளன. நிதியுதவி மட்டுமல்லாமல் ஆக்கபூர்வ மான ஆலோசனை வழங்குவதும் அவற்றிடமி ருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. விழிப்புடன் செயற்படும் இத்தகைய அமைப்புக்கள் கல்வி நிறுவனங்களின் சொல்நெறி நேரியதாக இருப் பதை உறுதிப்படுத்தும் எனினும், அளவுக்கும் மிஞ்சிய ஆர்வம் சில சமயங்களில் தேவையற்ற தலையீடாக வியாக்கியானப்படுத்தப்படலாம் என் பதை நாம் மறந்துவிடக்கூடாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் இணைந்து செயற்படவேண்டி போரிடையே விரிசல்கள் ஏற்படக்கூடும். எந்த நிலையிலும் அது வேண்டத்தக்கதன்று.

ஒட்டு மொத்தமாக நோக்கில் கல்விச் சமூகம் இரண்டினதும் வெற்றியோ அன்றி தோல்வியோ அவற்றினது ஒருமித்த செயற்பாட் டின் போக்கிலேயே தங்கியுள்ளது. கல்வியை வழங்கும் நிறுவனங்கள், சமூகம், எல்லாமே ஒரே நோக்கில் செயற்படும்போது விளைபயம் நன்மை பெரியது. ஒன்றையொன்று அங்கீகரித்து ஒன்றுக் கொன்று மதிப்பளித்து இயங்கும்போது பயனாளிகள் மக்களே. அந்த இணைப்பும் இசை வும் அற்றுப் போனால் பாதிப்புக்குள்ளாவதும் அவர்களே. இந்த உண்மையை உணர்ந்தோமே யானால் எமது எதிர்காலம் பற்றி அஞ்ச வேண்டியதில்லை.

பேராசிரியர் வ. ஆறுமுகம்

பாடசாலைக் கல்வி முறையின் பயன்பாடும் முறைப்பாடும்

"பாடசாலையைத் திறவுங்கள், சிறைச்சாலையை மூடுங்கள்" என்ற வாக்கை மையமாகக் கொண்டு நமது நாட்டில் கிராமங்கள் தோறும் சமூக உணர்வு கொண்ட பல பெரியார்களின் கூட்டுமுயற்சியினால் அறிவாலயங்களாகிய பாடசாலைகள் பல தோற்றம் பெற்றன. மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறக்கும் அறிவாலயங்கள் கோயில்களாகவே பேணப்பட்டன. கிராம மக்கள் அனைவரும் தங்கள் கிராமங்களில் இருக்கும் பாடசாலைகளைத் தங்களுக்கும் தங்கள் பரம்பரைக்கும் உரிய அறியாச் சொத்து எனப் பேணி வந்தனர். பாடசாலை கட்டுவதற்குரிய நிலம், கட்டடங்கள், தளபாடங்கள் போன்ற மாணவர்களுக்குத் தேவையான பௌதீக வளங்கள் அனைத்தையும் பொதுமக்களே வழங்கினார்கள். பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. மாணவர்களுக்கு கல்வியைப் போதிப்பது மட்டுமல்லாமல் பாடப் புறச் செயல்களின் ஊடாக அவர்களுடைய ஆளுமை வளர்ச்சி அடைவதற்கும் பாடசாலைகளே ஆதாரமாக இருந்து வந்தன. மாணவன் தான் இப் பாடசாலையின் பழைய மாணவன் என்று வாழ் நாள் முழுவதும் பெருமையுடன் கூறக்கூடிய அளவிற்கு அக்காலத்தில் பாடசாலைகள் மாணவர்களை உருவாக்கி விட்டன. பாடசாலைகள் கோயில்களைப் போன்று பட்டமை போல் ஆசிரியர்களும் தெய்வமாகப் போற்றப்பட்டார்கள்.

இந்துக் கல்விப் பாரம்பரியத்தில் ஆசிரியர் பெறும் இடம் மிகவும் உன்னதமானது. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பது நம்மிடம் வழங்கும் முதுமொழியாகும். "மாதா பிதா குரு தெய்வம்" என்பது தமிழர் பண்பாட்டில் நிலவி வரும் உயர்ந்த வாக்கியமாகும். வெறுமனே வேதனத்திற்காகச் செய்யும் தொழிலாக ஆசிரியத் தொழிலை நமது முன்னோர்கள் கருதவில்லை. ஆசிரியத் தொழிலை நமது முன்னோர்கள் தொண்டாகவும் கிடைக்கின்ற ஊதியத்தை குருதட்சணையாகவுமே கருதினார்கள். சேவை செய்தலை வழிபாடாக நினைத்து கர்மயோகிகளாகவே தமது பணியை ஆசிரியர்கள் செய்தார்கள். தமது மாணவர்களின் உயர் விலும் சிறப்பிலும் அக்கால ஆசிரியர்கள் பெருமிதம் அடைந்தார்கள். தமது மாணவர்களை ஆசிரியர்கள் ஞானவாரிகளாகவே கருதினார்கள். மாணவர்களும் நல் ஆசிரியர்களை தங்கள் வாழ்நாள் முழுவதும் இதயத் தாமரையிலே வைத்துப் பூசித்தார்கள். சமூதாய நிறுவனங்களுக்கு தலைமை தாங்கி வழிநடாத்துபவர்களாக ஆசிரியர்கள் திகழ்ந்தார்கள். கோயில்கள், கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பொது நிறுவனங்களை வழிநடாத்தும் தளபதிகளாக, கிராமத் தலைமைக்காரர்களாக ஆசிரியர்கள் செயற்பட்டார்கள்.

இன்று பாடசாலைகளை நமது மக்களில் பலர் எமது சொத்து என்று நினைக்காமல் அரசாங்கச் சொத்தாகவே கருதுகிறார்கள். அறிவாலயங்களை கோயில் என்று போற்றிய காலம் மாறி வெறும் களியாட்ட நிலையங்களாக நினைக்கப் பார்க்கிறார்கள். பாடசாலைச் சொத்தை திருடுவது ஆலயச் சொத்தை திருடியதற்கு சமனாகும். இன்றைய போர்க்காலச் சூழலைப் பயன்படுத்தி பாடசாலையின் சொத்துக்கள் பல காணாமல் போய்விடுகின்றன. தனி மனித வாழ்வு நிலைப்பதும் இல்லை, நீடிப்பதும் இல்லை. ஆனால் நமது கல்லூரிகள் காலம் காலமாக நிலைத்து நின்று வாழையடி வாழையாக நமது சந்ததியினருக்கு அறிவொளியைப் பரப்பிக் கொண்டே இருக்கும். சமுதாயம் விழிப்பாக இருந்தால் சமூக நிறுவனங்களில் களவாடல் எதுவுமே நடைபெறாது. இன்று ஆசிரியத் தொழிலைப் புனித பணியாகச் செய்கின்றவர்களின் தொகையும் அருகிக் கொண்டே வருகின்றது. வேறு பொருத்தமான தொழில்கள் எதுவும் கிடைக்காததால் ஆசிரியத் தொழிலில் வந்து தஞ்சம் அடைந்தவர்களும் இருக்கிறார்கள். மாணவர் நலன், பாடசாலை நலன், சமுதாய நலன் ஆகியவற்றைச் சிந்தித்துச் செயற்படுபவர்களும் அருகியே காணப்படுகின்றார்கள்.

இலங்கை முழுவதும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட அரச பாடசாலைகள் இயங்குகின்றன. கல்வியில் அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்கப்படுகின்றது என்றே அரசு கூறுகின்றது. ஆனால் நடைமுறையில் நகர்ப்புறப் பாடசாலைகளுக்கும், கிராமப்புறப் பாடசாலைகளுக்கும் இடையே பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. அடிப்படை வசதிகள்கூட இல்லாத பாடசாலைகளும் உண்டு. நிறைந்த, மிதமிஞ்சிய வளங்களோடு இயங்கும் பாடசாலைகளும் உண்டு. நாடு முழுவதும் உள்ள பாடசாலைகள் திட்டமிட்ட முறையில் அமைக்கப்படவில்லை. சரித்திர அரசியல்

காரணங்களை மையமாகக் கொண்டே அக் காலத்தில் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. இலங்கையில் 1214 பாடசாலைகளில் 50 மாண வர்களுக்கு உட்பட்ட தொகையினரே கல்வி கற்று வருகிறார்கள். 1383 பாடசாலைகளில் 50ற்கும் 100ற்கும் இடைப்பட்ட மாணவர்களே கல்வி கற்று வருகிறார்கள். இலங்கையிலுள்ள மொத்தப் பாடசாலைகளில் ஏறத்தாழ 25%மான பாடசாலைகளில் நூறு மாணவர்களுக்கு உட் பட்ட தொகையே காணப்படுகிறது. மாணவர் களின் எண்ணிக்கையிலும் ஆசிரியர்களின் தரத் திலும், வளங்களிலும், பெற்றோர் ஈடுபாட்டிலும் மிகவும் குறைந்த தரங்களிலுள்ள பாடசாலை களில் கல்வி கற்கும் மாணவர்களின் நிலை மிகவும் பரிதாபகரமானது ஆகும். திறமையான மாணவர்கள், செல்வாக்குள்ள பெற்றோர் இல் லாத பாடசாலைகளுக்கு கல்வித் திணைக்கள அதிகாரிகளின் அருட்பார்வையும் கிடைப்பது அரிதாகவே காணப்படுகின்றது.

கல்வி என்பது மனிதனின் அடிப்படை உரிமை ஆகும். 5-14 வயதிற்குட்பட்ட பிள்ளை களுக்கு கட்டாயக் கல்வி வழங்கப்படல் வேண் டும் என்பது இலங்கை அரசின் கொள்கை ஆகும். பல வருடகாலமாக இச் சட்டம் நடை முறையில் இருந்தபோதிலும் ஏறத்தாழ 14% வீதமான பிள்ளைகள் பாடசாலை செல்வ தில்லை. நேரடி வறுமை, பெற்றோரின் அக்கறை யின்மை, போர்க்காலச் சூழ்நிலை என்பன இதற் கான காரணங்கள் ஆகும். கட்டாயக் கல்வியை முழு மாணவர்களும் பெற்றுக் கொள்ளக்கூடிய சூழ்நிலையை அரசு மனப்பூர்வமாக உருவாக்க வேண்டும்.

பரீட்சையை மையமாகக் கொண்டே இன்று மாணவர்கள் அனைவரும் இயங்கிக் கொண்டு இருக்கிறார்கள். பெற்றோரும் அந்த ஓட்டப் போட்டியில் பிள்ளைகளின் வெற்றியை எதிர்பார்த்தே செயற்படுகிறார்கள். பாடசாலைக ளும் தேசிய மட்டப் பரீட்சைகளின் பெறுபேறு களை தங்கள் பாடசாலைகளின் உயர் மதிப் பிற்கு அடிப்படைக் காரணம் என நினைக் கின்றன. தனியார் கல்வி நிலையங்களும் பரீட் சையை மையமாகக் கொண்டே கற்பித்தலை நடாத்துகின்றன. மாணவர்கள் சரியான உண வின்றி, ஓய்வின்றி பாடப்புறச் செயற்பாடுகளில் ஈடுபாடுகள் இன்றி சங்கீதக் கதிரை ஓட்டப் போட்டியில் பங்குபற்றுவது போல தேசிய மட் டப் பரீட்சைகளை நோக்கி ஓடுகிறார்கள். ஓட்டப் போட்டிகளில் தோல்வி அடையும் மாணவர்கள் உளத் தாக்கங்களுக்கு உள்ளாகுவதுடன் வாழ் வில் விரக்தியும் அடைகிறார்கள். பாடசாலையை விட்டு வெளிவீசப்படும் மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புக்களோ, தொழில் வாய்ப்புக்களோ அரசால் திட்டமிட்ட முறையில் சரியாக வழங் கப்படுவதில்லை. கற்ற கல்வியினால் எதுவித பயனையும் அடைய முடியாத மாணவர்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் தொல்லை தருபவர் களாக மாறி விடுகிறார்கள். நமது நாட்டின் மூல வளங்களைப் பயன்படுத்தக்கூடிய தொழில்சார் கல்விகள், விவசாயம் சார் கல்விகள் மாண வர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். முறை சாராக் கல்வி அறிவிருத்தி அடைவதோடு பாட சாலையை விட்டு வெளிவீசப்படும் மாணவர்கள் அனைவரும் அதற்குள்ளே உள்வாங்கப்படல் வேண்டும்.

தொழில் வாய்ப்புக்களை வழங்கும்போது வெறுமனே பரீட்சைப் பெறுபேறுகளை மாத்திரம் கருத்தில் கொள்வது தவிர்க்கப்படல் வேண்டும். இணைப் பாடவிதான நிகழ்வுகளில் மாணவர்கள் செய்த பங்களிப்புகளும் கவனிக்கப்படல் வேண் டும். மாணவர்களுடைய மன ஈடுபாடு, திறமை முதலியவற்றை இனம் காண்பதற்கும் விருத்தி செய்வதற்கும் பாடப்புறச் செயற்பாடுகளே துணை யாக அமைகின்றன. வாசிக்கும் பழக்கம் இன்று மாணவர்களிடையே அருகிக்கொண்டே போகின் றது. வாசிப்புப் பழக்கம் அருகுவதால் மொழி ஆற்றல் மிகவும் குறைந்து காணப்படுகின்றது. ஒவ்வொரு பாடசாலையிலும் தரமான நூலகங் கள் இருக்க வேண்டும். இந்த நூலகங்களின் ஊடாக மாணவர்களிடம் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல் வேண்டும். செய்முறை வேலைக ளில் மாணவர்கள் பாடசாலைகளில் அதிகம் ஈடுபடுத்தப்படல் வேண்டும். விஞ்ஞானம், விவ சாயம், மனையியல், தொழிற்பாடங்கள் ஆகியன கூடியளவு செய்முறையுடனேயே கற்பிக்கப்படல் வேண்டும். செய்முறை வேலைகளில் மாண வர்கள் ஈடுபடும்பொழுது அவர்களின் அறிவு, உறுதியாவதுடன் வேறும் பல திறன்கள் அவர் களுக்கு ஏற்படுகின்றன.

"முயற்சியுள்ள மாண்டரில் சிங்கம் போன் றவனையே திருமகளும் அணைவாள்" எனப் பஞ்ச தந்திரமும் கூறுகிறது. எட்டு போன்ற தசையும் இரும்பு போன்ற நரம்பும் கொண்ட இளைஞர் சமுதாயம் உருவாக வேண்டும் என் றார் சுவாமி விவேகானந்தர். "உய்வம் என்ற கருத்துடையோர்கள் உயிரினுக்குயிராகிய தெய் வம்" சக்தி தெய்வம் என்கிறார் பாரதியார். ஒவ் வொரு மாணவரினதும் உடல், உள்ளம், ஆன்மா ஆகிய மூன்றும் தூய்மை அடைவதற்கும், பூரணமனிதனாக தனது வாழ்க்கையை கொண்டு நடாத்துவதற்கும், சமூக விழுமியங்களை ஏற்று வாழ்வதற்கும் வழிகாட்டக் கூடியதாக அவனுக்கு

வழங்கப்படும் கல்வி அமைய வேண்டும். உலகிற்கு பயன்படக்கூடிய முழு மனிதனை உருவாக்கித் தரும் ஆதார நிலையங்களாக பாடசாலைகளை இயங்க வைப்பது அரசு, ஆசிரியர், பெற்றோர், கல்வி அதிகாரிகள், நலன் விரும்பிகள் ஆகிய அனைவரினதும் கூட்டுப் பொறுப்பாகும்.

கிராமத்தின் பண்பாட்டு நிலையங்களில் ஆலயங்களைப் போன்று பாடசாலைகளும் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்
B.A. Dip in Ed
(உப அதிபர் - பலாலி ஆசிரிய கலாசாலை)

நாங்களே நமக்கு நோய்களை உண்டு பண்ணுகிறோம்

நோய்களை தொற்றும் நோய்கள், தொற்றாத நோய்கள் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். வயிற்றோட்டம், வயிற்றுளைவு, நெருப்புக் காய்ச்சல், கொலரா போன்ற நோய்கள் தொற்று நோய்களுள் சில ஆகும். இவை பெரும்பாலும் குடலோடு சம்பந்தப்பட்ட வியாதிகளே. இந் நோய்கள் மேல் நாடுகளில் குறைந்த விகிதத் திலே உள்ளன. ஆனால் எமது நாட்டில் இவ் வியாதிகள் கூடுதலாகக் காணப்படுகின்றன. மக்கள் சுகாதாரத்தையும், சுத்தத்தையும் பேணிக் கொள்ளாது அலட்சியப் போக்கில் வாழ்வதே இதற்குக் காரணம். அதாவது நாம் கண்டகண்ட இடங்களில் மலசலம் கழிக்கக்கூடாது. மலசல கூடத்திலேயே மலம் கழிக்க வேண்டும். மலம் கழித்தபின் சவர்க்காரம் கொண்டு கைகளை நன்றாக கழுவ வேண்டும். கொதித்து ஆறிய நீரைப் பருக வேண்டும். உணவுப் பண்டங்களை சுத்தமான இடங்களில் வைத்து பாதுகாக்க வேண்டும். இம் முறைகளைத் தவறாது கடைப் பிடிப்போம் ஆயின் இவ் வியாதிகள் பரவுவதை நாம் பெரும்பாலும் தடுக்கலாம்.

நுரையீரல் தாக்கம் பெரும்பாலும் சுற்றாடல் மாசுபடுவதாலேயே பெரும்பாலும் ஏற்படுகின்றது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வாயுக்கள், கழிவு நீர், கழிவுப் பொருட்கள், தூசுகள் போன்றவற்றால் வளியும் நீரும் மாசுபடுகின்றது. நமது வேலைத்தலங்களையும் வீட்டையும் சுத்தமாக வைத்திருந்தால் இந்நோயின் தாக்கத்தைத் தவிர்க்கலாம். முக்கியமாக பீடி, சிகரெட், சுருட்டு போன்றவற்றைப் புகைப்பதாலும் நுரையீரல் தாக்கம் ஏற்படுகின்றது. நுரையீரல் நல்லமுறையில் இயங்க முடியாமல் நாளடைவில் அதன் செயல்திறன் குறைந்து போகின்றது. இது நாளடைவில் கூடுதலான சளியை உண்டாக்கி மூச்சுக்குழல் அழற்சி (Chronic bronchitis) என்னும் நோயை உண்டாக்குகின்றது. இந்நோய் தொடங்கி இரண்டு ஆண்டுகளுக்கு விட்டுவிட்டு இருமல் இருக்கும். ஆனால் மூன்று மாதங்களுக்கு தொடர்ச்சியான இருமலும் சளியும் இருக்கும். காலப்போக்கில் கலங்கள் விகாரம் (Mutation) அடைந்து புற்றுநோயை உண்டாக்கும்.

எமது சுற்றாடலில் தூசு, பூஞ்சணம் (Fungus) போன்ற அழுக்குகள் இருந்தால் தொய்வு (Asthma) போன்ற வியாதிகள் வரக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றது. நமது சுற்றாடலில் பல கிருமிகள் இருந்தால் நுரையீரல் தாக்கம் நிமோனியா போன்ற வியாதிகள் பொதுவாக ஏற்படலாம். இதில் கயரோகம் முக்கியமான நோய் என்பதை நாம் மறக்கக்கூடாது. அனேகமாக நுரையீரலில் வரும் நோய் நெருங்கிப் பழகுவதனாலேயே தொற்றுகின்றது.

தோல் மூலம் தொற்றும் வியாதிகளான சிரங்கு (Syphillis, gonnorrhoea, Trichomonas, Vaginitis) பாலியல் உறவுகளினால் ஏற்படுகின்ற எயிட்ஸ் போன்ற வியாதிகளும் தொற்று வியாதிகளாக கருதப்படுகின்றன.

மலேரியா நோய் வராது தடுப்பதற்கு நாம் எவ்வளவோ ஆலோசனைகளும் அறிவுறுத்தல்களும் வழங்கி இருந்தும் மக்கள் அவ் வழிகளைப் பின்பற்றி நடக்காது இருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். ஆனாலும் இவ் வருடம் நோய் பரவும் வீதம் குறைந்து செல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. வீடுகளிலும் எமது சுற்றாடலிலும் காணப்படும் பழைய தகரப்பேணிகள், சிரட்டைகள், ரையர்கள், பழைய தண்ணீர்த்தொட்டிகள் ஆகியவற்றில் நீர் தேங்கி இருக்காது பார்த்துக் கொள்ளல் வேண்டும். இதனால் நுளம்பின் பெருக்கத்தை ஓரளவு

குறைத்துக் கொள்ளலாம். நோயால் பாதிக்கப் பட்டவர்கள் வைத்தியர்களின் ஆலோசனைளின் படி மருந்துகளை ஒழுங்காகவும் இடைவிடாது தொடர்ந்தும் உட்கொள்ளவேண்டும். எக்காரணம் கொண்டும் வைத்தியரின் அறிவுறுத்தல் இன்றி மருந்துகளை நிறுத்தக்கூடாது. மருந்துகளை ஒழுங்கீனமாக விட்டு விட்டு உட்கொண்டால், மலேரியாக் கிருமிகள் மருந்துகளுக்கு எதிராக இயங்கிச் சீவிக்கக்கூடிய வல்லமையைப்பெற்று விடுகின்றது. பின்பு வைத்தியர்கள் அந்நோயைக் குணப்படுத்துவதற்கு மேலும் மேலும் வலுவான மருந்துகளைக் கொடுக்க வேண்டியுள்ளது. அதனால் ஏற்படும் பக்க விளைவுகள் அதிக மாகும். அது மாத்திரம் அன்றி வைத்தியசாலை யில் தங்கி மருந்து எடுக்கவேண்டிய நிலையும் உருவாகலாம்.

இதைவிட வீடுகளில் கிருமிநாசினிகள் தெளிக்க வருவோருக்கு நாம் உரிய முறை யில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்த கிருமி நாசினிகளை வீட்டுக்குள் தெளிக்க அனுமதிக்க வேண்டும். வீடுகளுக்கு வெளியே தெளிப்பதால் உட்பகுதிகளில் இருக்கும் நுளம் புகளை அழிக்க முடியாது. இதனால் நுளம்பு களின் பெருக்கம் கூடிக்கொண்டே போகின்றது. இந்த வகையான செயற்பாடுகளினால் நாம் நமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் பெரிய துரோ கம் செய்கின்றோம் என்பதை மறந்துவிடல் ஆகாது. இந்த நுளம்புகளை ஒழிக்கும் நடவடிக் கைகளுக்கு வெளிநாடுகள் தொடர்ந்தும் உதவி அளிக்கும் என்பதை நாம் எதிர்பார்க்கக்கூடாது. நாமே நமது வீட்டையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இதுவே நாம் மனித சமுதாயத்திற்கு செய்யும் மாபெரும் தொண்டாகும்.

இலி தொற்றாத நோய்களான நீரிழிவு, இரத்த அழுத்தம், புற்றுநோய் என்பவற்றை சற்று கவனத்திற்கு எடுப்போம். நீரிழிவு நோய் பெரும் பாலும் உணவுக் கட்டுப்பாடு இன்றி அதிகளவு உணவை உண்பவர்களுக்கும் அளவுக்கு அதிக மான சீனியைச் சேர்த்து தயாரிக்கப்பட்ட உணவுப் பண்டங்களை உண்பவர்களுக்கும், மாப்பொருள் அதிகமாக உள்ள உணவுகளை உண்பவர்களுக்கும் இந் நோய் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்பு உண்டு. சிறு வயதில் இருந்தே இனிப்புச் சேர்க்கப்பட்ட உணவுகளையும் பானங் களையும் அதிக அளவில் உண்ணாது குறைத் துக் கொள்ள வேண்டும். இனிப்புச் சுவை தவிர்ந்த ஏனைய சுவையுடைய உணவுகளை யும் வெறுக்காது சாப்பிட்டு வர வேண்டும். உதாரணமாக நாம் கசப்பு உணவுகளை முற் றாக வெறுக்கக் கூடாது. வாரத்தில் அதனையும் இரண்டு மூன்று நாட்களாவது உண்ண வேண் டும். ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான உணவின் அளவை அறிந்து உண்ணவேண்டும். தேவைக்கு மேலதிகமாக உண்ணக்கூடாது. எடுத்துக்காட்டாக மேல்நாடுகளில் தேநீர் தயா ரிக்கும்போது கோப்பி, தேயிலை, சீனி, பால், கொதிநீர் என்பன தனித்தனியாகவே இருக்கும். ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான அளவை எடுத்து தேநீர் தயாரித்துக் கொள்வர். இத்தகைய ஓர் நிலையை நமது வீடுகளிலும் பொது வைப வங்களிலும் வைத்துக் கொண்டால் ஒவ்வொரு வரும் தமது உடலை நோய் நொடியில் இருந்து பாதுகாக்கலாம்.

இரத்த அழுத்த வியாதி வராது தடுப்ப தற்கு சிறியவயதில் இருந்தே நல்ல உணவுப் பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளல் வேண் டும். நாளாந்தம் முதலில் கீரைவகை உணவு களை உண்டு பதினைந்து நிமிடநேரம் கழித்தே சோற்றை உண்ண வேண்டும். முதலில் சோறு உண்பது வைத்திய முறைகளுக்கு உகந்த தல்ல. நிரம்பல் அடைந்த (Saturated) எண்ணை களான தேங்காய் எண்ணெய், இலுப்பெண் ணெய் போன்றவற்றை உணவில் சேர்க்கும் விகிதத்தைக் குறைத்துக் கொள்ளல் வேண்டும். உணவு அருந்தியவுடன் படுக்கைக்குச் செல்லக் கூடாது. சிறிது தூரமாவது நடந்து உலாவி வரவேண்டும். மதுபானம் பருகக்கூடாது. புகைத் தல் கூடாது. அளவுக்கு மீஞ்சிய மனக்கிளர்ச்சி வரக் கூடாது. கோபம், பொறாமை, பகை, கவலை இவைகள் எல்லாம் இவ்வியாதியைக் கூட்டிக் கொண்டே செல்லும். ஒரு பெரியார் கூறிய வார்த்தைகள் இன்றும் என் மனத்தில் நிற்கின்றது.

"வீணாய் உண்ணாதே", "வீணாய் உறங் காதே", "வீணாய் உரையாதே". புற்றுநோயை முன்பே இதில் கூறியுள்ளேன் புகைத்தல், வெற்றிலை பாக்குப் போடுதல், வாயில் புகை யிலையையும் வெற்றிலையையும் வைத்து அடக்கிக் கொள்ளுதல் இவற்றை முற்றாகத் தவிர்க்க வேண்டும். மிகவும் சூடான நிலை யில் உணவுகளையும் பானங்களையும் உண் ணக்கூடாது. பற்களில் அழுக்குச் சேராதபடி பார்த்துக் கொள்ளல் வேண்டும். இம்முறைகளை நாம் நன்கு பேணினால் இயன்றவரை இவ் வியாதி வராது தவிர்க்கலாம்.

வைத்திய கலாநிதி செ. இந்திரராசா
ஆலோசகர்
M.B.B.S (Ceylon)
D.T.C.D (Wales U.K)

இந்துக் கலைகளின் மகத்துவம்

கலை என்பது பல பொருள் குறிக்கும் சொல் எனினும் கலை என்பதற்கு அழகார்ந்த செயல்திறம் எனும் பொருளின் அடிப்படையில் பலவாறு விரிந்து நிற்கும் கருகளைக் காண லாம். இயல்பாகத் தோன்றிய பொருளை இயற் கையாகவும், மக்களால் செயற்கையாக உரு வாக்கப்பட்ட பொருளைக் கலையாகவும் அல் லது கலைப் படைப்பாகவும் கருதலாம். காண் கிற காட்சியிலும் கேட்கிற இன்னோசையிலும் மனங்கனிந்து நாட்டத்துடன் திரட்டப்படும் அழகு ணர்வை ஒருவன் எவ்வாறெனினும் புறக்கருவி வாயிலாக புலப்படுத்த ஆர்வங் கொள்கின்றான். அவன் கல்லைக் கருவியாகக் கொண்டு ஓவி யத்தையும், ஓசையைக் கருவியாகக் கொண்டு இசையையும் நடிப்பைக் கருவியாகக் கொண்டு கூத்தையும் இவ்வாறே சிறப்பான ஒவ்வொன் றையும் கருவியாகக் கொண்டு ஒவ்வொரு கலையையும் உண்டாக்கினான் எனலாம். "மனித உறவுகளையும் வாழ்க்கைக் குறிக் கோள்களையும் வகுத்து ஒழுங்குபடுத்துவதற் காகச் சமுதாயத்திடம் காணலாகும் நுட்பமான கவர்ச்சியுள்ள ஆற்றலுடைய கருவியே கலை" என்பர். இராதா கமல் முகர்சி. "கலையே வாழ் வின் வழிகாட்டும் ஒளிப்பந்தம்" என்றார். ஆஸ் கார் ஒயில்டு. "சமய அனுபவம், கலை அனுப வம் ஆகிய இரண்டும் ஒரே அனுபவத்திற்குக் கொடுக்கப்பட்ட இரட்டைப் பெயர்கள்" என்பர் டாக்டர் ஆனந்தகுமாரசுவாமி. இவ்வாறாக கலை என்பதற்கு அவ்வக் காலங்களில் மக்களின் வாழ்வியற் பண்பாட்டிற்கேற்பவும், நாகரிக வளர்ச்சிக்கேற்பவும், அவரவர் எந்தக் கோணத் தில் நோக்குகின்றனரோ அந்தந்தக் கோணத் தைப் பொறுத்து விளக்கம் தரப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

இந்தியாவிலே தோன்றி வளர்ந்த கலை கள் இந்தியக் கலைகள் என அழைப்பர். அவற் றில் ஒரு பகுதியாக இந்துக் கலைகள் விளங் குகின்றன. இந்துக் கலையானது கட்டிடம், சிற் பம், ஓவியம், இசை, நடனம் எனப் பல வகை களில் விரிந்து விளங்குகின்றது. இந்துக்கள் வளர்த்த கலைகள் அறுபத்து நான்கு எனக் கூறப்படுகின்றது. இதனையே "ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என்னம்மை" எனும் பாடல் அடியினாலும் "எண் ணெண் கலையும் இசையுடன் போக" என்ற சிலப்பதிகார அடிகளாலும் அறிந்து கொள்ள முடிகின்றது. இந்துக்களின் பண்பாட்டிலே சம யம், தத்துவம், கலை ஆகிய மூன்றும் ஒன்று டன் ஒன்று பிரிக்கமுடியாதபடி பின்னிப் பிணைந் துள்ளன. இந்துக் கலைகளைப் பொறுத்த மட் டிலே தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகும் வண்ணம் அவை யாவும் தெய்வீக நிழலிலே தோன்றி வளர்ந்துள்ளன எனலாம். கலை உணர்வும், சமய உணர்வும் ஒரே அடிப்படை யில் இருந்து உண்டானவை எனலாம். இரண் டும் பரிபூரணமான பேரின்ப அனுபவத்தை இலட் சியமாக உடையவை. ஒன்று புலன்களின் வழி தூண்டப் பெறுவது, மற்றையது சிந்தனையின் வழியாக உணரப்படுவது. சமய உணர்வில் தலைநின்றவர்கள் தாம் பெற்ற அனுபவங்க ளைப் புலன்கட்கும் புலப்படத்தக்க வகையில் வெளிப்படுத்தும்போது அவை கலை வடிவம் பெறுகின்றன. இந்து சமயம் இறைவனை ஆட வல்லானாகக் கண்ட பெருமை உடையது. அவ னாட்டத்திலே கலையும் சமய தத்துவமும் இணைந்துள்ள பெருமை சிந்திக்கத்தக்கது. இவ்வாறு இறையுணர்வுடன் கலை உணர்வு கொண்டுள்ள தொடர்பு காரணமாக ஆலய மானது ஆண்டவனின் அருள் சுரக்கும் நிலை யமாக மட்டுமன்றி, நுண் கலைகளின் உறைவி டமாகவும், கலை வளர்க்கும் அரங்கமாகவும் இருந்து வருவதைக் காணமுடிகின்றது. கட்டிடக் கலைகளில் கைதேர்ந்த ஸ்தபதி என்ற உயர் கலைஞன் தொடக்கம் பூமாலை தொடுப்போன் என்ற சாதாரண கலைஞன் வரை ஆலயத்தின் அரவணைப்பிலேயே வளர்ந்து வந்துள்ளதைக் காண முடிகின்றது. இவை யாவும் இந்துக் கலைகளின் தெய்வீகத் தன்மையை உணர்த்து வதாக உள்ளன.

இந்துக் கலையின் சிறப்பியல்புகளாகப் பலவற்றை எடுத்து நோக்கலாம். இந்துக் கலை களில் சிறப்பாகக் கருதப்படும் ஒரு தன்மை "அனாமதேயம்" எனலாம். அதாவது இந்துக் கலைப் படைப்பை வரைந்தவர் யார் என்று குறிப்பிட முடியாது. இது இந்துக் கலையின் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டுகின்றது. அடுத்து இந்துக் கலைகள் "மறைபொருள்" தன்மை உடையனவாக விளங்குவதும் ஒரு சிறப்பான அம்சம் எனலாம். உதாரணமாக நடராஜ திரு வுருவம் ஐந்தொழில் தத்துவத்தினையும் மறை பொருளாக உணர்த்தி நிற்கும் ஒரு வடிவமாக

விளங்குகின்றது. அடுத்து இந்துக் கலைகள் குறியீட்டுத் தன்மை வாய்ந்தவையாகவும் விளங்குவது ஒரு சிறப்பியல்பாகும். அதாவது இங்கு கலைகளின் இறுதி உணர்வு குறியீட்டினூடாக உணர்த்தப்படுகின்றது. இந்தக் குறியீட்டை நாம் ஆலயங்களில் காணும் விக்கிரகங்களில் காண முடிகின்றது. உதாரணமாக தட்சணாமூர்த்தியின் திருவுருவில் காணப்படும் சின் முத்திரையானது ஆன்மாவானது மும்மலங்களில் இருந்து விலகி பதி ஆகிய இறைவனை அடைதல் வேண்டும் எனும் கருத்தினை குறியீட்டின் மூலமாக மௌன மாக உணர்த்தி நிற்பதைக் காண முடிகின்றது. இவ்வாறாக சிறப்புற்று விளங்கும் இந்துக் கலை களை மேலை நாட்டுக் கலைகளுடன் ஒப்பிட்டு நோக்கும்போது மேலும் இந்துக் கலைகளின் சிறப்பினை அறிய முடிகின்றது. இந்துக் கலை கள் தெய்வீகத் தன்மை வாய்ந்தவை என்பது பற்றி காவல் என்ற வரலாற்று அறிஞர் பின்வரு மாறு கூறியுள்ளமை சிந்திக்கத்தக்கது. அதாவது "ஐரோப்பியக் கலையானது சிறகுகள் கத்திரிக் கப்பட்ட பட்சியைப் போன்று மேல் எழாது. நிலப் பரப்பில் உள்ள அழகினை மட்டும் அளிக்கின் றது. இந்தியக் கலையோ எனில் பிரபஞ் சத்துட் புகுந்து மனம், வாக்கு, காயம் ஆகிய வற்றிற்கு எட்டாத உண்மைப் பொருட்களின் அழகை நில உலகிற்குக் காட்டுகின்றது என்கி றார். மேலைநாட்டுக் கலை "கலை கலைக்கா கவே" என்று விளக்கி நிற்க, கீழைநாட்டுக் கலை களானது "கலை இறைவனுக்காகவே" என்ற கோட்பாட்டை உணர்த்தி நிற்பதைக் காண முடி கின்றது. எனவே இந்துக் கலைகள் கலைக்காக மட்டும் வளர்க்கப்படவில்லை. மக்கள் மனதில் தெய்வ பக்தியையும் மன அமைதியையும் ஒழுக் கத்தையும் உயர்ந்த இலட்சியங்களையும் ஏற் படுத்து வதற்காகவே வளர்க்கப்பட்டன எனலாம்.

திருமதி. சுகந்தினி சிறிமுரளிதரன்
விரிவுரையாளர்
இந்துநாகரிகத் துறை
யாழ் பல்கலைக்கழம்

விஞ்ஞானம் மக்களுக்காகவே

விஞ்ஞானம் வீறுநடை போட்டு விரைவாகச் சென்ற நூற்றாண்டில் வந்துள்ளதை யாவரும் அறிவர். கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞான விந்தை கள் தற்போது வந்துள்ள புத்தாயிரம் ஆண்டில் அறுவடை செய்யப்படவுள்ளன. அகில உலகத் திலும் நடந்துகொண்டிருக்கும் விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றத்தை நாம் அறிந்திருப்பது அவசியமாகும். இதற்காக எங்களை நாம் தயார்ப் படுத்தி வைத்திருத்தல் அவசியமாகும்.

முக்கியமாக வளர்ந்து வரும் மக்களுக் கான உணவு, உடை, உறையுள் மேலும் இன்னோரன்ன வசதிகள் குறிப்பாக போக்கு வரத்து, தொலைத் தொடர்பு, விவசாயம், கால் நடை வளர்ப்பு, மருத்துவம் ஆகியவை மேலும் வளர்ச்சி பெற வாய்ப்புள்ளது.

குறிப்பாக சர்வதேச மட்டத்தில் ஒருவ ரோடு ஒருவர் தொடர்பு கொள்ள E-mail இல் அதிசயிக்கத்தக்க முறையில் கடிதங்களை உட னேயே அனுப்பும் வழிவகைகள் உள்ளன. இதனால் வேண்டிய பதில்களை உடனே பெற முடியும். உலகத்தில் எந்த இடத்தில் நடக்கும் புதினங்களையும் பத்திரிகையில் வாசிப்பதுபோல Internet மூலமாக வாசித்தறிய முடியும். விஞ் ஞான சஞ்சிகைகள், அறிக்கைகள் ஆகியவற்றை யும் இதனால் வாசித்தறியவோ அல்லது ஒரு பிரதி எடுக்கவோ முடியும். Telephone, Telex ஆகியவற்றுக்கு இன்று அவசியமில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. பத்திரிகைகள் கொம்பியூட்டர் மூலமாகவே இப்போது உருவாகின்றன. அச்சுக் கோர்ப்பு முறை இப்போது அருகியுள்ளது. எந்த முறையிலும் எந்த வழியிலும் அழகாகப் பத்திரி கைகளையோ அல்லது புத்தகங்களையோ ஆக்க முடியும். ஒரு புத்தகத்தை அச்சடிப்பதற்கு பல காலம் எடுக்கமுடிந்தது. தற்போது உடனடியாக புத்தகங்களை, சஞ்சிகைகளை அடிக்க முடியு மான நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு மேலாக ஒருவருடன் ஒருவர் தனிப்பட்ட முறையில் கதைக்கவேண்டும் என்றால் அதற்கான செலுலர் போன் (Cellur phone) இருக்கிறது. அதன் மூல மாக எப்போதும் வேண்டியர்களுடன் தொடர்பு கொள்ளலாம். கார்களிலிருந்தோ வேறு எந்த இடத்திலிருந்தோ இவற்றை இயக்க முடியும். சில வேளைகளில் ஒருவர் அந்த இடத்தில் இல்லையானால் அந்தச் செய்திகளை எடுக்கக் கூடிய வழிவகைகள் செய்யப்படுகின்றன. வரும்

காலத்தில் யார் பேசுகிறார்கள் என்பதை தெரிந்து கொள்வதற்காக ஒரு திரையுமே கண்டுபிடித்து விடுவார்கள் போலும். ஒருவர் ஒரு கூட்டத்திற் குப் போகாமலேயே தூர இடத்திலிருந்து Satellite மூலமாக பொதுசனம் உள்ள இடத் தில் திரையில் காட்டப்பட்டு அவர் பேசுவதை யும் ஒலிபெருக்க முடியும். மேலும் T.V, Deck மூலமாக பல அறிவுள்ள படங்களையும் விடயங் களையும் காட்டமுடியும். இதே போன்று Vedio எடுப்பவர்கள் அப்படங்களை மக்கள் விரும்பும் படி அற்புதமாக எடுக்க முடிகிறது. இதேபோன்று சினிமாவில் காட்டப்படும் காட்சிகள், பாட்டுக் களுக்கான அபிநயங்கள், நடிப்புக்கள் யாவும் விஞ்ஞான முறையில் விவேகமாகக் காட்டப்படு கின்றன. இவையாவும் கணனி மூலமாகச்செய்து வருகின்றனர். சுருங்கக்கூறின் தொலைத்தொடர்பு வசதிகள் இன்று நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருவதோடு, அவசியத்தையும் அற்புத மான கண்டுபிடிப்புக்களையும் செய்து வைத்துள் ளனர். இது மேலும் வளர வாய்ப்புண்டு. இரண்டு நாடுகளுக்கிடையில் நடைபெறும் யுத்தங்களுக் கும் எத்தனையோ முறையான ஆயுதங்கள் உண்டாக்கப்பட்டு வருகின்றன. பாதுகாப்பு உப கரணங்கள் பலதரப்பட்டவையாகும். சாதாரண மான துவக்குகளைவிட, தற்போது குறிபார்த்துச் சுடக்கூடிய துப்பாக்கிகள், மறைவாக வைத் திருக்கக்கூடிய துப்பாக்கிகள், போர்களில் பாவிக் கப்படும் பல விதமான மோட்டார் ரதங்களில் பொருத்தப்படும் விசேடமாக அமைக்கப்பட்ட பல துப்பாக்கிகள் கொண்ட, சுற்றிச் சுற்றி தானாகவே இயங்கும் துப்பாக்கிகள் நடைமுறை யில் இருந்து வருகின்றன. மேலும் Chain block இல் பொருத்தப்பட்ட பீரங்கிகள் பல நாடுகளில் பாவிக்கப்படுகின்றன. பலவிதமான ஷெல்கள் (Shell) மிகத் தூரத்திலிருந்து சரியான இடத் தில் தாக்கப்படக்கூடியவாறு பல நாடுகளில் பாவிக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் செய் வதற்கு நுண்ணிய அறிவுடைய விஞ்ஞானி களால் தான் செய்யமுடியும். மேலும் வானத்தி லிருந்தும் கடலிலிருந்தும் ஆகாய விமானம், கப்பல்கள் ஆகியவற்றைத் தாக்கக்கூடிய வழி வகைகள் உலகத்தில் சண்டை நடக்கும் இடங் களில் பாவிக்கப்படுகின்றன. கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஆயுதங்களையும் கண்டுபிடித் துள்ளனர். இன்றைய விஞ்ஞான யுகத்தில் போர்களுக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட உபகர ணங்கள் அளப்பரியன.

மக்கள் நலன் கருதி மக்களால் அன்றா டம் பாவிக்கப்படும் பொருட்களில் கலப்படம் இருக்கின்றனவா? என்பதை அறிவதற்காகப் பல விதமான வழிவகைகள் இருக்கின்றன. இவற் றைச் சரியான முறையில் செயற்படுத்துவதனால் கலப்படங்களைக் கட்டுப்படுத்தலாம். உணவு வகைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள உணவுப் பதார்த்தங்களின் அளவுகள் இருப்பதை உறு திப்படுத்துவதற்கான வழிவகைகள் உண்டு. இத னால் வேண்டிய உணவு வகைகள் சீராக மனி தனுக்கு வந்து சேர்கின்றது. உணவே மனித னுக்கு முக்கியமாகும். கலப்படமற்ற சுத்தமான உணவை உண்பதனால் மனிதனின் தேகாரோக் கியம் சிறப்பாக அமைகின்றது. அவர்களில் தேகாரோக்கியம் குறைவதற்குக் காரணம் அவர் கள் உண்ணும் உணவே. எனவே கலப்படம் செய்யாத உணவுகள் கண்டுபிடிக்கும் முறை இப்போது விரிவடைந்துள்ளது.

Electronic, Electrical, X-ray, Laser ஆகிய வற்றினால் ஆன விஞ்ஞான உபகரணங்கள் இன்று பலவாறாக பெருகியுள்ளன. உணவு சமைப்பதற்கு, வெட்டுவதற்கு அரைப்பதற்கு ஆகியவற்றிற்கான பலவிதப்பட்ட உபகரணங் கள் இன்று அதிகளவில் உள்ளன. அடுப்பை மூட்டிச் சமைக்கின்ற காலம் போய் இன்று மின் சார அடுப்புக்கள், வாயு (Gas) அடுப்புக்கள், உயிர்வாயு (Bio-gas) அடுப்புக்கள் ஆகியன மலிந்து வருகின்றன. எனவே சமையல் செய் வது பெரிய காரியமாக இருக்கமாட்டாது. இவற் றிற்கெல்லாம் பின்னணியில் செயல்படுவது விஞ்ஞான அறிவேயாகும்.

நோய் தடுப்பு ஓர் முக்கியமான விடய மாகும். இதற்காக சில நோய்களைத் தடுப்பதற் காக வக்சீன் ஏற்றப்படுகிறது. இவை பிறபொருள் எதிரியாகும். முக்கியமாக சின்ன முத்துக்காக இவ்வக்சீன் பாவிக்கப்பட்டு இப்போது சின்ன முத்து வைரசை இவ்வுலகத்திலிருந்து அகற்றி விட்டனர். இது ஒரு போற்று தற்குரிய விடய மாகும். மிகவிரைவில் போலியோ வருத்தம் உலகத்தை விட்டு அகல வழிவகை செய்யப் படுகிறது. போலியோ சொட்டு மருந்தை ஒவ் வொரு சிறு பிள்ளையும் தவறாது எடுத்து வந்தால் இந்நோய் அகற்றப்படுவது உறுதி. புற்றுநோய் மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்பட வில்லை. இது விஞ்ஞானிகளுக்கு இன்று ஒரு சவாலாக இருக்கிறது. காரணம் யாதெனில் புற்றுநோய் இதனாற்றான் வருகின்றது என்று கூறமுடியாது. இதன் காரணமாக மனிதன் பாவிக்கும் எல்லாப் பொருள்களும் குறிப்பாக கிருமிநாசினி, களைநாசினி, மருந்துவகைகள், புகைத்தல் ஆகியவை யாவும் இன்று புற்று நோய் தரும் வஸ்துக்களாக காணப்படுகின்றன. புற்று நோய்களுக்கான ஆராய்ச்சிகள் அளவற் றனவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு இன்னும் முடிவு வரவில்லை. இதே போன்று எயிட்ஸ் நோய் ஒரு முக்கிய உயிர்

கொல்லியாக இருக்கின்றது. இதனை அகற்று வது விஞ்ஞானிகளுக்குப் பெரும்பாடாக இருக் கிறது. நாளுக்கு நாள் இந் நோயால் பீடிக்கப் பட்டவர்கள் தொகை கூடிக்கொண்டே போகிறது. இது பரவாமல் இருப்பதற்கு வழிவகைகள் இருப் பினும் தற்பொழுது இதனை நிவர்த்தி செய்வ தற்கு விஞ்ஞானிகள் தம்மாலான முயற்சி களைச் செய்து வருகின்றனர்.

குளோனிங் முறையில் உயிர்களை உற் பத்தி செய்யும் திறனை விஞ்ஞானிகள் அறிந்து கொண்டுள்ளார்கள். இதன் காரணமாக அதாவது ஆண்பெண் கலப்பின்றி உயிரியல் முறையில் ஒரு உயிரை உண்டாக்கிய பெருமை அவ்வுயி ரியல் விஞ்ஞானிகளையே சாரும். இதனால் பல் வேறு விதமான கால் நடைகளை உற்பத்தி யாக்க முடியும். குறிப்பாக அதிக பால், இறைச்சி தரக்கூடிய பல காலத்திற்கு வாழ்ந்து பயனளிக் கக்கூடிய கால்நடை இனங்களைப் பெறமுடியும். இவ்வகையான வழிவகைகள் மனிதனில் செயற் பட முடியாது என்பது வெளிப்படை. மனிதனில் இது செயற்படின் பல பிரச்சினைகள் எழக்கூடு மாகையால் இந்த முறையை மனிதனுக்குப் பிரயோகிக்க முடியாது என்பது ஒரு நியதி ஆகும்.

பெரும்பாலான நோய்களுக்கு எதிரான மருந்துகள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனால் மனிதன் பலகாலம் வாழவேண்டிய நிலை உருவாகிறது. இதனால் சனத்தொகைப் பெருக்கம் அதிகரிக்கின்றது. இது ஒரு சவாலாக அமைகிறது. பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் சமமாக இருக்கும் போதுதான் ஒரு சமனான பொதுசனத் தொகையைக் கட்டுப்படுத்தமுடியும். ஆனால் இன்று பலவிதமான நோய்களைத் தடுக்கும் நிவாரணங்கள் இருப்பதனால் இறப்பு வீதம் குறைகிறது. அதே சமயம் பிறப்பு வீதம் கூடுகிறது. இதனால் சனத்தொகை கூடுகிறது. இதனால் உணவு, நீர், வருமானம், நோய், தீர்ப்பு ஆகிய பிரச்சினைகள் தோன்றுகின்றன. இதன் காரணமாக மனிதன் மிகக் கஷ்ட நிலையை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தற்போது மேலும் ஒரு சவால் இருந்து வருகிறது. அதாவது இன்றைய விஞ்ஞான உல கில், உலகம் அசுத்தமாக்கப்படுவது முக்கிய மானதொன்றாக அமைகிறது. வளர்ந்துவரும் கைத்தொழில், கமத்தொழில் போன்றவற்றினால் ஏற்படும் இரசாயனப் பதார்த்தங்கள் நீர், நிலம், காற்று ஆகியவற்றைச் சென்றடைவதன் காரண மாக இவ்வுலகமே மாசுபடுகின்றது. எனவே உயிர் வாழ் இனங்களை நஞ்சூட்டி அழிப்பது போன்ற முறை மூலமாகப் பல உயிரினங்கள் முட்டை நிலையிலோ, இளைய நிலையிலோ, முதிர்ச்சியடைந்த நிலையிலோ இறந்து போகின் றன. இதன் காரணமாக எமது சூழலில் அவை அற்றுப் போகின்றன. எனவே அவற்றிலிருந்து மனிதன் நன்மை பெற முடியாதிருக்கின்றது. சூழலைப் பாதுகாக்கும் முறையிலேயே ஏனைய உயிரினங்கள் சிறப்பாக வாழும் நிலை ஏற்படு கின்றது. எனவே சூழல் மாசடைகின்றபோது பல உயிரினங்கள் இறக்க நேரிடுகின்றது. மிரு கங்களின் பல்லினத் தோற்றம் அழிக்கப்படு கின்றது. இது ஒரு மிகவும் ஆபத்தான நிலை யாகும். இதனால் பிராணிகள் அழிவது மாத்தி ரமல்ல பல தாவரங்களும் அழிவதற்கு காரண மாக இருக்கின்றது. எனவே இந்தச் சவாலை மனிதன் சமாளிக்குமிடத்து பல உயிரினங்கள் சிறப்பான வாழ்க்கை நடாத்த ஏதுவாகிறது.

கணனிக்கு இன்று நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. கணனி மூலமாக மிகச் சிக்க லான விடயங்களையும் மிகச் சுலபமாக செய்து முடிக்க முடியும். பெரிய கொப்பிகள் Ledger ஆகியவற்றில் எழுதி வைப்பதிலும் பார்க்க மிக சுலபமாக இப்போது கணனியிலேயே போடு கிறார்கள். தேவையான விடயங்களை உடனுக் குடன் தருவதற்கு கணனி மூலமாகச் செயற்பட முடிகிறது. பாடசாலைப் புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவற்றை எல்லாம் உடனுக் குடன் தந்துதவுவதுடன் அதிலுள்ள பிழைகளை உடனே கட்டிக் காட்டுகிறது. இவையெல்லாம் வேலைகளைச் சுலபமாகவும் பிழைகளின்றி விடயத்தை எழுதவும், கணித ஆய்வு மூலமாக அணுகவும் கணனி பயன்படுகிறது. மருத்துவத் திலும், கைத்தொழில்களிலும் இவை முழுமை மாகப் பயன்படுத்தப்படுகின்றன. கணனி தான் எல்லாம் என்ற முறையில் நடைபெறுவதனால் எதிர்காலத்தில் கணனி முறையாக மேலும் பல விடயங்களை எதிர்பார்க்கலாம். மனிதனைச் சரி யான முறையில் இயக்குவதற்கு கணனி ஒன்று தான் எதிர்காலத்தில் என எண்ண முடிகிறது.

DNA அறியப்பட்டதற்குப் பின்பு பல வழி களில் பிறப்புரிமை பொறிமுறை மூலமாக மனித னுக்கு வேண்டிய பல நன்மைகள் பெறப்படுகின் றன. குறிப்பாக மனிதனுக்கு நன்மை பயக்கும் கிருமிகளிலிருந்து அதற்குரிய பரம்பரை அலகு களைப் (Genes) பிரித்தெடுத்து தாவரங்களிலோ, அல்லது பிராணிகளிலோ அவை சென்றடையச் செய்யும்போது ஒரு குறிப்பிட்ட பிராணியிலிருந்து நன்மை பெற முடியும். இதன் பெறுபேறாக அதி உயர் உணவுகள், மருந்து வகைகள் மேலும் பலதரப்பட்ட உணவு வகைகள் பெறக்கூடிய தாக இருக்கின்றது. இதே முறையில் செயற் படும் போது குற்றவாளிகளைக் கண்டுபிடித்தல், சரியான குடும்பங்களைக் கண்டுபிடித்தல்

என்பன துரிதமாக்கப்படலாம். இவற்றின் நன்மைகளை எதிர்வரும் புத்தாயிரத்தில் மேலும் அபிவிருத்தி செய்ய முடியும்.

எனவே விஞ்ஞானம், வளர்ந்து வந்த சென்ற நூற்றாண்டைப் போன்று எதிர்வரும் நூற்றாண்டிலும் சிறந்து மோலோங்க இருக்கின்றது. இவற்றை மனிதன் சரியாகப் பயன்படுத்துவதில்தான் மனித முன்னேற்றம் தங்கியுள்ளது.

பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம்

மானவர்களின் சிந்தனைக்கு . . .

நாம் அனைவரும் நேரடியாகவோ அல்லது நூல்கள், பத்திரிகைகள் மூலமாகவோ பல தலைவர்களைப் பற்றி அறிந்துள்ளோம். எனவே தலைமைத்துவம் என்று கூறும்பொழுது நாம் அறிந்த தலைவர்களின் எண்ணங்களே எம் மனத்தில் உதிக்கின்றன. ஒரு நாட்டின் ஜனாதிபதியோ, ஒரு சமூகச் சீர்திருத்தவாதியோ ஒரு மாவீரனோ எம் கண்முன் தோன்றலாம். இவ்வாறு சிந்திப்பது இயல்பாகும். இருந்த போதிலும், சாதாரண மட்டத்திலும் அன்றாடம் தலைமைத்துவச் செயற்பாடு இடம் பெறுகின்றது. இச் செயற்பாட்டினை மிக எளிதாகக் கூறுவதாயின் ஒருவர் பிறரைத் தன்பால் கவர்ந்து அவரை / அவர்களை தனது அல்லது பொது குறிக்கோள்களை அடைவதற்குத் தன்னிச்சையாக செயற்பட வைத்தலே யாகும். இச் செயற்பாடு அல்லது முயற்சி நல்ல நோக்குடையதாகவோ அல்லது சமூகவிரோத நோக்குடையதாகவோ அமையலாம்.

எமது தலைமைத்துவத்தின் தரத்தினை, பண்பினை, நுட்பங்களை வளர்ப்பதனால் எமது சாதனைகளைப் பெருக்கலாம். குடும்பத்தைக் கூடச் சீராக நடாத்தலாம். இம் முயற்சியில் நாம் எமக்கு முன் வாழ்ந்த, வாழுகின்ற தலைவர்களிடமிருந்தும் சில பாடங்களைக் கற்கலாம்.

சிறந்த தலைவர்களிடம் காணப்படுகின்ற எப்பண்புகள் அவர்களை அந்நிலைக்கு உயர்த்தியன எனப் பார்ப்போம். அப்பண்புகளை இனங் கண்டு நாமும் அவற்றை விருத்திசெய்து பயன் பெறலாம். மகாத்மா காந்தியை நாம் அறிவோம். அவர் ஒரு நிகரற்ற தலைவர். பலகோடி மக்களைத் தன்பால் கவர்ந்து இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுத்தவர். அவரின் சாதனைகளுக்கு அவரிடம் காணப்பட்ட சில தலைமைத்துவப் பண்புகள்தான் காரணம். அவர் தனது எண்ணங்களாலும், செயல்களாலும், இலட்சியத்தாலும் சத்திய நெறிகளாலும் தியாகத்தாலும் தன்னைத் தானே உயர்த்திக் கொண்டார்.

எவர் இருக்கின்ற நிலைகளை மீறி எழுகின்றார்களோ அவர்களே தலைவர்களாக, சரித்திர நாயகர்களாக ஒளிர்கின்றார்கள். யார் தனக்காகவும் தன் சமுதாயத்திற்காகவும் மேலும் ஒருமைல் தூரம் நடக்கின்றானோ அவனே மக்களால் போற்றப்படும் மனிதனாகின்றான்.

காந்தி தன்னம்பிக்கையினை விருத்தி செய்து தம்மைப் பற்றியிருந்த பயப் பீதியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார். ஒருவர் எதனையிட்டுப் பயப்படுகின்றாரோ அதில் சிறிது சிறிதாக ஈடுபட்டுச் செயற்படும்போது தன்னம்பிக்கை படிப்படியாக வளர்ந்து பயத்தினைப் போக்கும்.

தன்னம்பிக்கையுள்ள ஒரு மனிதன் இறுதி வரை தனது இலட்சியத்தைக் கைவிட மாட்டான். அதில் வாழ்வின் நிறைவைக் காண்பான். இலட்சியமென்பது ஒரு ஆற்றல் மிக்க சக்தி. எவனொருவன் தனது மக்களைத் தனது இலட்சியத் தீயால் தட்டி எழுப்பி அனைவரையும் ஒரே நோக்கோடு கொண்டு செல்லும் திறனுள்ளானோ அவனே தலைவனாவான். சுதந்திரமெனும் தனது இலட்சியத்தை ஒவ்வொரு இந்திய னதும் உள்ளத்தில் ஊன்றி, அவர்களை ஒரு முகப்படுத்தி ஆங்கிலேயரை விரட்டியடித்தவர் மகாத்மா காந்தி.

ஒரு தலைவன் ஒரு முன்மாதிரி, அவன் மற்றவர்கள் பார்வையில் உயரத்தில் இருக்கிறான். அவன் வழி மக்கள் செல்கின்றார்கள். தலைவனிடம் ஒழுக்கம், நேர்மை இருத்தல் வேண்டும். தலைவனின் ஒழுக்கக் கேட்டாலும் நேர்மையீனத்தாலும் கவிழ்ந்த சாம்ராஜ்யங்களை நாம் அறிவோம், சீர்கெட்ட குடும்பங்களையும் அறிவோம். ஒரு நல்ல தலைவனது நிழல் நாட்டில் படியும்போது நாடுபூராவிலும் ஓர் ஒழுக்க உணர்வு, ஓர் நேர்மை உணர்வு, ஓர் ஆத்மீக உணர்வு, ஓர் மன நிறைவு பரவி நிற்கின்றது.

தன்னம்பிக்கையினைக் கெடுப்பது தாழ்வு மனப்பான்மையாகும். எம்மை விட அறிவிலும் திறமையிலும், வலிமையிலும் சிறந்தவர்கள் பல ரிருக்கலாம். அவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து நாம் அப்படியில்லை என்று மனதை அலட்டிக் கொள்வது நமக்கு நல்லதல்ல. நான் கிராமப் புறத்தான், நான் வேறு சமூகத்தவன், நான் கறுப்பு, நான் சற்றுக் குள்ளம், நான் அதிகம் படிக்கவில்லை என்றெல்லாம் நீங்கள் நினைப் பதனால், அதனை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்வதாக இருந்தால் உங்களிடம் நிறையத் தாழ்வு மனப்பான்மை உண்டு. சபையில் நீங்கள் கடைசி வாங்கில் போய் யாரும் அறியாமல் உட்கார்ந்து விட்டு வர விரும்பினால் உங்களை நீங்களே திருத்திக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. சுருக்கமாகக் கூறுவதாயின் நாம் எமது தலைமைத்துவத்தை வளர்ப்பதற்குச் சில அடிப்படை அம்சங்களை எம்முள் விருத்தி செய்ய முயற்சிக்க வேண்டும். அவற்றுள் அறிவு, தன்னம்பிக்கை, இலட்சியம், துணிச்சல், திறமை, பண்பு, முன்முயற்சி போன்றவை சிலவாகும்.

அ. பஞ்சலிங்கம்

இலங்கையில் கூட்டுறவின் தோற்றமும் வளர்ச்சியும்

மனித குலம் அறிவு முதிர்ச்சி அடை யாது விலங்கோடு விலங்காக வாழ்ந்த காலத் திலும் கூட அதனிடம் கூட்டுறவு உணர்வும், கூட் டுறவுச் செயல்களும் காணப்பட்டன. கூட்டுறவின் தேவையை உணர்ந்தோ உணராமலோ ஆதி மனிதன் தனது வாழ்க்கை முறையில் கூட்டுற வைக் கடைப்பிடித்து வந்துள்ளான். இதன் நேர்க் கருத்து கூடி உழைத்தல் என்பதாகும். கூட்டு முயற்சி மூலம் கூடிய பலம் என்றும் பொருள் கொள்ளப்படும். இன்று பொதுப் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஒன்றுகூடி உழைக்கும் பொருட்டுச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற நிறுவனங்களைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்படுகின்றது.

மனித வாழ்வில் தொழில் துறைகளை அறிவியல், விஞ்ஞானம், தொழில்நுட்பம், அரசி யல், பொருளாதார அமைப்புப் போன்றவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி பெருமளவு மாற்றி அமைத் தது, கைத்தொழில் புரட்சியின் காரணமாகப் பெரு ளவு உற்பத்தி முறைகளும், பெருளவு அமைப்பு முறைகளும் தோன்றி வாழ்க்கை முறை யிலும் தொழில் முறையிலும் பெரும் மாற்றங் களை ஏற்படுத்தியது. இம்மாற்றங்களின் விளை வாக தொழிலாளர், விவசாயிகள் வாழ்க்கை யில் சகிக்க முடியாத பொருளாதாரக் கஷ்டங் களை எதிர்நோக்கினர். இக்கால கட்டத்தில் ஆலை அதிபர்களும், உரிமையாளர்களும் செல்வச் செழிப்பு மிக்க உயர்ந்த ஆடம்பர வாழ்க்கை வாழ தொழிலாளர்களோ பஞ்சம், பிணி, பட்டினியுடன் வறுமை வாழ்க்கை வாழ்ந் தார்கள்.

சமுதாய அமைப்பிலுள்ள ஏற்றத் தாழ்வு கள் பல அறிஞர்களைச் சிந்திக்கத் தூண்டின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் புரட்சிச் சிந்தனை யாளரான கால்மார்க்ஸ் முதலாளித்துவ அமைப் பையே குழிதோண்டிப் புதைக்க வேண்டுமென் றார். சமதர்ம அமைப்பு ஒன்றை ஏற்படுத்த பொது உடைமை இலட்சியத்தை நோக்கிச் செல்லும் கருத்துக்களையும், செயற்பாட்டு முறைகளையும் வெளியிட்டார். முதலாளித்துவ அமைப்பிலுள்ள சமூக பொருளாதாரக் கேடுகள் ஒரு புறம் அக் கேடுகளை அகற்றுவதற்காகத தோன்றிய புரட்சி கரமான பொதுவுடைமைத் தத்துவத்திலுள்ள தனி மனிதச் சுதந்திரத் தன்மைக் குறைபாடுகள் மறு புறம். இவ்விரு புறத்திலுமுள்ள நல்ல அம்சங் களைக்கொண்டு உருவாக்கப்பட்ட உயர் இலட் சிய நோக்கே கூட்டுறவாகும். முதலாளித்துவ நோக்கிலிருந்தும் பொது உடைமை நோக்கி லிருந்தும் மாறுபட்ட நோக்கையுடையதும், சுய நலமற்ற ஒத்துழைப்பு மனப்பான்மையும் பிறருக் குதவும் மனப்பான்மையும், அறவழி சார்ந்த உயர் பண்புகளும் நிறைந்த வாழ்க்கை முறையையும் இலட்சியமாகக் கொண்டதே கூட்டுறவாகும்.

இலங்கையின் கூட்டுறவு வளர்ச்சிக் காலத்தை நோக்கும்போது முதலாம் உலகப் போரைத் தொடர்ந்து கிராமிய மக்களிடையே தோன்றிய கடன் பிரச்சனையைத் தீர்ப்பதை யையமாகக் கொண்டு 1911ஆம் ஆண்டில் 7ம் இலக்க கூட்டுறவுக் கடனுதவிகள் சங்கங்களின் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட் டத்தின் கருத்துக்களின் பிரகாரம் ஐக்கிய நாணய சங்கங்களை உருவாக்கக் கூடியதாக

இருந்தது. இரண்டாம் உலக யுத்த காலம் வரை ஐக்கிய நாணய சங்கங்களே தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்தன. காரணம் கிராமிய கடன் பிரச்சனை முக்கிய பிரச்சனையாக நிலவியதே ஆகும். எனவே மக்களின் கடன் தொல்லைகளை நீக்கிக் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் கடன் பழுவிலிருந்து விடுக்கும் பொருட்டுச் சேமிக்கத் தூண்டுவதும் பொருளாதாரநிலையை உயர்த்துவதும் பரஸ்பர உறவுகளை வளர்ப்பதுமே இச் சங்கங்களின் நோக்கங்களாக இருந்தன.

1912ஆம் ஆண்டில் இலங்கையின் முதல் கூட்டுறவு நாணய சங்கமாக காலி மாவட்டத்தில் 'வெலபொடபத்து' என்னும் இடத்தில் முதலாவது கூட்டுறவு கடனுதவு சங்கம் பதியப்பட்டது. 1913ஆம் ஆண்டில் கமத்தொழிலாக ஆரம்பிக்கப்பட்டு விவசாய அதிபருக்கு அவரது வழமையான கடமைகளோடு கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது. இச் சங்கங்களுக்கு கடனுதவி செய்வதற்காக 1915ஆம் ஆண்டு உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நிதியேற்படுத்தப்பட்ட போதும், போதிய அளவான நிதி கொடுபடவில்லை. இருந்தும் 1911ஆம் ஆண்டிலிருந்து 1920ஆம் ஆண்டுவரை இலங்கையில் கடனுதவி சங்கங்களே அதிகமாக உருவாக்கப்பட்டிருந்தது.

அபிவிருத்தியடைந்து கொண்டு சென்ற கூட்டுறவு இயக்க விடயங்களைக் கட்டுப்படுத்த 1911ஆம் ஆண்டு உருவாக்கிய சட்டத்தினால் முடியாது போகவே 1921இல் இக் கட்டளைச் சட்டம் திருத்தப்பட்டது. 1921இல் 34ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தில் 43வது சரத்திற்கேற்ப 1911 இல் கட்டளைச் சட்டம் செல்லுபடியாகாமல் செய்யப்பட்டது. இதன் மூலம் கூட்டுறவு கடனுதவு சங்கங்கள் தவிர்ந்த ஏனைய நுகர்வு விவசாய சந்தைப்படுத்தும் சங்கமும் பதிவு செய்ய வழி வகுக்கப்பட்டது. இத் திருத்தத்தின் பிரகாரம் 1924ஆம் ஆண்டு முதல் மேற்சங்கமாக கொழும்பு மாவட்ட கூட்டுறவுச் சமாசம் பதிவு செய்யப்பட்டது. அத்துடன் கூட்டுறவு நாணய சங்கங்கள் அல்லாத ஏனைய சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இதற்கமைய 1928 ஆம் ஆண்டு கொமிரியா கூட்டுறவுப் பாற்பண்ணைச் சங்கமும் உருவாக்கப்பட்டது. நாணய சங்கங்களுக்கு உதவும் வகையில் 1929 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் முதலாவது கூட்டுறவு மாகாண வங்கி ஆரம்பிக்கப்பட்டது. 1930ஆம் ஆண்டு இலங்கையில் கூட்டுறவு நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காகக் கூட்டுறவுச் சங்க அமைப்பு, கூட்டுறவு இலாகாவாக மாற்றம் பெற்றது.

யாழ்ப்பாண ஐக்கிய சங்கங்களை ஒருங்கிணைத்து நடாத்த இவைகளுள் ஒரு அமைப்பு தேவை என கூட்டுறவாளர் ஆலோசித்து 1937 ஆம் ஆண்டு வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபையினை உருவாக்கியது. இக்காலப் பகுதியில் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியடைந்த போதும் அக்கட்டளைச் சட்டம் பூரணத்துவம் உடையதாக விளங்கவில்லை.

காரணம்

1. மத்தியஸ்த விசாரணைக்கான வசதியின்மை
2. சங்கக் குலைப்பு விடயங்களைப் பொறுத்துத் தடைகள் ஏற்பட்டமை.

இந்நிலையில் 1934ஆம் ஆண்டில் பஞ்சாப் மாநிலக் கூட்டுறவுப் பதிவாளராகவிருந்த திரு. எச்.கல்வேட் என்பவர் இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக வர வழைக்கப்பட்டார். இவர் பல சட்ட நிர்வாகத் திருத்தங்களை ஏற்படுத்தினார். திருத்தியமைக்கப்பட்ட சட்டம் 1936ஆம் ஆண்டு 16வது இலக்கக் கட்டளைச் சட்டம். இதன் முழுமையான பயனை அடையமுன் 1939ஆம் ஆண்டு இரண்டாம் கட்டம் இரண்டாம் உலக யுத்தத்தின் ஆரம்பத்துடன் தொடங்குகின்றது. யுத்தகாலத்தில்,

1. உணவுப் பொருட்களைப் பெறுவது கஷ்டம்
2. உணவுக்குத் தட்டுப்பாடும், கட்டுப்பாடும் ஏற்பட்டமை.
3. கொள்ளை இலாபம் அடிப்பது, கள்ளச்சந்தை போன்ற நடவடிக்கை தோற்றம் எடுத்தது.

இதன் காரணமாக இவற்றிலிருந்து மக்களைக் காப்பாற்ற அவர்களுக்குத் தேவையான நுகர் பொருட்கள் அத்தியாவசியப் பொருட்கள் என்பவற்றை அரசாங்கம் வழங்க வேண்டிய நிலை உருவாகியது. இதனால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாகின. 1942 இலிருந்து 1945 வரை கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் துரித வளர்ச்சி அடைந்தன. 1942ஆம் ஆண்டு நுகர்வோர் சங்கங்கள் 38 ஆகவும், 1945ஆம் ஆண்டு 4004 ஆகவும் ஏறக்குறைய நூற்றிபைந்து மடங்காக அதிகரித்துக் காணப்பட்டது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருட்களைப் பெற்று வழங்குவதற்கு 1943ஆம் ஆண்டில் கூட்டுறவு இலாகா கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தை ஆரம்பித்து உணவுப் பொருள் விநியோகம் செய்வதில் ஆர்வம் காட்டியது.

யுத்த காலத்தில் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாடு விவசாய உற்பத்தியில் அரசின் கவனத்தை ஈர்த்தது. இக் காலகட்டத்தில் நம்

நாட்டில் கிராமிய விவசாயத் துறையில் கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாமை, விளைபொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்ய முடியாமை, போன்ற இரு பிரச்சனைகள் காணப்பட்டன. அதனால் அரசாங்கம் நிதி உதவிகளை வழங்கவும், உற்பத்திப் பொருட்களை உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்து, சந்தை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் 1947இல் விவசாய உற்பத்தி விற்பனைச் சங்கங்களை ஸ்தாபிக்கும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது.

இச் சங்கங்களுடன் கூட்டுறவுப் பாற் பண்ணையாளர்கள், மீன்பிடிச் சங்கங்கள், தெங்கு உற்பத்தி விற்பனையாளர் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள் ஆகிய பல சங்கங்களும் நாட்டின் பல பாகங்களிலும் பதிவு செய்யப்பட்டன. 1948ஆம் ஆண்டில் அரசியல் சுதந்திரத்திற்குப் பின் தேசிய அபிவிருத்தியில் காட்டப்பட்ட வலியுறுத்தல் கூட்டுறவுத் துணைக்களத்தை ஒரு பிரதான அரசாங்கத் திணைக்களமாக மாற்றியமைத்தது.

விவசாயத்திற்கு நிதியுதவி வழங்குவதற்காக 1949 ஆம் ஆண்டு கூட்டுறவு சமஸ்டி வங்கி நிறுவப்பட்டது.

பொருளாதார அபிவிருத்திக்குக் கூட்டுறவு இயக்கத்தின் சேவை மேலும் அவசியம் என்ற கருத்தினை 1956ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் உணவு விவசாய மந்திரியான பிலிப் குணவர்த்தனா அவர்கள் முன்வைத்து கடன் வசதிகள், சந்தைப்படுத்தல் வசதிகள், நுகர்வோருக்குப் பொருட்களை வழங்குதல் மற்றும் ஏனைய சேவைகளை அளித்தலாகிய பல நோக்கங்களை ஒன்று கூட்டிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டார்.

இந்தப் புனர் அமைப்பின் கீழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்கல், சேமிப்புக்களைத் திரட்டல் போன்ற பணிகளிலும், கிராமிய அபிவிருத்தியை மேற்கொள்ள ஓர் அபிவிருத்திக் கூறாகவும் செயற்பட வேண்டிய அவசியம் எழுந்தது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் பரந்துபட்ட பல்வேறு நோக்கங்களைக் கொண்டதாகையினால் நோக்கங்களை அடைவதற்காக பலம் வாய்ந்த நிதி இயக்கம் ஒன்று அவசியம் எனக் கருதப்பட்டது.

அப்போது அமைந்திருந்த கூட்டுறவு வங்கி முறை தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதாதாகக் கருதப்பட்டது. எனவே கூட்டுறவு இயக்கத்திற்கெனச் சேவையாற்ற விசேட தத்துவம் பெற்ற அதே வேளையில் இயக்கத்திற்கு நிதி வழங்கவும், அத்தகைய கடன் வசதிகளை அளிப்பதன் மூலம் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தாங்கிக் கொள்வதற்கும் பலம் வாய்ந்த ஒரு நிறுவனம் அவசியமாக இருந்ததால் கூட்டுறவு வங்கிகள் மக்கள் வங்கியாக மாற்றம் செய்யப்பட்டன. மக்கள் வங்கியானது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கிராமியத் துறையினருக்குப் பாரிய சேவைகளை ஆற்றுவதற்கென 1964 ஆம் ஆண்டில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கிராமிய வங்கிகளை அமைத்தது.

அரசாங்கத்தின் மேலாதிக்கத்தின் கீழ் இயங்கிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பல பிரச்சனைகளை எதிர்நோக்கின. இப் பிரச்சனைகளை முன்னிட்டு 1967 இல் டெயிட்லோ என்பவரின் தலைமையின் கீழ் அரசு ஒரு ஆணைக்குழுவினை நியமித்தது. இவ் ஆணைக்குழு 1970ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட தனிக் கையில் காணப்பட்ட எதிர்கால மாற்றங்கள் "சிறிய மந்த கதியிலான இயக்கக் கோட்பாட்டினை நாம் நிச்சயமாக இங்கே ஆதரிக்கவில்லை. கூட்டுறவுச் சங்கம் உறுப்பினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதேவேளையில் தேசிய அபிவிருத்திக்காகப் பாரிய பங்களிப்பைச் செய்தல் என்ற இரண்டு முக்கிய தொழிற்பாடுகளை நிறைவேற்றலாம். புதிய நோக்கத்தினால் பயனுடைய விளைவுகளைப் பெற தற்போதைய அமைப்பு முறையில் சிறு, சிறு மாற்றங்களை மேற்கொள்வதை விடக் கூடுதலான மாற்றம் இந்நாட்டின் கூட்டுறவு இயக்கத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். கூட்டுறவு அமைப்பில் எந்தவொரு விடயமும் தொடர்ந்து நிலைபெறக்கூடாது என்றும், புதிய தொரு தோற்றத்தை மேலெழுந்தவாரியாக அன்றி அடிப்படை மாற்றங்களிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும் என்று ஒரு முறைக்குப் பலமுறை விதந்துரைக்கின்றோம்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

1968 ஆம் ஆண்டு அரச ஆணைக் குழுவின் பிரதான விதந்துரைகளின், நடைமுறைகளின் மூலம் பொருளாதாரச் செயற்பாட்டு சாத்தியமுடைய கூட்டுறவு ஸ்தாபனங்களை உருவாக்கியது. இவ் ஸ்தாபனங்களை உருவாக்குவதற்கான விசேட சட்டம் 1970இல் நிறைவேற்றப்பட்டது. இதன் பின்னர் செயலிழந்த நட்டத்திலியங்கும் மற்றும் அவசியமற்றவை எனக் கருதப்படும் சங்கங்களின் பதிவுகளை ஆணையாளர் இரத்துச் செய்து எஞ்சிய சங்கங்களை ஒன்றிணைத்துப் பெரிய - ஆரம்ப பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கினார். இம்

இம் மாற்றம் ஏற்பட்டிருந்தும், கூட்டுறவுக் கொள் கைகளில் ஒன்றான ஜனநாயக செயற்பாடு குறைவாகக் காணப்பட்டது. இக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக 1977 இல் பதவி ஏற்ற ஐக்கிய தேசியக் கட்சி கூட்டுறவு இயக் கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற கூட்டுறவு இயக்கத்தை நெறிப்படுத்தும் அனைத்து நெறி யாளர்களும் அங்கத்தவர்களாகத் தெரிவு செய் யப்படல் வேண்டும் என்னும் நோக்கோடு கே. டபிள்யூ. தேவநாயகம் அவர்கள் தலைமை யில் ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டு நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் கூட்டுறவுச் சட்டத்தில் 1992 ஆம் ஆண்டு திருத்தம் கொண்டுவரப்பட்டுப் பல மாற் றங்கள் செய்யப்பட்டன.

மக்கள் தமது பொருளாதார கலை, கலாச்சார விருத்தி கருதி தாமாகவே முன் வந்து ஒன்று கூடுகின்ற அமைப்பாகக் கூட்டுறவு இயக்கம் காணப்படுவதால் சமூகத்தில் உரிமை கள் மறுக்கப்படும் இடங்களிலும் பொருளாதாரப் பலவீனங்கள் நிலவும் சமூகங்களிலும் கூட்டுற வின் தோற்றமும், வளர்ச்சியும் தூரிதப்படுத்தப் பட்டுள்ளமையைக் காணலாம்.

பெ. கனகசபாபதி
தலைவர்
ப.நோ.கூ.சங்கம், நல்லூர்.

சம்பந்தனின் சிறுகதைகள் ஒரு நோக்கு

இலங்கையின் தமிழ்ச் சிறுகதை வரலாற் றைப் பின்நோக்கிப் பார்க்கும்போது, இத்துறை யில் முன்னோடிகளாக விளங்கிய எழுத்தாளர் களின் பங்களிப்புக்கள் உடன் நினைவுக்கு வரும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் கதை எழுதும் முயற்சிகள் இலங்கையில் நடை பெற்றுள்ளன. உதயதாரகைப் பத்திரிகையின் ஆசிரியராக விளங்கிய ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளை நன்வெறிக் கதாசங்கிரகம் என்ற பெயரில் சிறிய கதைகளின் தொகுதியொன்றினை வெளியிட்டுள்ளார். பண்டிதர் சந்தியாகோ சந்திர வர்ணம்பிள்ளை 1875இல் கதாசிந்தாமணி என்ற பெயரில் ஒரு கதைத் தொகுதியை எழுதி வெளி யிட்டார். அதில் மரியாதை இராமன் கதை, கோமுட்டி கதை, மூடர் கதை முதலான ஏழு கதைகள் அடங்கியுள்ளன. தம்பிமுத்துப்பிள்ளை நூற்றொரு கதைகள் அடங்கிய ஊர்க்கதைகள் என்ற தொகுதியை எழுதிப் பிரசுரித்தார். ஐதருஸ் லெப்பை மரைக்காரின் ஷைதர்ஷா சரித்திரம் என்னும் கதைத் தொகுதியும் வெளி வந்தது.

20ஆம் நூற்றாண்டில் இலங்கைத் தமிழ்ச் சிறுகதைத் துறைக்கு மூலவர்களாக விளங்கிய வருள் காலத்தால் முந்தியவர், கோ. நடேசய்யர். ஆவர். அவரது திரு இராமசாமி சேர்வையின் சரிதம் என்ற சிறுகதை 1931இல் எழுதப்பட்டது. வேறு சிறுகதைகளையும் அவர் எழுதியுள்ளாரா என்பது தெரியவில்லை. 1933இல் பறைச்சேரியில் தீ விபத்து என்னும் சிறுகதையை அளவெட்டி த. சிவலிங்கம் எழுதினார்.

இலங்கைத் தமிழ் அறிஞர்கள் சிலரும் சிறுகதை முயற்சிகளில் முப்பதுகளின் இறுதிப் பகுதியில் ஈடுபட்டிருந்தனர். பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை, குருகவி ம. க. வே. மகா விங்கசிவம் ஆகியோர் இவ்வகையிற் குறிப்பிடத் தக்கவர்கள்.

ஆயினும், இலங்கைத் தமிழ்ச் சிறுகதை களின் ஆரம்பகால வளர்ச்சியைப் பொறுத்த வரையில் இலங்கையர்கோன், சி. வைத்திய லிங்கம், சம்பந்தன் ஆகிய மூவரும் தம்மை அழுத்தமாக இனங்காட்டிக் கொண்டுள்ளனர். சிறுகதையின் பண்புகளையும், பயன்பாடுகளை யும், மேலைத்தேயத்தில் அதன் வளர்ச்சிநிலை களையும் பற்றிய புரிந்துணர்வுடன் இவர்கள் எழுதினர். சிறுகதையின் உருவம், உள்ளடக்கம் பற்றிய பிரக்ஞையோடு தமது சிறுகதைகளைப் படைத்தனர்.

இலங்கைச் சிறுகதையின் முன்னோடி களுள் ஒருவராக விளங்கும் சம்பந்தனின் முழுப்பெயர் திருஞானசம்பந்தன் என்பதாகும். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையின் மாணவரான இவர், தமிழ் ஆசிரி யராகப் பணியாற்றினார். தம்மளவில் ஒரு காந் தீயவாதியாக வாழ்ந்தாள் முழுவதும் விளங்கினார்.

1938 முதல் தமது இருபத்தைந்தாவது வயதிற் சம்பந்தன் எழுத்துத்துறையில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினார். இவர் எழுத்துத்துறை யில் ஈடுபடுவதற்கு ஒரு காரணம் இருந்தது. ஆனந்தவிகடன் தனது சஞ்சிகையில் வெளி யான ஆனந்தமடம் என்ற நாவலுக்கான விமர் சனப் போட்டியொன்றை நடத்தியபோது, அதிற் பங்குபற்றி, முதற் பரிசைப் பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை பெற்றுக்கொண்டார். இது சம்பந்தனை எழுத்துத்துறையில் ஆர்வத்தோடும் ஈடுபாடு கொள்ளச் செய்தது. 1938இல் கலை மகளில் இந்து-முஸ்லிம் இனக்கலவரப் பின்ன ணியில் காதலர் இருவரின் மனப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட தராபாய் என்ற இவரது முதற் சிறுகதை வெளிவந்தது. அவர் பின்னர் எழுதிய மதம் என்ற சிறுகதையும் இந்து-முஸ்லிம் இனப் பிரச்சனையைப் பின்னணி யாகக் கொண்டு எழுதப்பட்டதாகும்.

இளமையிலேயே தமிழ், வடமொழி இலக் கியங்கள் மீது அவருக்கு இயல்பான ஈடுபாடு இருந்தது. எழுத்தாளராகப் பரிணமிப்பதற்கு முன், அவர் சிறந்த வாசகராக விளங்கினார். அக் காலத்தில் இலங்கையில் எழுத்துத்துறையில் ஈடுபாடு கொண்டிருந்த இலங்கையர்கோன், சி. வைத்தியலிங்கம், சோ. சிவபாதசுந்தரம், பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை முதலானோர் இவரின் இலக்கிய நண்பர்களாக விளங்கினர். இவர் பாசம் என்ற நாவலையும் எழுதியுள்ளார். பாடசாலை மாணவருக்காக மணிவாசகம் என்ற பெயரிலான நூல்களையும் அவர் ஆக்கியுள்ளார்.

சம்பந்தன் ஏறத்தாழ இருபது சிறுகதை களை எழுதியுள்ளார். கலைமகள், கிராம ஊழி யன், ஈழகேசரி, மறுமலர்ச்சி ஆகியவற்றில் இவ ரின் சிறுகதைகள் வெளியாகியுள்ளன. அவரின் சிறுகதைகளில் புத்தரின் கண்கள் என்பது மாத் திரம் இலங்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டதாக விளங்குகின்றது. மற்றைய அனைத் தும் சமூகக் கதைகளே. சம்பந்தன் சிறுகதை கள் என்னும் தலைப்பில் மகாலசஷ்மி, மதம், சலனம், விதி, தூமகேது, இரண்டு ஊர்வலங்கள், அவள், துறவு, சபலம், பிரயாணி ஆகிய பத்துச் சிறுகதைகள் நூலுருப் பெற்றுள்ளன. இவரது கதைகள் ஓர் உலகப் பொதுத் தன்மையைப் பின்னணியாகக் கொண்டுள்ளன. பாத்திரங்களும் இதே தன்மையைக் கொண்டவையாக விளங்கு கின்றன. இவரின் சில சிறுகதைகளிற் பாத்திரங் களுக்குப் பெயர்கள் இடப்படுவதும் இல்லை. அவள், அவள் என்றே சுட்டப்படுவதுண்டு.

சம்பந்தன் தமது கதைகளிலே சம்பவங் களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. மன அசைவுகளுக்கே அழுத்தம் கொடுப்பதுண்டு. மனித மனங்களின் பல்வேறு நுண்ணிய அலை களைச் சித்திரிப்பதிற் சம்பந்தன் கைதேர்ந்த வராக விளங்குகின்றார். ஆழமான மனவுணர்வு களைத் துல்லியமாக எழுத்திற் கொணரும் கை வண்ணம் இவருக்கு இயல்பானது. மனித உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்கும் தன்மையினை யும் இவரது எழுத்துக்களிற் காணலாம். இலங் கைச் சிறுகதையுலகில் அவர் காலத்தில் அவ் வளவுக்கு மனவுணர்வுகளை இத்துணை துல்லி யமாகக் கொணர்ந்தவர். வேறு எவரும் இலர் எனக் கூறலாம்.

சம்பந்தனின் சிறுகதைகளில் இடம்பெறும் பாத்திரங்கள் தனித்துவமானவையாக விளங்கு கின்றன. ஒரிரு பாத்திரங்களே இவரது கதை களில் உலாவுகின்றன. கதையை நகர்த்துகின்ற முறையாலும், உரையாடல்களாலும் பாத்திரப் பண்பைப் புலப்படுத்தும் திறமை சம்பந்தனுக்கு உண்டு. இவருக்கே இயல்பான தத்துவ விசாரம் இவரது பாத்திரங்கள் வாயிலாக அலசப்படு வதைக் காணலாம். சலனம் என்ற சிறுகதை யில் ஆழமான தத்துவ விசாரம் இடம்பெறுகின் றது. நான், அவள் என்னும் இரு பாத்திரங் களைப் படைத்து, தமது ஆத்ம விசாரத்தை அவர் நடத்தியுள்ளார். பின்வருமாறு அக்கதை முடிகிறது:

"எப்படியாவது உங்களைத் தெரிந்து கொள்ளவே விரும்புகிறேன்" என்றேன் நான்.

"உங்களுக்கு அது வேண்டாம்."

இப்படிச் சொல்லிவிட்டு அவள் அங்கேயே நின்றாள். நான் மேலும் நடந்தேன். அதைப் பார்த்ததும், "நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று என்னைக் கேட்டாள்.

உடனே பதில் கொடுத்தேன். "உங்களை மறந்துவிடக் கூடிய ஓர் எல்லையை அடைவ தற்காக."

அவள் ஒரு மாதிரிச் சிரித்துக்கொண்டே "சொல்லுகிறேன், வாருங்கள்" என்று கூப்பிட் டாள். அவ்வளவில் திரும்பி அவளுக்குப் பின் னால் நடந்தேன். அவள் நேராகவே என் வீட்டைநோக்கி நடந்து சிறிது நேரத்திற்கு முன் தான் அழுத்தி அளவு செய்த அந்த மணல் மீது உட்கார்ந்துகொண்டு, "இதோ பாருங்கள் என்னை நானே ளரித்துச் சாம்பலாக்க முடியுமா னால் நான் யாரென்பதை உங்களுக்குச் கலப மாக காட்டமுடியும்" என்றாள். நான் திகைப்பி னால் மௌனமாகி நின்றேன்.

அவள் தொடர்ந்து பேசினாள்: "உங்களை நானும், என்னை நீங்களும் இனிச் சந்திக்க வேண்டாம். நீங்கள் நான் என்ற பேதம் - உறவு அழிந்து மறைந்து போகட்டும். உங்களை மறக்கவோ நினைக்கவோ நான் முயலமாட்டேன்."

நான் ஸ்தம்பித்துக் கல்லாகி நின்றேன். அவளோ எழுந்து கனவேகமாக ஏதோ ஒரு திசையில் நடந்து மறைந்தாள்.

சிறுகதையை அதற்குரிய உருவப் பொலிவோடு செப்டாக அமைக்கும் திறன் வாய்ந்தவராகச் சம்பந்தன் விளங்கினார். அநேகமாக அவரது ஒவ்வொரு கதையும் உருவச் செழுமை கொண்டதாக அமைந்துள்ளது.

நல்ல சிறுகதை என்பது, அதனைப் படித்து முடித்த பிறகும் வாசகர் மனதில் ஏதோவொரு தாக்கத்தை, அல்லது சலனத்தை ஏற்படுத்துவதாக இருக்கும். சம்பந்தனின் சிறுகதைகளும் அவ்வாறே. சும்பந்தனின் சிறுகதைகள் படித்து முடித்த பின்னரும் வாசகரின் மனத்திரையில் சலனங்களையோ, தாக்கங்களையோ ஏற்படுத்திய வண்ணம் இருக்கும்.

ஆண், பெண் உறவை வித்தியாசமான கோணத்தில் தரிசிக்க முனைந்த ஓர் எழுத்தாளராகச் சம்பந்தன் விளங்குகின்றார். தூமகேது என்ற சிறுகதையில் நரேந்திரன், சம்பகம் ஆகிய இளந்துறவிகளின் மனச் சலனங்களைத் துல்லியமாக வெளிப்படுத்துகின்றார். மகாலசஷ்மி என்ற கதையிலும் ராமு, மகாலசஷ்மி ஆகியோருக்கிடையிலான உணர்வுநிலைச் சித்திரிப்பு இயல்பாக இருக்கிறது. பிற சிறுகதைகளிலும் இத்தகைய போக்கினைத் தரிசிக்க முடிகிறது.

சம்பந்தனின் சிறுகதைகளில் அவள், துறவு ஆகிய சிறுகதைகள் அவருக்கும், தமிழ்ச் சிறுகதையுலகுக்கும் புகழ்தேடித் தரத்தக்க சிறுகதைகளாக விளங்குகின்றன. அவள் என்ற சிறுகதை, சந்தர்ப்பவசத்தால் தாய்மையடைந்து குழந்தை பெற்ற இளம் ஏழைப் பெண்ணொருத்தி, அந்தக் குழந்தையின் தந்தையிடமே அதனை ஒப்படைத்துத் தன் வழியிற் செல்வதாக அமைந்துள்ளது. சம்பந்தனின் அற்புதமான படைப்பாற்றல் திறனை இச்சிறுகதை உணர்த்துகிறது. சந்தர்ப்பவசத்தால் வழிதடுமாறிய இரு பெண்கள் மூலமாக இக்கதையிற் சமூக விமர்சனம் செய்யப்படுகின்றது. வீட்டு வேலைக்காரியாக இருந்த அந்தப் பெண் யார் மூலமாகக் குழந்தையைப் பெற்றெடுத்தாளோ, அவனிடமே குழந்தையை அவள் ஒப்படைப்பதாகக் கதை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தன்னிடம் சுகம் அனுபவித்துவிட்டுத் தான் தப்ப நினைக்கும் ஆண்மகனுக்கு எதிராக அவள் மேற்கொள்ளும் முடிவு துணிச்சலானது. இச்சிறுகதை மூலம் சம்பந்தன் சிறுகதையின் கொடுமுடிக்கே சென்று விடுகின்றார் எனலாம். கதையின் கரு, கதை அமைப்பு, உரையாடல்கள் அனைத்திலும் சிறந்து விளங்குகின்றது, இச்சிறுகதை.

துறவு என்ற சிறுகதை, சம்பந்தனின் ஆழமான படைப்பாற்றலைக் காட்டும் இன்னொரு படைப்பாகும். மிகப் பக்குவமாக இச்சிறுகதையை அவர் படைத்துள்ளார். முதிய துறவியொருவர், இளந்துறவியொருவர், தவறான பாதையிற் சென்ற பெண்ணொருத்தி ஆகிய மூன்று பாத்திரங்களையும் கொண்டு, துறவின் உண்மையான இயல்பினை உணர்த்துவதாக இக்கதை அமைந்துள்ளது. முதிய துறவி மற்றைய இருவர் மூலமாகவும் துறவின் உண்மையான தன்மையை உணரவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்படுவதைக் கதாசிரியர் மிக நேர்த்தியாகக் காட்டுகின்றார். முதிய துறவி தம்மை அறியாமலேயே பந்த பாசங்களுக்குக் கட்டுப்படத் தொடங்க, மற்றைய இருவரும் அதிலிருந்து விடுபடுவதைக் கலா நேர்த்தியுடன் சம்பந்தன் உணர்த்துகிறார்.

சம்பந்தன் தமக்கெனத் தனித்துவமான ஓர் உரைநடையைக் கையாண்டுள்ளார். தேவைக்கு மீறிய சொற்களை அவரது உரைநடையிற் காண்பதற்கில்லை. உரையாடல்களைப் பக்குவமாகக் கையாள்வதில் அவர் கைதேர்ந்தவர் என்பதை, அவரது சிறுகதைகள் காட்டுகின்றன. தமக்குத் திருப்தி ஏற்படும் வரையில் தமது உரைநடையைத் திரும்பத் திரும்ப எழுதும் வழக்கத்தை அவர் கொண்டிருந்தார். அவரது உரைநடையாற்றலுக்கு அதுவும் ஒரு காரணமாகும். ஆயினும், பேச்சுவழக்கை உரையாடல்களிற் கையாள்வதை அவர் தவிர்த்து வந்தார். அவரது சிறுகதைகளைப் பொறுத்த வரையில் இவ்வம்சம் ஒரு குறையாகவே அமைந்துவிட்டது.

சம்பந்தனும், தமிழ் நாட்டு எழுத்தாளர்களான மௌனி, லா. ச. ராமாமிர்தம் ஆகியோரும் ஏறத்தாழ ஒரே காலகட்டத்தைச் சேர்ந்

தவர்கள். ஆனால், மௌனி, லா. ச. ராமாமிர்தம் ஆகியோரின் எழுத்துக்கள் பிரசுரமாவதற்கு முன்னரே சம்பந்தனின் சிறுகதைகள் தமிழகச் சஞ்சிகைகளிற் பிரசுரமாகத் தொடங்கிவிட்டன. இவ்வகையில், சம்பந்தனின் பாதிப்பு மற்றைய இருவரிலும் காணப்படுகிறது என்று கருத இடமுண்டு.

இலக்கியத்தை மிக மதிப்புடன் அணுகியவர், சம்பந்தன். அது சமுதாயத்தைச் சத்திய நெறிப்படுத்துவது என்றே அவர் கருதியிருந்தார். சமுதாயத்தின் காப்பாளர்களான சான்றோர்களே இலக்கியம் செய்தவர்கள் என்றும், மதிப்பு மிக்க அவர்களது பணி பொழுதுபோக்காக அமைவதில்லை எனவும் அவர் கருதினார். இலக்கியம் வாசகனுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்க வேண்டும், வழிகாட்டியாக அமைய வேண்டும் என்ற கொள்கை கொண்டவராகச் சம்பந்தன் விளங்கினார். "எழுத்துலகு நானறிந்த வரையில் மிக அழகானது. எல்லையற்ற உயரமும், விசாலமுடையது. என்னால் அதன் தன்மைகளைக் கட்டுப்படுத்தி நிதானிக்க முடியவில்லை" என்று அவர் கூறியுள்ளார்.

சம்பந்தன் யதார்த்த எழுத்துக்களை விரும்புவதில்லை. யதார்த்தச் சித்திரிப்பினால் வாசகரின் மனம் தூய்மையடைவதற்குப் பதிலாக மேலும் மோசமடைகின்றது என்பதே இவரது கருத்தாக விளங்குகிறது. இவரது கால கட்டத்தைச் சேர்ந்த இலங்கையர்கோனும், சி. வைத்தியலிங்கமும் யதார்த்த எழுத்துக்கு எதிரானவர்களாக விளங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வம்சத்திலும் சம்பந்தன் மற்றைய இருவரிலிருந்தும் வேறுபடுகின்றார்.

தரமான சிறுகதைகளைப் படைத்து, இலங்கைச் சிறுகதைத்துறைக்கு வளம் சேர்ந்த சம்பந்தன், பிற்காலத்தில் சிறுகதைகள் எழுதுவதையே தவிர்த்துவிட்டார். அவை அமர இலக்கியங்கள் ஆகமாட்டா என்ற கருத்தைக் கொண்டவராக அவர் தம்மை ஒரு காவிய கர்த்தாவாக ஆக்கிக் கொண்டார். சாகுந்தல காவியம் அவரை அவ்வாறு காவியகர்த்தா ஆக்கியது. ஆயினும், சம்பந்தன் என்றதும் அவரது சிறுகதைகள்தான் வாசகரதும், விமர்சகரதும் நினைவுக்கு வரும். சிறுகதைகள் அமர இலக்கியங்களாகா என்று பிற்காலத்தில் கருதிய சம்பந்தனின் சிறுகதைகள் உண்மையில் அமர இலக்கியங்களாகவே விளங்குகின்றன.

கலாநிதி சூரை மனோகரன்
பழைய மாணவன்
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி

சிரிக்க . . .

நீதிபதி : நீங்க இந்தக் கொலையை நேரில பார்த்தீங்களா?
சாட்சி : இல்ல. சைட்ல நிண்டுதான் பார்த்தேன்.

ஒருவர் : என் மகன் காணாமல் போய் விட்டான் ஐயா.
பொலிஸ்: பையன் கறுப்பா, சிவப்பா?
ஒருவர் : பச்சைக் குழந்தை ஐயா.

பாபு : என்னப்பா, இந்த அறிக்கையைப் படிச்சாலே தலை சுத்துது.
கோபு : அது சுற்று அறிக்கை தானே?

ஆழி சூழ் உலகமெல்லாம்
வாழி நீ வித்தியா நீடு

அருள்விநாயகர்
மோட்டோஸ்



103, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வித்தியா வெற்றி நடைபோட்டு
வீறுடன் தொடர்ந்து வெளிவர
வாழ்த்துவோர்

மெலோடியஸ்
மியூசிக்

303 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

ராசாக்கள் மாளிகையும்
காணாத மஞ்சமடி
ரோஜாப் பூ எங்கள் நெஞ்சம்
ஜோராக வாழிய நீ வாழ்த்தும்

சுப்பஷோ
அன் வீடியோ

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

சீந்தில் இலைக்கொடியே
சீர் பூத்த வித்தியாவே
பாங்காக வாழி! ஆண்டு பல நூறு

சைக்கிள் உதிரி பாகங்கள், இறக்குமதி
பொருட்கள் மின்னியல் இணைப்பு
உபகரணங்கள் குறைந்த விலையில்
நிறைந்த தரத்தில் மொத்தம்

மனியம்

ஸ்ரோர்ஸ்

உரும்பிராய்ச் சந்தி

உரும்பிராய் இந்துவின்
வித்தியா சிறக்க வாழ்த்துவோர்

ரேடியோ, வீடியோ கசட்,
பாடசாலைப் பொதுட்கள்

மிதிவண்டி உதிரிப்பாகங்கள், பிலிம் ரோல்,
ஆகியன மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்

க. ச. பேரம்பலம்
சக நிறுவனம்

லோட்டஸ் மிதிவண்டி ரயர்,
ரியூப்கள், பெயின்ற்
விநியோகஸ்தர்கள்

T. P. – 021-2988 Fax-021-2368 50, 52 & 54 கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

ஹரி நாமம் மகத்துவம்
வித்தியா ஞானம் சிவத்துவம்

கிங்ஸ்ரன் எலக்ரோணிக்ஸ்



இல 37, மணிக்கூட்டு வீதி,
யாழ்நகர்

வேரோடி விழுதெறிந்து
மண்ணோடு வீண் தொட்ட
வித்தியாவை வாழ்த்தும்

விஜீதா வர்த்தக நிலையம்

பல்பொருள்
வாணிபத்தில் பலகாலம்
நிலைத்திருக்கும் ஒரே
ஸ்தாபனம்

பலாலி வீதி,
உருப்பிராய்ச் சந்தி

ஒளி படைத்த விழியினாள்
உறுதி கொண்ட நெஞ்சினாள்
கிளி படைத்த மொழியினாள்
கனிவு கொண்டாள் வித்தியா

கேக் ஐசிங் பொருட்கள் மற்றும்
பல்பொருள் வாணிபத்தில்
வெற்றிக் கொடி நாட்டி
குறைந்த விலையில்
நிறைந்த தரத்தில் வாரி வழங்கும்



மதுசன் வர்த்தக நிலையம்

பலாலி வீதி, உருப்பிராய்ச் சந்தி, உருப்பிராய்

எமது கல்லூரியின் பழைய தோற்றம்



புனரமைக்கப்பட்ட பின் கல்லூரியின் தோற்றம்







அதிபர் அறிக்கை

நல்லதோர் வீணை செய்தே – அதை
நலங் கெடப் புழுதியில் எறிவதுண்டோ
சொல்லடி சிவசக்தி – எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்
வல்லமை தாராயோ இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?

என்ற கவிதை வரகவி பாரதியால் எழுதப்பட்டதாகும். மாநிலம் பயனுற வாழ்ந்த, வாழுகின்ற சால்புடையோர் பலரை உருவாக்கிய, உருவாக்கிக் கொண்டிருக்கும் இக் கல்லூரியின் தற்போதைய செயற்பாடுகள் சிலவற்றை அறிய வைப்பதில் மகிழ்ச்சியடை கின்றேன், பெருமிதம் கொள்கின்றேன்.

எமது கல்லூரியின் செயற்பாடுகளை இரண்டு வகையில் அதாவது பௌதீக வள அபிவிருத்தியையும், கல்வி அபிவிருத்தியையும் ஒரே நேரத்தில் சமாந்தரமாகச் செயற் படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு எமக்கு இருந்தது. அதற்கான செயல்களில் நாங்கள் முனைப்புடன் செயற்பட்டோம்.

மைதான சுவர் நுழைவாயில்

உரும்பிராய் அரிமாக் கழகத்தின் உதவியுடனும் எமது கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றின் ஒத்தாசையுடனும் எல்லைச் சுவர்களும், நுழைவாயிலும் செப்பனிடப்பட்டு இல்ல மெய்வல்லுனர் போட்டி நடைபெற்ற 29.01.2000ம் அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. மைதானம் ஒரு கட்டுப்பாடான நிலைக் குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

மைதானத்தில் கிணறு

மைதானத்தில் கிணற்று வேலைகள் 1995ன் இடப்பெயர்வைத் தொடர்ந்து நடை பெறாமல் இருந்தது. மீண்டும் இப் பணி திரு. சிவலோகநாதன் (கனடா) வைத்திய கலாநிதி செ. இந்திரராசா ஆகியோரின் உதவியுடன் பூர்த்தி செய்யப்பட்டு இல்ல மெய்வல்லுனர் நாளில் (29.01.2000) அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

ஆனர்கள் சலகூடத் தொகுதி

G.T.Z நிறுவனத்தின் உதவியுடனும், யாழ் கல்வித் திணைக்களத்தின் ஆலோசனை யுடனும் பத்து (10) சலகூடத் தொகுதியும் மூன்று (03) மலகூடத் தொகுதியும் நவீன வசதிகளுடன் நீண்டகால நோக்குடன் மாபிள் பதிக்கப்பட்டு அழகுற உருவாக்கப்பட்டு 03.04.2000ல் கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவஞான சுந்தரத்தினால் திறந்து பாவனைக்கு விடப்பட்டது. மேலதிக செலவீனங்களை எமது பழைய மாணவர் சங்க மூலமும், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்க ளின் உதவியுடனும் நிறைவு செய்யப்பட்டன.

பெண்கள் சலகூடத் தொகுதி

மாணவிகளுக்கும் ஆசிரியைகளுக்கும் ஏழு (07) தொகுதிகளைக் கொண்ட சலகூடம் நீண்டகால நோக்கில் நவீன வசதிகளுடன் மாபின் பதித்து அழகுற அமைக்கப்பட்டுள்ளது. இதுவும் 03.04.2000ம் அன்று G.T.Z நிறுவன சமூக ஆற்றுப்படுத்துனர் திருமதி. பொன்மலர் இராசேஸ்வரன் அவர்களால் பாவனைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதுவும் G.T.Z நிறுவனம், பழைய மாணவர் சங்கம், பெற்றோர்கள் உதவியுடன் யாழ் கல்வித் திணைக்கள ஆலோசனைப்படி அமைக்கப்பட்டது.

120x20 மேற்கு மண்டப வகுப்பறைத் தொகுதி

1995 இடப்பெயர்வு, மோதல்களின் போது இக் கட்டடம் பாரிய சேதத்திற்கு உள்ளாகி இருந்தது. G.T.Z நிறுவன உதவியுடனும், கல்வித் திணைக்கள ஆலோசனைப்படியும் ஐந்து வகுப்பறைகளும் ஓர் அறையும் அமைக்கப்பட்டு 03.04.2000ம் அன்று யாழ் கல்வித் திணைக்களப் பொறியியலாளர் திரு. கு. சிவபாலன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

97x25 மாடிக் கட்டிடம்

பாதிக்கப்பட்ட இக் கட்டடம் G.T.Z நிறுவன உதவியுடனும் பழைய மாணவர் சங்கம், அயிவிருத்திச் சங்கம் என்பவற்றின் பங்களிப்புடனும் யாழ் கல்வித் திணைக்களப் பொறியியலாளர் மற்றும் G.T.Z நிறுவன உத்தியோகத்தர்களது வழிகாட்டலிலும் புனரமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் என்றுமில்லாத ஓர் அழகுடன் மிளிர்கின்றது.

மின் இணைப்பு

மாடிக் கட்டிடத் தொகுதிக்கும், பௌதீக ஆய்வு கூடம், தற்காலிக கணனி அறை என்பவற்றிற்கும்புதிய மின் இணைப்புக்கள் செய்யப்பட்டுள்ளது. இப்பணியை நிறைவேற்ற பழைய மாணவர்களான செல்வன் இ. ரகு, இ. சபாகரன் என்பவர்கள் உற்சாகமூட்டினர். அவர்களது முயற்சியால் 15,550/= ரூபா சேகரிக்கப்பட்டு பழைய மாணவர் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது. மீதித் தொகையைப் பழைய மாணவர் சங்கம் பங்கேற்றது.

குழாய் மூலம் நீர் வசதி

ஏற்கனவே நீர் இறைக்கும் இயந்திர மூலம் சில பகுதிகளுக்கு மட்டும் குடிநீர் விநியோகம் இருந்தது. திரு. சிவலோகநாதனது (கனடா) உதவியுடன் மோட்டர் ஒன்று பெறப்பட்டது. பழைய மாணவர் சங்க உதவியுடன் சகல பகுதிக்கும் குழாய் மூலம் நீர் விநியோகிக்கப்படுகின்றது.

முன்பக்க மதில்

இது மிகவும் பழமையாகவும், சேதமாகவும் இருந்தமையால் இது இடிக்கப்பட்டு மதில் புனரமைக்கப்பட்டு வர்ணமும், வேலைப்பாடுகளும் பொறிக்கப்பட்டு அழகாகக் காட்சி தருகின்றது.

தேனீர்ச்சாலை

கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள் தமது சிற்றுண்டி மற்றும் எழுதுகருவிகள் போன்றவற்றுக்கான தேவையை நிவர்த்தி செய்யும் முகமாக புதிய தேனீர்ச்சாலை ஒன்று அமைக்கப்பட்டு இது 05.07.2000 அன்று கல்லூரி அதிபரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புதிய கவின் கலைக்கூடம்

பெண்களது மைதானத்தின் மேற்குப் புறமாக 80'x20' நீளமான புதிய கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. அம் மண்டப வேலை பூர்த்தியடையும் நிலையை அண்மித்துள்ளது.

கலையரங்கம்

கல்லூரிக்கு ஒரு கலையரங்கம் மிகவும் அவசியம். ஏற்கனவே உள்ள கலையரங்கு மிகவும் பழமையானது. அது நவீன மயப்படுத்தப்பட்டு சகல வசதிகளுடனும் உருவாக்கப் பட வேண்டிய தேவை உள்ளது. இப் பணியை நிறைவு செய்ய சகல தரப்பினரும் ஒத்து ழைப்பு நல்க வேண்டுமென அன்பாக வேண்டுகின்றேன்.

கல்வி அபிவிருத்தி இணைப்பாடவிதான செயற்பாடுகளைப் பொறுத்தவரை அவற்றி லும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் கிடைத்துள்ளன. க.பொ.த (உயர்தரம்) கலைப் பிரிவில் இரண்டு மாணவிகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் 8ம், 9ம் இடங்களைப் பெற்றுள் ளனர். 21 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 18 மாணவர்கள் சித்தியைப் பெற்றுள்ளனர். க.பொ.த (சாதாரணம்) 100 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 33 மாணவர்கள் சித்தி யடைந்துள்ளனர். மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை அதிகரித்திருப்பது உற் சாகம் ஊட்டுகின்றது. மென்மேலும் இவை அதிகரித்து கல்லூரி சிறப்புற கற்பகவிநாயகரை இறைஞ்சுகின்றேன்.

இணைப்பாடவிதான செயற்பாடுகள் யாவற்றிலும் பங்குகொள்ளும் மாணவர்கள், கோட்ட வலய மட்டங்களில் பல சான்றிதழ்களைப் பெற்று பெருமை தேடியுள்ளனர். 1999ல் உடற்பயிற்சிப் போட்டியில் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு வலயங்களுக்கிடையான போட்டியில் 2ம் இடத்தைப் பெற்றிருந்தோம். மென்பந்துப் போட்டியில் கோட்டத்தில் முதல் இடம் பெற்று வலயப் போட்டிகளிலும் பங்குபற்றியிருந்தோம். உதைபந்தாட்டத்திலும் பல வெற்றிகளைப் பெற்று வலய மட்ட போட்டி வரை பங்குபற்றியுள்ளோம். சித்திரப் போட்டி களில் தமிழ்க் கட்டுரைப் போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றி அகில இலங்கை ரீதியான சில வெற்றிகளையும் பெற்றுள்ளமை குறிப்பிட்டு பாராட்டக்கூடியவை.

திரு. பொன்னம்பலம் ஆசிரியர் ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்

கனடா வாழ் பழைய மாணவர் திரு.சின்னராசா அவர்களால் தமது ஆசானான காலம் சென்ற பொன்னம்பலம் ஆசிரியர் ஞாபகார்த்தமாக எமது கல்லூரியில் க.பொ.த (சாதாரண) தரத்தில் சிறப்பான பெறுபேற்றைப் பெற்று எமது கல்லூரியிலேயே உயர்தர வகுப்பைக் கற்கும் மாணவர்கள் பத்துப் பேருக்கு மாதம் 250/= ரூபா வீதம் அவர்களது கல்விச் செலவிற்காக வழங்கப்படுகின்றது. இப் புலமைப் பரிசிலை உருவாக்க பலவழிகளிலும் உதவிய கனடா பழைய மாணவர் சங்கத்தினருக்கு எமது நன்றியும் பாராட்டுதல்களும். அத்துடன் கனடா வாழ் பழைய மாணவர் சங்கம் மூலம் ஒரு போட்டோப் பிரதி இயந்திர மும், ஒரு கணனியும் கொள்வனவு செய்ய பழைய மாணவர் சங்க வங்கிக் கணக்கிற்கு பணம் அனுப்பியுள்ளனர். நாட்டு நிலைமை சீரின்மையால் இவை இன்னும் கொள்வனவு செய்யப்படவில்லை.

லண்டன் நகரில் வாழும் பழைய மாணவர்கள் சங்கத்தைப் புனரமைத்து கல்லூரி யின் தேவைகளை நிறைவு செய்ய உதவுவதாக கடிதம் அனுப்பியுள்ளனர். அவர்கள் உதவி எதிர்பார்க்கப்படுகின்றது. Dr. சிறிரங்கநாதன் எனும் பழைய மாணவர் கொழும்பு இலங்கை வங்கியில் ஒரு இலட்ச ரூபாவை வைப்பிலிட்டு அதன் வட்டியை ஒவ்வொரு வருடமும் பெற்று மருத்துவத்துறையில் சிறந்த மாணவர்க்கு வழங்குமாறு வேண்டியுள்ளார். இவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

பரிசளிப்பு விழா நிலையான வைப்பு

உரும்பிராய் கிராமிய வங்கியில் பரிசளிப்பு விழா நிலையான வைப்பு நம்பிக்கை நிதிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வருடந்தோறும் இந் நம்பிக்கை நிதியின் வட்டி பரிசளிப்பு விழாவிற்காகப் பயன்படுத்தப்படும். இந் நிதியில் தற்போது (27000/=) இருபத்தி ஏழாயிரம் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது. இந் நிதி மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். இந் நிதிக்கு உதவ விரும்புபவர்களை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

இந் நிதிக்குப் பங்களிப்புச் செய்தவர்கள்

திரு. பொ. குணசிங்கம்	5000 ரூபா
திரு திருமதி கமலா சத்தியானந்தன்	5000 ரூபா
திருமதி. புவனேஸ்வரி கனகரத்தினம்	15000 ரூபா
திரு. தே. தியாகராசா (கனடா)	2000 ரூபா

கல்லூரியின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர் சங்கமும் பெரிதும் உதவி வருகின்றன. அவர்களின் கை வலுப்படுத்தப் பட வேண்டும். மேலும் பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், தாமாக அங்கத் தவர்களாக இணைய முன்வர வேண்டும். இது எமது வீடு, இது எமது கோயில் என்பது போல இது எமது கல்லூரி என்னும் பற்று உருவாக்கப்பட வேண்டும். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பதற்கு அமைய எல்லோரும் ஒன்றுபட்டுக் கல்லூரியை மேலும் வளர்ப் போமாக.

இவ் வருட ஆரம்பத்தில் 502 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவற்றில் ஆண் கள் 256, பெண்கள் 246 ஆவர். உயர்தர வகுப்புக்களில் கணிதம், விஞ்ஞானம், வர்த்த கம், கலைப் பிரிவுகளில் மொத்தம் 84 பேர் கல்வி பயில்கின்றனர். அண்மையில் ஏற்பட்ட இடப்பெயர்வால் மேலும் 183 மாணவர்கள் எமது கல்லூரியில் தற்காலிகமாக இணைந்துள் ளனர். இணைந்தவர்களில் சிலர் மீண்டும் தமது சொந்தப் பாடசாலைக்கு சென்றுள்ளனர்.

இடர்பாடான சூழல் இருந்தபோதும் எமது கல்லூரியின் அபிவிருத்திக்கு G.T.Z நிறுவனமும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர் சங்கமும், கனடா வாழ் பழைய மாணவர் சங்கமும் இணைந்து சுமார் பதினைந்து இலட்சம் ரூபா வரையி லான வேலைகளைப் பூர்த்தி செய்துள்ளன. அத்துடன் பாடசாலையின் தளபாடத் தேவையை அவதானித்து தளபாடங்களுக்கென G.T.Z நிறுவனம் மூன்று இலட்சத்து எண்பத்தி ஐயாயிரத்து தொளாயிரத்து ஐம்பது (3,85950.00) ரூபாவை ஒதுக்கியுள்ளது. கல்லூரியின் வளர்ச்சியில் கருணை காட்டிய, காட்டும் அனைவருக்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றிகளையும் கூறி இவ் அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

- நன்றி -

அதிபர்

யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி

நாம் நவிலும் நன்றிகள்

எம் சிறார்களிற்கு அறிவொளியூட்டும் எம் கல்லூரித் தாயின் கவிஞரு மலராம் வித்தியா நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் உங்கள் கரங்களில் அழகு மலராகக் தவழ்கிறாள். இவள் இத்தகையதோர் பெரிய அழகு மலராக மலர்வாள் என எம்மில் எவரும் எதிர்பார்க்கவில்லை.

இந்த முத்தாய்ப்பு மலராக இவளை மலர வைக்க உதவியவர்களான ஆக்கங்கள் தந்த துறை சார்ந்த பெரியோர்கள், ஆசிரியர்கள், எம் மாணவச் செல்வங்கள், அவர்களை வழிநடத்திய ஆசிரியப் பெருமக்கள், எம் அன்பிற் கினிய விளம்பரதாரர்கள் ஆகியோருக்கும்,

மேலும், எமது மலருக்கு ஆசிபுரை வழங்கிய கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவஞானசுந்தரம் அவர்களுக்கும், வலி கிழக்கு பிரதேசசபைச் செயலர் திரு. க. கேதீஸ்வரன் அவர்களுக்கும் பல வழிகளிலும் ஒத்துழைத்த பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர், முதற்பிரதி, சிறப்புப்பிரதிகள் பெற்றோர், அழகுற அச்சேற்றி உதவிய அச்சகத்தினர், எமது மலர்க் குழுவினர், மற்றும் ஊழியர்கள் அனை வர்க்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றிகளை நவின்று மகிழ்கிறோம்.

வாழ்க! வளர்க!

அன்புடன்
அதிபர்
மலர்க் குழுவினர்

அமுதனைய வித்தியாவே
ஆல்போல் தழைத்து அறுகு போல்
வேருன்றி வாழ்க

கஜமுகன் ஹாட்வெயர்

சகலவிதமான பெயின்ற் வகைகள்,
இரும்பு கட்டிடப் பொருட்கள், மற்றும்
மின்சார உபகரணங்கள் ஆகியவற்றிற்கு
நாட வேண்டிய இடம்

147, 149 ஸ்ராண்லி வீதி,
யாழ்ப்பாணம்
T.P - 021- 2833

க ❖ தா ❖ வே

எமது கல்லூரியின் சஞ்சிகை
வித்தியா - 2000 வெளிவர
உளம் கனிந்த வாழ்த்துக்கள்

க. தா. வே. சண்முகநாதன்
தங்கவேல் மாளிகை
வரணி வேலுப்பிள்ளை வீடு
உரும்பிராய்
T.P கேபிள் 021-2559

நதி போல் நடந்து மலை போல் உயர்ந்து
மலர் மனதுள் வித்தியா வாழி

செல்வராசா ரவிக்குமார்

சகலவிதமான
தானிய வகைகளையும்
மினகாய் சரக்கு
போன்றவற்றையும்
மிகச் சிறந்த முறையில்
அரைத்துக் கொள்ள

அரைக்கும் ஆலை

கற்பகப் பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு
உரும்பிராய்

எழுந்து நில், தைரியமாக இரு. வலிமையுடன் இரு. பொறுப்பு முழுவதையும் உன் தோள் மீதே சுமந்து கொள். உனது விதியைப் படைப்பவன் நீயே என்பதைப் புரிந்து கொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன.

— சுவாமி விவேகானந்தர் —

Always Contact

UMAPATHY COMMUNICATIONS

[Appu master's]

Reasonable Rate

Urumpirai; SriLanka.

T.Phone 0094 – 21 – 2424

Fax 0094 – 21 – 2424

For

Prompt and courteous service

quick delivery of your messages

- இரவு பகல் சேவை
- தங்குமிட வசதி இலவசம்
- வீட்டில் தகவல் தருவதற்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது

உள்நாட்டு இலக்கம் (Fax, T.P)

070—212285

070—212385

வெளிநாட்டு இலக்கம் (Fax, T.P)

0094—70212285

0094—70212385

வரதன்ஸ் சர்வதேச தொலைத் தொடர்பு நிலையம்

பலாலி வீதி புன்னாலைக் கட்டுவன்

சகலவிதமான பற்றரிகளும் உடனுக்குடன் சார்ச் செய்து கொடுக்கப்படும்.

உரிமையாளர்
மு. வரதராசன்

வரதன் சேவிஸ் ஸ்ரேசன்

பலாலி வீதி புன்னாலைக் கட்டுவன்

வரதன் பாம்ஸ்

மயிலங்காடு றோட், புன்னாலைக் கட்டுவன்

வித்தியா சிறக்க வாழ்த்துகின்றோம்

உங்கள் அன்புக்குரிய சிறுவர்களின்
ஆனந்தப் புன்னகைக்கு
நாம் நம்பிக்கை ஊட்டுவோம்

இலங்கை வங்கி

புதிய நூற்றாண்டின் - தேசத்தின் ஒளி விளக்கு

ரண் கெகுளு மிலேனியம்

ரண் கெகுளு மிலேனியம் ப்ளஸ் சிறுவர் சேமிப்புக் கணக்கு ரூபா ஐந்து லட்சம் வரையிலான இலவசக் காப்புறுதி நலனை கணக்கு வைத்திருக்கும் பிள்ளைக்கு வழங்குகின்றது.

காப்புறுதியை பெறுவதற்கு குறைந்த பட்சம் ரூபா 2500/= கணக்கின் நிலுவையாக இருத்தல் வேண்டும்.

- ரண் கெகுளு மிலேனியம் ப்ளஸ் - சேமிப்புக் கணக்கிற்கு ஆக் உயர்ந்த வட்டியினைப் பெற்றுத் தரும். (சாதாரண சேமிப்பு கணக்குகளுக்கான விகிதத்தை விட 1% கூடிய வட்டி
- ரண் கெகுளு மிலேனியம் ப்ளஸ் - ரண் கெகுளு வாசனா சீட்டிழுப்பிற்கு தகமையைப் பெற்றுத் தரும்
- ரண் கெகுளு மிலேனியம் ப்ளஸ் - உங்கள் முதலீட்டிற்கு முழுமையான பாதுகாப்பை அளிக்கும்

தற்போது நடைமுறையிலிருக்கும் ரண் கெகுளு சேமிப்புக் கணக்குகள்
2000ஆம் ஆண்டு ஜனவரி 1ம் திகதியிலிருந்து
ரண் கெகுளு மிலேனியம் ப்ளஸ் கணக்குகளாக மாற்றப்படும்.

மேலதிக விபரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள
இலங்கை வங்கிக் கிளையை நாடுங்கள்

Printed at St. Joseph's Catholic Press, Jaffna.